ஆகஸ்ட் 1956 சென்னை விலை 6 அணு



உங்களின் நெடுநாள் விருப்பத்தை நிறைவேற்ற

பரீதா

ஜாவா பத்தை கைலிகள்

கண்கவர் வர்ண கலர்களில்
இப்பொழுது கிடைக்கிறது

பரீதா ஜாவாபத்தை பேப்ரிக்,
சங்கரம்பந்தல் (தஞ்சை ஜில்லா)

பொருளடக்கம்

அன்பும் இன்பமும் அறிவும் ஆற்றலும்
பண்பும் புகழும் இனிது விளங்க முரசு முழங்கவே!

மலர் 9	சென்னை, ஆகஸ்ட்-1956 ஹிஜ்ரீ 1375, —துல் ஹஜ்	இதழ் 2

வீரர் வீசிய வெடி குண்டு!		தலையங்கம்	... 3
புதியதும் பழையதும்			... 5
முரசொலி			... 8
அட்டைப்பட விளக்கம்			... 9
கீமியா-யெ ஸஆதத்		அ. அப்துர் ரஹீம்	... 12
புது வாழ்வு	(தொடர் கதை)	'எஸ்கேஜி'	... 17
நான் அறிந்த இஸ்லாம்		எஸ், சுந்தரமூர்த்தி	... 25
புலவருள்ளம்		பெ. கு. ஸரப்பன்	... 33
புல்லாங்குழல் மோகினி	(சிறு கதை)	"மஹதி"	... 36
புதிய நாணய முறை		எஸ். கே ஜி. அப்துல் காதர்	... 43
மேலை நாடுகளுக்கு அப்துல் நாஸிரின் அறைகூவல்			... 49
என்னை மறந்தீரோ!	கவிதை-	இபு. அலகார்	... 54
ஜஹான்—ஆரா பேகம்		எஸ். எஸ். அப்துல்லா, பீ. ஏ.,	... 56
கேள்வி—பதில்		"கமால்"	... 62

முஸ்லிம் முரசில் வரும் கதைகளும் அவைகளிலுள்ள பெயர்களும் யாரையும் குறிப்பிடுவனவல்ல; எல்லாம் கற்பனை!

சந்தாவுக்கு எழுதும் பாரம்

இந்த பாரத்தைப் பூர்த்தி செய்து, கத்தரித்து, இதன் வலது பக்கத்திலுள்ள விலாசத்துக்கு அனுப்பிவைத்தால் உங்களுக்குத் தவறுமல் முஸ்லிம் முரசு கிடைக்கும்.

மானேஜர்,
முஸ்லிம் முரசு
18, ராமசாமி தெரு,
சென்னை-1.

நான் இன்று ஒரு வருட சந்தா ரூ. 4—8—0 (அயல் நாடு ஒரு வருடம் ரூ. 6. இரண்டு வருடம் ரூ. 11) மணி ஆர்டரில், அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியிருக்கின்றேன்.

பெயர்...

விலாசம்...

வீரர் வீசிய வெடிகுண்டு!

மத்தியக் கிழக்கில் சென்ற வாரம் எகிப்தின் அதிபரான கர்னல் நாஸிர் செய்த காரியம் மேற்கு வல்லரசுகளையெல்லாம் கதிகலங்கச் செய்திருக்கிறது. அமெரிக்கா, ரஷ்யா ஆகிய மிகப்பெரிய வல்லரசுகளிடம்தான் உலகமே அதிரச்செய்யும் அணுக்குண்டுகள் இருக்கின்றனவென்று நினைத்திருந்தோம். ஆனால் அந்தப் பெரிய வல்லரசுகளிடமுள்ள அணுக்குண்டுகளைக் காட்டிலும் அதிக வேகமுள்ள வெடிகுண்டு ஒன்றை மேற்கு வல்லரசுகளின்மீது வீசியிருக்கிறார் வீரர் நாஸிர்.

ரஷ்யாவிடம் இருப்பதாகச் சொல்லப்படும் அணுக்குண்டுகள்கூட பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசாங்கங்களை அவ்வளவு தூரம் அதிரச் செய்திருக்க முடியாது.

எகிப்தியத் தலைவர் எறிந்த வெடிகுண்டு, மாபெரும் அமெரிக்க அரசாங்க அதிபர்களையும் அதிர்ச்சியடையச் செய்திருக்கிறது. "நாஸிரின் நடவடிக்கை நமக்குக் கவலையளிக்கிறது" என்று அமெரிக்க அந்நிய நாட்டு அமைச்சர் கூறுகிறார். பிரிட்டிஷ் பிரெஞ்சு அரசாங்க அதிபர்கள் யாது செய்வதென்று புரியாமல் கைகளைப் பிசைந்து கொள்ளுகின்றனர்; பற்களை நறநறவென்று கடித்துக் கொள்ளுகின்றனர். தங்களுக்கு அமெரிக்காவின் ஆதரவு கிடைக்காதாவென்று ஆவலுடன் ஆகாயத்தை நோக்குகின்றனர். கர்னல் நாஸிரின் மின்னல் தாக்குதலினால் மேற்கு வல்லரசுகளின் மூளைகள் மிகவும் குழப்பமடைந்திருப்பதைக் காண்கிறோம்.

ஏன் இந்தக் குழப்பமும் கவலையும்?

கர்னல் நாஸிர்

வாக்குத் தவறியதால் விளைந்த விபரீதந்தான் இது.

எகிப்து நாட்டின் எதிர்கால வளவாழ்வுக்குத் துணை செய்யக்கூடிய அஸ்வான் அணையைக் கட்டிமுடிப்பதற்காகப் பெருந்தொகையொன்றைக் கடன் கொடுப்பதாய் உலக பாங்கி எகிப்துக்கு வாக்குறுதியளித்திருந்தது. அமெரிக்காவும் பிரிட்டனும்கூட

அஸ்வான் அணையைக் கட்டுவதற்காகப் பணவுதவி செய்வதாய் வாக்களித்திருந்தன. இதற்கிடையில் எகிப்தின் அந்நிய நாட்டுக் கொள்கையில் அதிருப்தியடைந்த அமெரிக்காவும் பிரிட்டனும் அஸ்வான் அணைக்கட்டுக்குப் பணவுதவி அளிக்க முடியாதென்று மறுத்துவிட்டதால், உலக பாங்கியும் தன் கையை விரித்து விட்டது. இச்செய்தியைக் கேட்டவுடன் ஆத்திரமடைந்த அப்துல் நாஸிர் "இதற்கு வியாழக் கிழமையன்று பதிலளிக்கிறேன்" என்று கூறினார். வியாழக் கிழமையை உலகம் ஆவலுடன் எதிர் பார்த்தது. மேற்கு வல்லரசுகளும் தங்கள் எதிரியின் பதில் நடவடிக்கையைப் பெருங் கவலையுடன் எதிர் நோக்கியிருந்தன. குறித்த நேரம் வந்தது. வீரரும் பேசினார் :

"சூயெஸ் கால்வாய்க் கம்பெனியை இன்று முதல் நம் நாட்டின் உடைமையாக்கிவிட்டோம். இதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அஸ்வான் அணையை அமைப்போம், சூயெஸ் கால்வாய்க் கம்பெனியின் பங்குதாரர்களுக்கு நஷ்ட ஈடுத் தொகையை கொடுத்து விடுவோம். அஸ்வான் அணையைக் கட்டுவதற்காக நமக்கு அன்னியர் உதவி அவசியமில்லை. சூயெஸ் கால்வாய்க் கம்பெனியின் வருமானத்தைக்கொண்டே மிக விரைவில் அந்த அணையைக் கட்டி முடிப்போம்"

வல்லரசுகளின் வாக்கு மீறிய செயலுக்கும், உலக பாங்கியின் கைவிரிப்புக்கும் எகிப்து நாட்டின் அதிபர் அளித்த பதில் இதுதான். இதைக்கேட்டவுடன் பிரிட்டிஷ் பிரெஞ்சு அரசாங்க அதிபர்களின் நாடி நரம்புகளெல்லாம் துடித்தன. முகங்கள் சிவந்து விட்டன "இது என்ன அநியாயம், அக்கிரமம்" என்று அவர்கள் அலறுகின்றனர். எதிர் நடவடிக்கை எடுக்கப்போவதாக பயமுறுத்துகின்றனர்! ஆனால் "எகிப்து எதற்கும் தயாராகவே இருக்கிறது" என்று அந்த நாட்டின் அரசாங்க அதிபர்கள் அறை கூவுகின்றனர்.

எந்த சர்வதேச சட்டப்படி பார்த்தாலும் சூயெஸ் கால்வாய் எகிப்து நாட்டுக்கே சொந்தமானது என்பதில் சந்தேகமில்லை. அந்தக் கால்வாய் எகிப்தின் எல்லைக்குள்ளேதான் இருக்கிறது. எனவே சூயெஸ் கால்வாய்க் கம்பெனியை எகிப்து அரசாங்கம் தனது உடைமையாக்கிக் கொண்டது முற்றும் நியாயமே என்று உலகம் ஒப்புக் கொள்ளுவதில வியப்பில்லை. ஆனால் பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசாங்க அதிபர்கள் மட்டும் இதனை அநியாயமென்றும் ஆக்கிரமிப்பு என்றும் கூறுகின்றனர். ஆனால் அவர்களின் கூற்றுக்கு இந்த உலகத்தில் செல்வாக்கு இல்லை! எகிப்தின் "அநியாய" நடவடிக்கையால் அகில உலகிலும் அமைதி குலையப்போகிறது என்று மேலை நாடுகள் கிளப்பும் கூக்குரலுக்கும் இவ்வுலகில் யாரும் செவி சாய்ப்பதாய்த் தெரியவில்லை.

இந்த நிலைமைக்கு மூலகாரணம் யார் என்பதை உலகம் நன்கு அறிந்திருப்பதால் எகிப்துக்கு ஆதரவான கருத்தே எங்கும் எதிரொலிக்கின்றது.

"நிபந்தனையில்லாத உதவி புரிய நீங்கள் மறுத்தீர்கள். அதனால் கர்னல் நாஸிர் தமது நாட்டின் வளவாழ்விற்காக வேறு வழியைத் தேடவேண்டியதாயிற்று" என்று ராஜாஜி கூறுகிறார்.

நாஸிர் தமது நாட்டின் அஸ்வான் அணையைக் கட்டுவதற்காக நிபந்தனையற்ற பணவுதவி கோரினார். அவ்வித உதவி செய்ய பிரிட்டனுக்கு விருப்பமில்லை. இதனால் அமெரிக்காவும் தனது உதவியை மறுத்துவிட்டது. பிரிட்டனும் அமெரிக்காவும் உதவி செய்ய மறுத்துவிட்டதால் உலக பாங்கியும் நிபந்தனையற்ற உதவி புரிய முடியாதென்று கூறிவிட்டது.

எனவே, எகிப்துக்கு வேறுவழி யில்லை. ரஷ்யா போன்ற பெரிய வல்லரசின் உதவியைப் பெறவும் அதற்கு விருப்பமில்லை. ஆதலால் எகிப்து நாட்டிலுள்ள சூயெஸ் கால்வாய்க் கம்பெனியைத் தமது நாட்டின் உடைமையாக்கிக் கொண்டார் அதிபர் நாஸிர். எகிப்தைப் பொறுத்தவரையில் இது ஒரு சாதாரணவிஷயம் தான். சட்டப்படி நியாயமான காரியத்தையே நாஸிர் செய்திருக்கிருர். ஆனல் கடந்த நூருண்டு காலமாக சூயெஸ் கால்வாயை நிர்வகித்துக் கொண்டு, அதன் இலாபத்தையும் அடைந்துவந்த பிரிட்டிஷ் பிரெஞ்சுக்காரர்களுக்கு எகிப்திய அதிபரின் செயல் ஆத்திரத்தையுண்டாக்கி விட்டது. சர்வதேசக் கப்பல் போக்குவரத்துக்கு அபாயம் ஏற்பட்டுவிட்டதாக ஆர்பாட்டம் செய்கின்றனர். மூவரசு மாநாடு கூடுகின்றனர். சூயெஸ் கால்வாயை சர்வதேச உடைமையாக்க வேண்டுமென்று யோசனை கூறுகின்றனர். இந்த யோசனையை அமல் நடத்துவதற்காக இம் மாதம் 16ந் தேதியன்று 24 நாடுகள் அடங்கிய மாநாடு ஒன்று லண்டனில் கூட்டுவதென்று அமெரிக்க, பிரிட்டிஷ் பிரெஞ்சு அரசாங்க அமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், பிரிட்டிஷ் பிரெஞ்சு அரசாங்க அதிபர்கள் அணுவலைமயாக்கி, அமெரிக்காவையும் உதவிக்கு அழைத்துக்கொண்டு உலகத்தையே படுநாசத்துக்கு இலக்காக்கி விடுவார்களோ என்று அஞ்ச வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. எகிப்திலுள்ள பிரிட்டிஷ், பிரெஞ்சு மக்கள் அனைவரும் உடனே அங்கிருந்து வெளியேறி விடவேண்டுமென்று பிரிட்டிஷ் பிரெஞ்சு அரசாங்கங்கள் அறிவித்திருக்கின்றன. இதே சமயத்தில் மத்திய தரைப் பிராந்தியத்துக்கு பிரிட்டிஷ் படைகள் விரைந்து கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. "உடனே செயலாற்றப் புறப்படுக!" என்று பிரிட்டிஷ் ரிஸர்வ் படைகளுக்கு எலிஸபெத் ராணியார் உத்தரவு அளித்து விட்டார் என்ற செய்தியும் கிடைத்துள்ளது! இச்செய்திகளெல்லாம எகிப்தைப் பணிய வைத்து விடுமென்று நாம் நினைக்கவில்லை.

சூயெஸ் கால்வாயை சர்வதேச ஆதிக்கத்துக்கு உட்படுத்துவதைத் தவிர வேறு எந்த முடிவுக்கும் பிரிட்டன் இணங்க முடியாதென்று பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் கூறுகின்றார். ஈடனின் கூற்றுக்கு அமெரிக்காவும் ஒத்து ஊதுவதாகத் தெரிகிறது. ஈடன் கூறுவது நியாயமென்று அமெரிக்க அரசாங்கம் நினைக்குமாயின், "பனமா கால்வாயை சர்வதேசப் பொதுவுடைமையாக்க அது இணங்குமா?" என்றுதான் எகிப்தியர் கேட்பார்கள்!

சூயெஸ் கால்வாய்க் கம்பெனியை எகிப்தின் அதிபர் தமது நாட்டின் உடைமையாக்கிக் கொண்டாரேயன்றி, மேற்படி கால்வாயின் வழியாகப் போவதற்கு எந்த நாட்டுக் கப்பலுக்கும் தடை விதிக்கப் போவதில்லை என்று கர்னல் நாஸிரே கூறியிருக்கின்றார். ஆனல் "நாஸிரின் வார்த்தைகளை நாம் நம்ப முடியாது. இதற்குமுன் பலமுறை நாஸிர் தமது வாக்குறுதிகளை மீறியிருக்கின்ருர்" என்று ஈடன் கூறுகிருர். அஸ்வான் அணைக்காகப் பணவுதவி தருகிறோம் என்று முதலில் கூறிவிட்டுப் பின்னர் கைவிரித்துவிட்ட ஈடனை மட்டும் எகிப்தியர் எப்படி நம்புவார்கள்?

ஈடன் போன்ற அரசியல் வாதிகள் இந்த உலகத்தை மீண்டும் ஒரு போர்க்களமாக்கிப் படுநாசத்தில் ஆழ்த்திவிடப் பார்க்கின்றனர். இவர்களுக்கு அமெரிக்காவும் ஆதரவாக நிற்பதால் எகிப்தைப் பணிய வைத்துவிட முடியாது, உலகம்தான் படுநாசத்துக்கு இலக்காக நேரிடும் என்பதை அமெரிக்க அரசியல் வாதிகள் அறிந்து கொள்ள வேண்டும்.

அன்புள்ள ஆசிரியருக்கு

'முஸ்லிம் முரசு'க்குப் பத்தாம் ஆண்டு விழா நிகழவிருப்பதை முன்னிட்டு, நான் முஸ்லிம் முர'சின் ஆயுட் சந்தாதாராகச் சேர விரும்பி அதற்குரிய தொகை (ரு. 100)யும் அனுப்பி வைத்திருக்கிறேன். முரசின் பத்தாம் ஆண்டு விழாவை மிகச் சிறப்பாய்க் கொண்டாட வேண்டுமென்பது என் விருப்பம். மேற்படி விழாவை முன்னிட்டு மிகப் பெரிய அளவிலும், அதிக விலையிலும் "முஸ்லிம் முரசு" பத்தாம் ஆண்டு மலர் ஒன்று வெளியிடுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். தங்கள் முயற்சிக்கு வாசக நேயர்களின் நல்லா

தரவு நிச்சயமாக இருக்குமென் பதில் ஐயமில்லை. வாழ்க இஸ்லாம்! வளர்க முஸ்லிம் முரசு!

இங்ஙனம்,

எம். என். சய்யத் இப்ராஹீம்,

மதராஸ்–பர்மா டிம்பர் டிரேடிங் கம்பெனி

ரங்கூன்.

卐

முஸ்லிம் சமூகத்திற்கு முஸ்லிம் முரசு செய்து வரும் சேவையைக் கண்டு இங்குள்ள அனைவரும் மன மகிழ்ச்சி அடைவதோடு இன்றைய இந்திய முஸ்லிம்களின் நிலைமைக்கு இத்தகைய ஒரு முஸ்லிம் பத்திரிகை மிகமிக அவசியம் என்பதையும் அறிகிறோம்.

பி. ஷேக் அமீர் சாயபு,

பல்லடம்.

ஜூன் மாத இதழில் "இக்பால் கவிதையின்பம்" என்னைப் பரவசப் படுத்தியது.

ஏ. ஷேக் அப்துல் காதர்,

விழுப்புரம்.

ஜூலை இதழ்

தமிழில் பிறமொழிச் சொற்கள் என்னும் கட்டுரை நன்கு ஆராய்ச்சி செய்து எழுதப்பட்டிருக்கிறது.

இ. செ. ஜலாலுதீன், திருமங்கலம்.

ஹஸன் தமது "கவிஞர் கண்ட கார்டோவா" என்னும் கட்டுரையில், "கார்டோவா" என்னும் பண்டைய இஸ்லாமிய நகரைப் பற்றி நன்றாகத் தீட்டியுள்ளார்.

எம். ஏ. எம். நூஹுல்லா.

கபூரிய்யா, மஹறகம, சிலோன்.

ஜூலை மாத இதழைக் கண்டு மகிழ்ந்தேன். அதுவும் ஒன்பதாவது ஆண்டு விழா கொண்டாடியதைக் கண்டு உவகை கொண்டேன். ஏனெனில் நான் சிறியவனாக இருக்கும் போதே முரசில் விருப்பம் கொண்டவன்.

யூனுஸ், மதுரை.

"தீர்ப்பும் நியாயமும்" என்ற சிறுகதை மனதை உருக்கும் சம்பவங்கள் நிறைந்துள்ளதாக இருக்கின்றது.

எஸ். அஹ்மது தம்பி,

கொள்ளிடம்.

"ஈத் மலர்" கண்டேன். தமிழறிந்த என்னைப்போன்ற முஸ்லிம் அன்பர்கள் அனைவர்களுக்கும் உள்ளக் களிப்பு ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

சி. கா. உ. அப்துல் கரீம்,

வலங்கைமான்.

புதியதும் பழையதும்

பத்திரிகைகள் புத்தகங்கள் படிக்கும் பழக்கம் உங்களிடமிருந்தால் இதிலுள்ள 15 கேள்விகளுக்கும் சரியான பதில் கூறிவிடலாம். பத்திரிகைகள் புத்தகங்கள் படிக்கும்போது ஆசிரியர் குறித்துவைத்த செய்திகளே இதில் உள்ளன. இதிலுள்ள 10 கேள்விகளுக்கு மட்டுமாவது சரியான விடை எழுத முடியுமானால் பத்திரிகை, புத்தகம் படிக்கும் நல்ல பழக்கம் உங்களிடம உண்டு என்று அர்த்தம். விடையின் பக்கத்தைப் பார்க்காமல் உங்கள் பதில்களை முதலில் எழுதுங்கள்.

1. உலக நாடுகள் எத்தனை ?

2. அவற்றுள் எத்தனை நாடுகளில் தசாம்ச நாணய முறை இருந்து வருகிறது ?

3. ஜனாதிபதி குற்றம் செய்தால் அவரைக் குற்றவாளிக் கூட்டில் நிறுத்தி விசாரித்து தண்டனை விதிக்கும் உரிமை அந்த நாட்டின் மிகப் பெரிய நீதி மன்றத்துக்கு உண்டு என்று உலகத்தில் ஒரேயொரு நாடு தான் முதன்முதலாக சட்டமியற்றியுள்ளது. இந்த நாட்டின் பெயர் என்ன?

4. எந்த நாட்டில் தினப்பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள் மிக அதிகமாய் வெளியாகின்றன ?

5. சூயெஸ் கால்வாயை எகிப்து அரசாங்கம் அடைத்துவிட்டால் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வரும் கப்பல்கள் எத்தனை மைல்கள் சுற்றிக்கொண்டு வரவேண்டியிருக்கும் ?

6. உலகத்திலேயே மிகப் பெரிய அளவில் தரைப் படைகளையுடைய நாடு எது ?

7. "பாக்கிஸ்தான் ஒரு சுதந்தரக் குடிஅரசு ஆனபிறகு அந்த நாட்டில் ஒருமுறை பொதுத் தேர்தல் நடந்திருக்கிறது" இது சரியா? தவறு ?

8. எகிப்து நாட்டுக்கு அரபியில் வழங்கும் பெயர் என்ன ?

9. சவூதி அரேபியாவின் தற்காலத் தலைநகர் எது ?

10. அரபு நாடுகளில் அதிகமாய் உற்பத்தியாகும் இரண்டு பொருள்கள் எவை ?

11. எகிப்தின் முக்கிய விளை பொருள்கள் இரண்டு. அவை என்ன?

12. மிகச் சிறுவயதில் இஸ்லாத்தைத் தழுவிய முதல் முஸ்லிம் யார் ?

13. பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் உறுப்பு நாடுகள் எத்தனை ?

14. உலக சமாதானத்தை விரும்புவதன் அறிகுறியாக ஒரு வல்லரசு நாடு தனது தரைப்படையில் 12 லட்சம் துருப்புக்களை குறைத்துக்கொண்டு விட்டது அந்த வல்லரசின் பெயர் என்ன ?

15. "ஐக்கிய நாடு மன்றத்தில் இப்பொழுது ஜப்பான் ஒரு உறுப்பு நாடல்ல" இக்கூற்று சரியா ? தவறு ?

(விடைகள் 9-ம் பக்கம் பார்க்க)

திலகர் நூற்றுண்டு விழா

“சுயராஜ்யம் எனது பிறப்புரிமை. அதை நான் பெற்றே தீருவேன்” என்று இந்தியாவில் முதன் முதலாக முழக்கம் செய்த லோகமான்ய பாலகங்காதர திலகரின் நூருவது ஆண்டு விழா இந்தியாவெங்கும் கடந்த ஜூலை 26-ந் தேதி யன்று கொண்டாடப் பெற்றது. பிற்காலத்திலே காந்திஜி நடத்திய சுதந்தரப் போராட்டத்திற்கு முன்னேடியாகவும் வழிகாட்டியாகவும் விளங்கியவர் பாலகங்காதர திலகர் என்று சொல்லலாம். சுயராஜ்யம் என்று கூறுவதே ராஜத் துரோகச் செயலுக்குச் சமம் என்று கருதப்பட்ட காலத்திலே “சுயராஜ்யம் எனது பிறப்புரிமை” என்று அழுத்தந் திருத்தமாக அறை கூவி அந்நிய அரசாங்கத்துடன் போருக்கு எழுந்தார் பாலகங்காதர திலகர். அவர் நாட்டுப் பொது மக்களின் சுதந்தர உணர்ச்சியை ஓரளவு தட்டி யெழுப்பிய பிறகுதான் காந்திஜி இந்த நாட்டின் சுதந்தரப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்த முன் வந்தார். காந்திஜியின் வேலை எளிதாக நடைபெறுவதற்கு மக்களின் மன நிலையைப் பக்குவப் படுத்தியவர் திலகர்தான் என்றுல் மிகையல்ல. சுயராஜ்யத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கே சிறிதும் தகுதியற்ற சூழ்நிலையில், அதைப்பற்றி வெளிப்படையாகப் பேசவும், அதை அடைவதற்குரிய வேலைகளில் பகிரங்கமாக ஈடுபடவும் துணிந்தவர் திலகர் என்றுல் அவருடைய தைரியமும் தன்னம்பிக்கையும் எவ்வளவு அதிகமாயிருந்தனவென்பதை நாம் அறியலாம். “சுயராஜ்யம் எனது பிறப்புரிமை” என்று கூறியதற்காக திலகர் 1908-ல் ஆறுவருட தீவாந்திர தண்டனை விதிக்கப் பெற்றுர்! தண்டனை யளித்த நீதிபதியைப்பார்த்து திலகர் கூறிய வீர உரைகளை இந்த நாட்டு மக்கள் என்றுமே மறக்க வியலாது:

“ஜூரிகளின் தீர்ப்பு எனக்குப் பாதகமாக இருப்பினும் நான் ஒரு நிரபராதி என்றே கூறுவேன். எல்லாவற்றையும் ஆட்சி புரியக் கூடிய உயர்ந்த சக்திகள் உலகில் இருக்கின்றன. நான் சுதந்தரமாக இருப்பதைவிட கஷ்டங்களை அனுபவித்தால்தான் எனது இலட்சியம் ஓங்கி வளரக் கூடுமென்பது கடவுளின் விருப்பமாக இருக்கலாம்” என்று அவர் கூறினுர்.

இந்த வீர உரைகளே பிற்காலத்தில் ஆயிரக் கணக்கான இந் நாட்டு மக்கள் உரிமைக்காகப் போராடிச் சிறை செல்லவும், கஷ்டங்களை அனுபவிக்கவும் ஊக்கமளித்தன என்று கூறலாம்.

மக்கள் சுதந்தரத்தின் பெருமையுணராது உறங்கிக் கொண்டிருந்த காலத்தில், அவர்களைத் தட்டியெழுப்பி, சுதந்தர தாகம் பெறச் செய்த தனிப் பெருமை திலகருக்கு உண்டு. திலகரின் தன்மான உணர்வாலும், உரிமை வேட்கையாலும் ஆயிரமாயிரம் இளைஞர்கள் புத்துணர்ச்சி பெற்றுர்கள்; புது வாழ்வு காணத் துடித்தார்கள். அதன் விளைவுதான் இன்று நாம் பெற்றுள்ள சுதந்தர இந்தியா! சுதந்தர இந்தியாவுக்கு அடிகோலியவர் என்ற முறையில் திலகரின் திருநாமத்தை நாம் என்றும் நன்றியறிதலுடன் நினைவு கூருவோம். அவர் தம் பிறப்புரிமை என்று கொண்டாடிய சுயராஜ்யத்தைப் போற்றிப் பாதுகாக்க என்றும் தயங்கமாட்டோம் என்று உறுதி கொள்ளுவோமாக!

பேராசிரியருக்குப் பதவி உயர்வு

சென்ற பல ஆண்டுகளாக திருச்சிராப்பள்ளி ஜமால் முஹம்மது கலூரியின் தமிழ்த் துறைத் தலைமைப் பேராசிரியராகப்பணியாற்றி வந்த ஜனாப் கா. அப்துல் கபூர் சாஹிப் எம் ஏ. அவர்கள் இந்த ஆண்டிலே உத்தம பாளையம் ஹாஜி கறுத்த ராவுத்தர் ஹவ்தியா கல்லூரியின் துணை முதல்வர் (வைஸ்-பிரன்ஸிபால்) பதவி ஏற்றிருக்கிறார்கள் என்ற நற்செய்தி நமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது

இதுகாறும் திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியைச் சிறப்பித்த சிரித்த முகமும் சிங்காரப் பேச்சும் இனி கறுத்த ராவுத்தரின் புதிய கல்லூரிக்குப் பெருமை தேடித் தரப் போகிறதென்ற செய்தி, தமிழகத்தின் தென் பகுதி மக்களுக்குத் தேனென இனிக்குமென்பதில் ஐயமில்லை. பேச்சிலும் எழுத்திலும் சிறந்து விளங்கும் பேராசிரியர், நற்பண்புகளும் நிர்வாகத் திறமையும் நிறையப் பெற்றவர் என்பது அன்னாருடன் நெருங்கிப் பழகிய நண்பர்களுக்குத்தான் தெரியும். புதிய கல்லூரிக்குத் தகுதியான ஆசிரியர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட மேற்படி கல்லூரியின் நிர்வாகிகளைப் பாராட்டுகிறோம். தமிழ்ப் பேராசிரியர் ஜனாப் அப்துல் கபூர் சாஹிப் அவர்கள் இன்னும் பல உயர் பதவிகள் பெற்று நம் நாட்டின் கண்மணிகளான மாணவ மணிகளின் அறிவும் ஆற்றலும் பெருக உறுதுணையாக நிற்பார்கள் என்று நம்புகிறோம்.

தமிழ்த் தலைவருக்குப் பொன் விழா

அரசியல் பொது வாழ்விலே ஒரு சாதாரண ஊழியராக சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் தமது வாழ்க்கையைத் துவங்கிய தண்டமிழ்த் தொண்டர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியவர்களின் பொன்விழா அண்மையில் தமிழகத்திலே மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப் பெற்றது. ஒரு சாதாரண ஏழை ஊழியராக இந்த நாட்டின் அரசியல் பொது வாழ்வில் ஈடுபட்ட திரு. ம. பொ. சி. அவர்களின் ஐம்பதாம் ஆண்டு விழா சென்னை அண்ணாமலை மன்றத்தில் கொண்டாடப் பெற்ற போது அதனைக் கண்ட தமிழர்கள் அனைவரும் பெருமிதம் கொண்டார்கள்.

தமிழ் மக்களிடையே அரசியல் சமூக வாழ்வில் ஆயிரம் வேற்றுமைகள் இருந்தாலும், உண்மையும் உழைப்புமுள்ள ஒரு அரசியல் தலைவரை—அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராயிருப்பினும்—பாராட்டிப் பெருமைப் படுத்துவது தமிழர்களுக்கே சொந்தமான தனிப் பண்பு என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாக ம. பொ. சி. யின் பொன்விழா நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம். திரு ம. பொ. சி போன்ற தலைவர்களுக்குத் தமிழ் மக்கள் பொன்னாடை போர்த்தியும், பண முடிப்பு அளித்தும் கண்ணியப் படுத்தியதன் மூலம் தமிழர்கள் தங்களைத் தாங்களே பெருமைப் படுத்திக் கொண்டார்கள் என்று

கேள்வி-பதில்

இம்மாத இதழில் பரிசு பெற்றவர்கள்.

1 என். பி. அப்துல் காதர்.
கடையநல்லூர் ரு 3 0

2. இ அன்சாரி,
மேலக்காவேரி ரு. 3 0

3. பி. சிற்றரசு,
சென்னை—14. ரு. 3 0

கூறுவது மிகமிகப் பொருத்தமாக் இருக்கும்.

பதினாயிரம் ரூபாய் மதிப்புள்ள ஒரு புதிய கார் உட்பட ஐம்பதாயி ரம் ரூபாய் கொண்ட பண முடிப்பு ஒன்று திரு. ம. பொ சி. அவர் களுக்குத் தமிழர்களின் சார்பில் அன்பளிப்பாக அன்று வழங்கப் பெற்றது.

திரு. ம. பொ. சி. அவர்களின் நிதியுதவியில் இந்நாட்டில் வாழும் முஸ்லிம்களும் தமிழர்கள் என்ற முறையில் தங்கள் பங்கைச் சேர்த்தார்கள் என்பதைக் குறிப் பிட விரும்புகிறோம். அரசியல் சமுக வாழ்விலே சாதி சமய அடிப்படையில் எவ்வித வேற்று மையும் பாராட்டத் தெரியாத தமி ழர் பண்பாட்டுக்கு ஒரு இலக்கிய மாய்த் திகழும் திரு. ம. பொ. சி அவர்களின் உருவப் படத்தை இந்த இதழின் முதற் பக்கத்தில் இடம் பெறச் செய்ததில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

அரசியல் துறையில் தமிழர்க ளின் உரிமைகள் பறிபோகாமல் பார்த்துக் கொள்வதில், கண்ணுங் கருத்துமுடையவர் திரு ம. பொ. சி. தமிழர்களின் உயிரினும் இனிய உரிமைகளுக்காகப் பல போராட் டங்களை அவர் நடத்தியிருக்கின்றார். தமிழகத்தின் எல்லைகளைப் பாது காப்பதற்காக அவர் தமது தமிழர சுக் கழகத்தின் சார்பாக நடத்திய போராட்டங்களை நாம் மறக்க விய லாது. நம் தலைநகரான சென்னை ஆந்திரருக்குப் போய் விடுமோ என்று அஞ்சப்பட்ட காலத்தில், "தலையைக் கொடுத்தேனும் தலை நகரைக் காப்பேன்!" என்று கூறிக் கொண்டு களத்தில் குதித்தவர் ம. பொ. சி! இதற்கெல்லாம் நன் றியறிதலாக அவருக்குத்தமிழர்கள் தங்கள் கடமையை அன்று செய் தார்கள். அதற்குத் தகுந்த வண் ணம் திரு. ம. பொ. சி. அவர்களும் தமது நன்றியை மக்களுக்குக் கூறி னார். தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் இன்னும் பல்லாண்டு கள் தொண்டு புரியுமாறு திரு. ம. பொ. சி. அவர்களுக்கு இறை வன் அருள் புரிவானாக!

புதியதும் பழையதும்

1. 140
2. 105
3. எகிப்து
4. அமெரிக்கா
5. சுமார் 4000 மைல்கள்
6. ரஷ்யா
7. சரியில்லை பொதுத் தேர் தல் இனிமேல்தான நடை பெற வேண்டும்.
8. மிஸ்ர்
9. ரியாத்
10. எண்ணெயும் பருத்தியும்
11. பருத்தியும். அரிசியும்
12. அலீ (ரலி)
13. ஒன்பது
14. ரஷ்யா
15. சரி

திருமணம்

நெல்லிக்குப்பம் ஜனாப் டி. சுல்தான் மொஹிதீன் சாஹி பின் புதல்வர் முஹம்மது கமா லுத்தீனுக்கும். மேற்படி யூர் மிராஸ்தார் ஜனாப் டி. முஹம் மது கவுஸ் சாஹிப் அவர்களின் புதல்வி மும்தாஜ் பேகத்துக்கும். 3—8—56-ல் நெல்லிக் குப்பத் தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. பெண், மாப்பிள்ளை வீட்டார்க ளின் உற்றார் உறவினர்களும நண்பர்களும் உள்ளூர்ப் பிரமு கர்களும் ஏராளமாக வந்தி ருந்து மணமக்களை வாழ்த்தி அன்பளிப்புகளும் வழங்கினர்.

மணமக்கள் நீடூழி வாழ்க!

கீமியாயெஸ்ஆதத்

அல்-கஸ்ஸாலி

6. ஆராய்தலின் அவசியம்

இஸ்லாம் ஒன்றே ஆராய்ச்சிக்கு ஆக்கமளித்துள்ளதால், சிந்தனையின் சிறப்பைப் பற்றி இமாமவர்கள் மிகவும் சிலாகித்துக் கூறியிருக்கிறார்கள். "சிறிது நேரம் சிந்திப்பது ஒரு வருட வணக்கத்தைவிடச் சிறந்தது" என்று நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள். ஏனெனில் ஆராய்வதால் அறிவு அதிகரிக்கிறது. அறிவுக்கேற்பவே எண்ணம் எழுகிறது. எண்ணத்தைப் பொறுத்தே செயல்கள் நிகழ்கின்றன. எனவே நற்செய்கைகளுக்கு ஆராய்ச்சியே ஆணிவேர்.

ஒரு குறிப்பிட்ட இரண்டு அறிவுகளைக்கொண்டு ஆராய்வதால் மூன்றாம் அறிவு உதிக்கிறது. உதாரணமாக அழியும் பொருளைவிட அழியாப்பொருள் சிறந்தது என்பதை நாமறிவோம். இது முதலறிவு. "இவ்வுலக வாழ்வு அழிந்துவிடும்; மறுவுலகவாழ்வு நிரந்தரமானது" என்னும் இரண்டாவது அறிவை நாம் அடைந்தபின், இரண்டு அறிவுகளைப் பற்றியும் சிந்தித்து, தர்க்க ரீதியாக ஆராய்ந்தால் மூன்றாவது அறிவை அடைகிறோம். அதாவது இம்மையை விட மறுமையே சிறந்தது என்று விளங்கிக்கொண்டு அதற்காகச் செயலாற்றுகின்றோம். ஒரு குறிப்பிட்ட அறிவை அடைய குறிப்பட்ட இரண்டு மூல அறிவுகள் தேவை, எந்த மூல அறிவைக் கொண்டும் வேண்டிய அறிவைப் பெறமுடியாது.

அடிப்படை அறிவே இல்லாதவன் ஆராய்வதற்கே வழியில்லாதிருக்கிறான். முதல் இல்லாததால வியாபாரம் செய்ய இயலாதவனைப் போன்றவன் இவன். ஆனால் மூல அறிவு இருந்தும் மேலும் புதிய அறிவுகளை அடைவதற்காகச் சிந்தித்து ஆராயாதவன் முதலிருந்தும் வர்த்தகம் செய்யாதவனைப் போன்றவன்.

ஆராய்ச்சியால் அறிவும், அறிவால் எண்ணமும், எண்ணத்தால் செய்கையும் மாறுவதால், நற் சிந்தனை நற்செயலுக்கு வித்தாகிறது. இறைவனைப் பற்றி ஆராய்ந்து இறைவனிடமே நாம் மீளவேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டபின், அவனே நமது அன்புக்குரியவன் என்பதையும் தெரிந்து கொள்கிறோம். அதன் பின்னர், அவன் அன்பை அடையும் வழிகளை ஆராய்ந்து

பின்பற்றுகிறேம். தன் காதலி தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக காதலன் என்ன செய்கிறன்? அவன் எதைச் செய்தால காதலி விரும்புவாள் அல்லது வெறுப்பாள் என்பதை ஆராய்ந்து அதற்கேற்ப நடந்து கொள்கிறன். இதைப்போன்றே இறைவனின் திருப்பொருத்தத்தை நாடுபவன் இறைவனுக்கு மகிழ்ச்சியூட்டும் நற் செயல்களை மேற்கொள்வான்; இறைவனின் கோபமும் சாபமும் தரும் தீய காரியங்களை விட்டொழிப்பான்.

இறைவனின் நிலைமையைப் பற்றி ஆராய்வது கூடாதென்றும், அவ்வாறு ஆராய நாம் சக்தியற்றவர்கள் என்றும், இறைவனின் சிருஷ்டிகளைப் பற்றியே நாம் ஆராயவேண்டுமென்றும் நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள். வௌவாலின் சிறு கண்கள் பகலின் பேரொளியில் குருடாவது போன்று இறைவனின் நிலையைப் பற்றி சிந்திக்க நம் சிற்றறிவுக்குச் சக்தியில்லை. எனவேதான் நாம் இறைவனின் சிருஷ்டிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறேம். நேரே சூரியனைப் பார்க்க முடியாவிடினும், பூமியில் பட்டுச் சிதறும் அதன் ஒளியையாவது பார்க்க முடிகிறதல்லவா?

இறை சிருஷ்டிகளில் நம்மைப் பற்றி நாமே சிந்திப்பதால் இறைவனின் உள்ளமையையும், பெருமையையும் எவ்விதம் உணர்ந்து கொள்வதென்பதை இதற்கு முந்திய கட்டுரையொன்றில் படித்தோம். நம்மைப்பற்றி

உலகப் புகழ் வாய்ந்த தத்துவ மேதை அல்-கஸ்ஸாலியவர்கள் தமது தாய் மொழியான பாரசீக மொழியில் எழுதிய நூல்களுள் மிகப் பெரியது 'கீமியா-யெ ஸஆதத்.' பாரசீக இலக்கியத்தில் மனித ஒழுக்கம் பற்றிய இந்நூலுக்கு இணையாக வேறு ஒரு நூலும் கிடையாது! சுமார் ஆயிரம் பக்கங்களையுடைய இம் மாபெரும் நூலை அறிஞர் கஸ்ஸாலியவர்கள் ஒரே வருடத்தில் எழுதி முடித்தார்கள் என்பது இலக்கிய வரலாற்றில் ஒரு புதுமை! அல்கஸ்ஸாலியின் 'அற்புதப் படைப்பு' என்று பெயர் பெற்ற 'இஹ்யா' என்னும் அரபு நூலின் சுருக்கமே கீமியா-யெ ஸஆதத். "சாதாரண அறிவுள்ள பொது மக்களும் எளிதில் புரிந்து கொள்ளுமாறு பாரசீக மொழியில் இதனை எழுதினேன" என்று அல்-கஸ்ஸாலி கூறுகின்றர்கள.

இதற்கு "கீமியா-யெ ஸஆதத" என்று பெயரிட்டதின் காரணத்தையும் கஸ்ஸாலி தமது சுருக்கமான முன்னுரையில கூறுகின்றர்கள். குறைநத விலை மதிபபுள்ள பித்தளையையும் செம்பையும் தங்கமாக மாற்றவல்லது 'அலகெமி' எனனும் ரஸாயனம். இதைப் போலவே மனிதர்களை மிகத் தாழ்வான எண்ணம் செயலகளிலிருநது மிக உயாநத ஒழுக்க நிலைக்கு உயர்த்த வலலது இந்த நூல் என்று அறிஞர் கஸ்ஸாலி கூறுகின்றர்கள்.

வாழ்க்கைககு இன்றியமையாத ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் இந்நூலில் எழுதப் பெற்றுள்ளது.

ஆராய்ச்சியின் அவசியம் பற்றிய இக் கட்டுரையில் கஸ்ஸாலி அவர்கள் தமது ஆழ்ந்த கருத்துக்களை அறிவு நுட்பத்துடன் விளக்குவதைக் காணலாம்.

ஆராய்வதால் இறைவனின் அன்புக்குப் பாத்திரமாவது எப்படி என்பதையும் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு நாளும் நாம் செய்த எல்லா காரியங்களையும் அலசி ஆராய்ந்து அச்செய்கைகளில் பிரதிபலிக்கும் குணங்களைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். அக்குணங்களில் நல்லவை எவை, தீயன யாவை என்பதையும் ஆராய்ந்து, நற்குணங்களைப் போற்றி வளர்க்கவும், தீய குணங்களை விட்டொழிக்கவும் முயலவேண்டும். இதைப் போன்றே தனிக்குணங்களைப் பற்றியும் ஆராயவேண்டும். ஒரு குணத்தைப் பற்றிச் சிந்தித்து, அக்குணம் நம்மிடம் இருக்கிறதா என்று ஆராய்ந்து, அது நற்குணமாயின் அதை மேற்கொள்ள வேண்டும்; தீயதாயின் அதை விட்டொழிக்க வேண்டும். இத்தகைய சிந்தனைக்காக தினமும் சிறிது நேரத்தை ஒதுக்க வேண்டும்.

இறைவன் மீது அச்சமும் ஆதரவும் உண்டாக நம்மைப் பற்றிச் சிந்திப்பதோடு வானம், பூமி, இவைகளிலுறைந்த பொருள்கள் எல்லாவற்றைப் பற்றியும் சிந்திக்கச் சொல்கிறான் இறைவன். ஏனெனில் வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்திருப்பது மனிதர்களைப் படைத்திருப்பதைவிடப் பெரிய காரியமாகும். (அல்குர்ஆன், 40: 57). தரையைவிட கடல் பெரிது. எனவே தரை மீதுள்ள படைப்புக்கள், அதிசயங்களைவிட கடலுள் இருக்கும் சிருஷ்டிகளும் அற்புதங்களும் அதிகமாகும்.

இறைவனின் பெருமையை முற்றும் உணர்ந்து கொள்ளவும் முடியாது. உலக சமுத்திரங்களெல்லாம் மையாக்கப்பட்டு, அதைக்கொண்டு இறைவனின் பெருமைகளை எழுதினாலும் எழுதி முடிப்பதற்குள் சமுத்திர மையும் வற்றிப்போகும் என இறைவனே கூறுகிறான். இறை சிருஷ்டிகளில் நமக்குத் தெரியாதனவும் இருக்கின்றன. நமக்கு அறிவிக்கப்பட்டவைகளிலும், நம் புறக்கண்களுக்குத் தெரியாதனவும் உள்ளன. தேனீக்களின் வாழ்க்கையிலிருந்து (அல்குர்ஆன், 6: 68, 69) வானுறை

கல்கி போட்டியில் முதற் பரிசுபெற்ற கட்டுரை

சோஷலிஸம் ஏன் வேண்டும்?	மீ. இ. உமர், பி.ஏ.,	0—2—0.
மணக் குவியல்	கவிஞர் மதிதாசன்	0—4—0.
மதம் அவசியமா?	ஷேக்கோ	0—6—0.
சம்மதமா?	வி. நூர் முஹம்மது	1—0—0.
வாழ்வுப் போராட்டம்	எம். இஸ்மத் பாஷா	1—0—0.
இன்ப நாதம் ,,	(அனார்கலி—ஸலீம் காதல்)	2—8—0.

அறிவு மலர்ப் பதிப்பகம்,
கோவிந்தகுடி போஸ்ட். கும்பகோணம் வழி.

யும் தாரகை வரை (50: 6) எல்லா சிருஷ்டிகளைப் பற்றியும் சிந்திக்கச் சொல்லுகின்றான் இறைவன்.

தேனீக்களைப்பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல உண்டு. அவை நடத்தும் அரசாட்சியிலுள்ள ஒற்றுமை மனித சமுதாயத்தில் கூட இல்லை! தேன் சேகரிக்கும் முறையும், கூடு கட்டும் முறையும் அவைகளுக்குக் கற்றுக் கொடுத்தவன் யார்? அற்ப தேனீக்கள் கட்டும் கூட்டைப் பார்த்துக்கூட நாம் ஆச்சரியப் படாமல் இருக்க முடியாது. தேனீக்கள் எல்லாம் அறுகோண வடிவமுள்ள கூடுகளையே கட்டுகின்றன. ஏன்? சதுரமாக அமைத்தாலென்ன? அல்லது வட்ட வடிவில் கட்டினாலென்ன? தேனீக்களின் உருவை போன்ற உடலுக்கு, அவைகளின் சிற்றறைகள் சதுர வடிவில் இருப்பதைவிட வட்டமாயிருப்பதே சிறந்தது. ஏனெனில் சதுரத்தின் மூலைகளில் தேவையற்ற இடைவெளிகள் இருக்கும். வட்டமான சிற்றறைகளைக் கட்டினாலும் அவ்வறைகளின் சுவர்களுக்கிடையே இடைவெளி ஏற்படும். ஏனெனில் வட்டங்கள் ஒன்றுடன் ஒன்று இடைக்கின்றி பொருந்தா. வட்டத்தைப் போன்றே முக்கோணம், ஐங்கோணம், எண்கோணம் போன்ற எந்த உருவமும் ஒன்றுடன் ஒன்று முற்றிலும் இணைவதில்லை. அறுகோண வடிவில் சிற்றறைகளைக் கட்டினால்தான் அவை இடைவெளியின்றிப் பொருந்துவதோடு குறைந்த சுற்றளவில்—அதனால் குறைந்த அளவு மெழுகைக் கொண்டு — அதிக (குறைக்குப்) பரப்புள்ள சிற்றறைகளைப் பெறலாம். சதுரத்தைவிட அறுகோணத்தில் மூன்றிலொரு பங்கு அதிக பரப்பைப் பெறலாம் என்பதை கணிதம் மூலம் நிரூபிக்கலாம். அதனால்தான் தேனீக்களுக்கு அறுகோண வடிவில் கூடுகட்டும் அறிவை அளித்தான் இறைவன். இதைப் போன்ற அதிசயங்களை ஒரு சிற்றெறும்பினிடமும் காணலாம்.

இறைவனின் பெருமையை அறிய ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தால் போதும். பூமி தன்னைத்தானே சுற்றுவதால் இரவு பகல் மாறிமாறி வருவதுபோல், சூரியனைச் சுற்றுவதால் பருவநிலை வேறுபாடுகள் ஏற்படுகின்றன. பூமி சுற்றிவரும் வட்டத்தின் சரியான நடுவில் சூரியன் இல்லை; ஒரு பக்கமாக விலகி இருக்கிறது. இதனால் பூமியானது சிலகாலம் சூரியனுக்கருகிலும், சிலகாலம் சூரியனை விட்டுத் தொலைவிலும் இருக்க நேரிடுகிறது. இதனாலும், பூமியின் அச்சு சாய்ந்திருப்பதாலும் பருவநிலை மாறுதலும், இரவு பகல் நீளங்களில் வித்தியாசமும் ஏற்படுகின்றன. மனிதன் மீதுள்ள கருணையால், சிறிய காரியத்தின் மூலம் நம் நலனுக்கேற்ற பெரிய மாறுதல்களை நிகழச் செய்கிறான் இறைவன்.

இறைவனின் சிருஷ்டிகளைப் பற்றிச் சிந்திப்பது இறைவன் மீது அச்சத்தையும், ஆதரவையும் எழுப்பும். தாவூது தாயி (ரஹ்) அவர்கள் தம் வீட்டு மாடி மீது நின்று

கொண்டு வானத்தைப் பார்த்து இறைவனின் பெருமை காட்டும் அத்தாட்சிகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே நின்றார்கள். இறைவன் மீதுள்ள அச்சம் அதிகரித்து உணர்வு மாறிக் கீழே விழுந்து விட்டார்கள்!

வானிலும் பூமியிலுமுள்ள எல்லாப் பொருள்களும் இறைவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருக்கின்றன. சிருஷ்டிகளைக் கண்முன் கண்டும், அவைகளைப் பற்றிச் சிந்தித்து இறைவனின் பெருமையை உணர்ந்து அவனைப் புகழாமல் இருப்போருமுளர். (அல்குர்ஆன், 12: 105) இவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள்; மிருகங்களுக்கு ஒப்பானவர்கள் (7, 179).

இத்தகையோர் ஒரு சிற்றெறும்பைப் போன்றவர்கள். அவ்வெறும்பு ஒரு பெரிய அரண்மனையில் ஒரு தொளையில் வசிக்கிறது. அச்சிறு தொளைக்கு வெளியே அது வந்ததேயில்லை. அரண்மனையின் அழகும், அங்கு நடக்கும் அதிசயங்களும், அதில் ஆட்சி செய்யும் அரசனும் அவ்வெறும்புக்குத் தெரிவதில்லை.

சிந்தனையின் சிறப்பையும், சிந்தனைக்குரிய விஷயங்களையும் விவரிக்கும்போது, தொள்ளாயிரம் ஆண்டுகளுக்குமுன் இமாமவர்கள் தந்திருக்கும் விளக்கங்கள் இன்றைய விஞ்ஞானத்துக்கும் பொருத்தமாயிருப்பது அவர்களின் நுண்ணிய அறிவையும், ஆராய்ச்சித் திறனையும் எடுத்துக் காட்டுகிறது.

(தொடரும்)

அ. அப்துர் ரஹீம்

கடல் அல்லது ஆகாய மார்க்கமாக எந்த இடத்துக்குப் போவதாயிருந்தாலும், எந்த வகுப்பு டிக்கட் வேண்டுமென்றாலும், நீங்கள் நேரில்வந்து சிரமப்பட வேண்டியதில்லை. தேவையான டாக்குமென்டுகளையும், சர்ட்டிபிகேட்களையும் நாங்களே சேகரித்துக் கொடுக்கிறோம். எல்லாம் நேரடியாகக் கவனிக்கப்படும். எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

SUBEDAR & SONS

Travel Agents

Bombay Head Office :
'Himalya House,'
3rd Floor,
79, Palton Road,
BOMBAY—1.

Madras Agent :
Hafez Abdur Rashid
M. Khan,
7, Francis Joseph Street,
(Near Y. M. C. A.—G. T.
MADRAS—1.)

வெளிவந்து விட்டது!   வெளிவந்து விட்டது!!

மதாயிஹுல் அன்வார்

என்னும்

7 மௌலூது கிதாபு

பெரிய எழுத்து

அச்சிட்டு விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. 1/8 கிரவுன்சைஸில் கிளேஸ் காகிதத்தில் பெரிய எழுத்தில் அழகாய் அச்சிடப்பட்டது. **விலை ரூ. 7—8—0.**

(போஸ்டு செலவு வேறு)

கீழ்க்கண்ட மவ்லூதுகளும் விடுபைத்துகளும் அடங்கியிருக்கின்றன.

1. *ஸுப்ஹான மவ்லிது,*
2. *மவ்லிதுஷ்ஷுஹதா, பத்ரிய்யீன்கள் மவ்லிது,*
3. *பர்ஸஞ்சி மவ்லிது,*
4. *கஸீததுல்புருதா (துஆக்களுடன்)*
5. *ஹுஸைன் (ற) மவ்லிது,*
6. *முஹியித்தீன் (ற) மவ்லிது,*
7. *ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் மவ்லிது*

விடுபைத்துகள்:—1. யாஸையதி பைத்து. 2. யாருத்பா பைத்து, 3. யாஸையதிஷைகீ, 4 ஷபீஹுக, 5. கலாஸீ பைத்து, 6. மழை பைத்து, 6. பீஹுப்பிஸையிதிறு. 8. பிவுத்திஸையிதிறு 9. அயாரப்பி இன்னீ, 10. ஜுத்பிலுத்பிக 11 ஸின் தாஷா ஹ்மதர் பேரில் நூரிய்யா. 12. அபுல்ஹஸன் ஷாதிலி பேரில குத்பிய்யா, 13. காஜா முயீனுத்தீன் நாயகர் தின் பேரில் பாதிய்யா, 14. யாமன் யாராமா. 15. யாஸையதி மஹ்பூபு, 16. லிய அஹ்பாபு—

பெற்றுக் கொள்ளுமிடம் :

"தஃலீமுல்" இஸ்லாம் புக் டிப்போ,

642, திருவல்லிக்கேணி ஐரோட், சென்னை—5.

முக்கிய கவனிப்பு :—*கஸீதத்துல் வித்ரிய்யா பெரிய எழுத்தில் அச்சிட்டுக்கொண்டு வருகிறோம். இன்னும் வெளிவர இரண்டு மாதங்கட்கு மேல் ஆகும். மேல்கண்ட பெரிய எழுத்து ஏழு மவ்லூதுகளும் பெரிய எழுத்து வித்ரியா'வும் சேர்ந்தது விலை ரூ. 10—0—0. தேவையுள்ளவர்கள் முன்னதாகவே பதிவு செய்து கொள்ளவும் அச்சிடுவது சொற்ப காபிகள் தான்.*

மழை

★

தொல்லையில் நீந்திய மாந்தரின் தாபத்தைத்
தீர்த்திட வானம் விரும்பியதோ ?—என
சில்லெனும் காற்று விரிந்தது எங்கணும்
சீதளம் கண்டது தன்மையுடன்—எழில்
கொல்லையில் வாடிய தளிர்களும் இன்பத்தின்
கூரையில் ஆடின, மென்மையுடன் !

வானம் கறுத்தது காக்கைக் கழுத்தென ;
நீல வெளியெங்கும் சூழ்ந்ததுவே !—மத
ஆனையைக் கீறிடும் வாளெனவே, வெள்ளி
ஆற்றினைப் போல் மின்னல் வெட்டியதே !—நல்ல
தீனமி லாதவர், குண்டுக ளால் நகர்
தாக்குதல் போல் இடி ஆர்த்ததுவாம் !

ஆயிரம் பொத்தல்கள் கொண்டதோர் சல்லடை,
அழகிய பனியைச் சலிப்பதுபோல் ;—மிகு
தூய பளிங்கெனும் கம்பிகளாய் குளிர்த்
தாரை சொரிந்தன மாமுகில்கள் !—நல்ல
மாயவிஞ் ஞானியின் செய்கையைப் போல் தரை
தாவர வர்க்கம் பசிந்ததுவே !

ஆறு, குளங்கள் நிறைந்தன, சாந்தியே
ஆறறவ ரின்மனம் பூப்பதுபோல் !—நீர்
ஊறும் கிணற்றுத் தவளைகளும் சேர்ந்து
ஊளை கிளப்பின ஒப்பாரிபோல் !—தேன்
சாறுறும் பேச்சுடை பாலகர் காகிதக்
கப்பல்கள் விட்டனர் தெருநீரிலே !

கொப்புளங் கள்புடைத் திட்டன நீரினில்
கோடிக் கணக்கினில் ரசமணிபோல் !—சிறு
தெப்பம்போல் சென்று மறைந்தன யாவுமே
தேசுமி குந்திட்ட வானகத்தின்—இருள்
கப்பிய மேகம் கலைந்தது; நீலவிண்
காட்டிய தும் மழை யோய்ந்ததுவே !

—கவி. மதிதாசன்

சில மாதங்களுக்கு முன் எங்கள் பத்திரிகையில் சிறுகதை யொன்று பிரசுரமாகி யிருந்தது. இன்பத்திலும் துன்பத்திலும் உல்லாசமாகக் கைகோர்த்துச் செல்கிறார்கள் இரு இளந்தம்பதிகள். தாங்க முடியாத கஷ்டங்களையெல்லாம் மிகவும் அலட்சியமாகக் கருதுகிறார்கள். இவர்களைக் கண்டு ஊரே பிரமிக்கிறது. இந்நிலையில் பொறாமைக்காரன் ஒருவன் இத்தம்பதிகளின் மனத்தில் சந்தேகவித்தை விதைத்து விடுகிறான். வித்து விருக்ஷமாகிறது. ஜோடிப் புறாக்கள் பிரியும் கட்டம். சூழ்ச்சி வெளிப்பட்டு விடுகிறது. சந்தேக மேகம் கலைகிறது. உல்லாச வாழ்க்கை மீண்டும் துவங்குகிறது—இக்கதையை எழுதியவர் ஒரு ஆரம்ப எழுத்தாளர்தானென்றாலும் சந்தேகத்தினால் ஏற்படும் விளைவுகளை நன்கு சித்திரித்திருந்தார். இக்கதைக்கு ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்தன.

இன்பம் பூத்துக் குலுங்கும் எங்கள் வாழ்க்கைப் பூங்காவுக்குப் பயங்கரப் புயலாக வாஸந்தி வந்து விடுவாளோ என்ற பீதி என் மனத்தில் ஏற்பட்டது. ஆனால் நஸீமாவின் வதனம் எவ்வித மாறுதலுமின்றி சாதாரணமாகக் காணப்பட்டதால் என் அச்சம் தேய்ந்தது. சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தபின் வாஸந்தி போய்விட்டாள்.

" மணி ஒன்பதாகப் போகிறது. பசி எடுக்கவில்லையா ?" என்று கேட்டவாறு வராந்தாவுக்கு வந்தாள் நஸீமா.

"எனக்குப் பசியே இல்லை நஸீமா! நீயும் ஸகீனாவும் சாப்பிடுங்கள் !" என்றேன்.

" இராப் பட்டினி கூடாது. கொஞ்சமாவது சாப்பிடுங்கள்!"— அவள் குரலில் அன்புடன் கூடிய கண்டிப்பும் பரிவும் மிளிர்ந்தன.

" வேண்டுமானால் கொஞ்சம் பாலும் பழமும் சாப்பிட்டுக் கொள்கிறேன். அதுவும் இப்போது வேண்டாம் "

நஸீமா வீட்டுக்குள் போவதற்குத் திரும்பினாள். " நஸீமா !" என்று மெதுவாக அழைத்தேன்.

" ஏன், என்ன வேண்டும் ?"

" ஒன்றுமில்லை. உன்னிடம் ஒரு விஷயம் கேட்கிறேன். மறைக்காமல் பதில் சொல்வாயா ?"

" என்ன விஷயம் ? கேளுங்களேன் !"

" உன் மனத்தில் என்ன தோன்றுகிறதோ அதைச் சொல்லுவாயா நஸீமா !"

" உங்களிடம் நான் ஏன் மறைக்கப் போகிறேன் !"

"வாஸந்தி போன்ற பெண்களிடம் நான் பழகுகிறேனே. அதை நீ தவறாக நினைத்துக் கொள்வாயோ என்ற பயம்தான் எனக்கிருக்கிறது!" என்று விஷயத்தை நேரடியாகவே ஆரம்பித்தேன்.

நஸீமா முறுவலித்தபடியே, "என்னை அவ்வளவு மோசமாகவா நினைத்து விட்டீர்கள்? உங்களைச் சந்தேகப்பட அவ்வளவு பேதையா நான்?" என்றாள்.

"இல்லை நஸீமா! மனித இதயம் மலரினும் மென்மையானது. அதைச் சந்தேகப் பூச்சி சுலபமாக அரித்துவிடும்!"

"என் இதயத்தின் வலிமை முன் எந்தப் பூச்சியும் நிற்க முடியாது!"

"இருந்தாலும்......"

"உங்கள் மீது எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு. அது அசைக்க முடியாத நம்பிக்கை. நீங்கள் வழி தவறிச் செல்ல மாட்டீர்கள்; என் வாழ்க்கையைச் சிதைக்கும் புறம்பான பாதையை நீங்கள் வெறுப்பீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். அப்படியிருக்க எப்படி உங்களைச் சந்தேகிப்பேன்?"—உணர்ச்சி வசப்பட்டு நஸீமா பேசியதால் அவள் கண்களில் நீர் துளிர்த்தது.

"நஸீமா, உன் நம்பிக்கை வீண் போகாது. எத்தனை பெண்கள் என் வாழ்வில் குறுக்கிட்டாலும் நான் வரம்பு மீறமாட்டேன்" என்று முணு முணுத்தபடியே சோபாவில் சாய்ந்தேன்.

மறு நாள், ஒரு முக்கியமான கட்டம் படமாக்கப்பட வேண்டியிருந்தது. சந்தர்ப்ப, சூழ்நிலை காரணமாக மனைவியைத் தவிக்க விட்டுச் சென்ற கதா நாயகன் திடீரென்று வீட்டுக்கு வருகிறான். அவன் காலைக் கட்டிக் கொண்டு மனைவி கதறுகிறாள். ஆனால் மனைவியை உதைத்து விட்டு கதாநாயகன் வெளியேறுகிறான்.

படப்பிடிப்பின் ஆரம்ப வேலைகள் நடந்து கொண்டிருந்தன. இக்காட்சி சம்பந்தமான வசனத்தில் சிற்சில இடங்களை மாற்றி எழுதிக் கொண்டிருந்தேன். என்னரு

சொல்லிக் கொண்டிருந்தனர்.

"எனக்குச் சுலபத்தில் வரக்கூடிய வார்த்தைகளையமைத்து வசனங்களை ஸார் எழுதுகிருர் போலிருக்கிறது!" என்று கூறியபடியே உள்ளே வந்தவாஸந்தி அங்கிருந்தஸோபாவொன்றில் உட்கார்ந்துகொண்டாள்.

"அதிலென்ன சந்தேகம்!" என்ருர் டைரக்டர்.

"பேச வராத வசனங்களை எழுதி என் பெயரையும் நம் கம்பெனியின் பெயரையும் நான் ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்?" என்று நான் கூறினேன்.

படாதிபதி 'கல கல'வென்று நகைத்துக்கொண்டு; "மிஸ்டர் ஷரீப், இந்தத் தொழிலில் மட்டுமல்ல—எதிலும் நம் பெயர் கெடக்கூடாது; நாம் வேலை செய்யும் இடத்தின் பெயர் கெடக்கூடாது என்ற மனப்பான்மை எல்லோருக்கும் இருக்குமாளுல் நமது நாடு எவ்வளவு முன்னேறிவிடும் தெரியுமா?" என்று கூறினுர்.

வசனங்களைத் தொடர்ந்து திருத்திக் கொண்டிருந்தேன். நான் இதில் எடுத்துக்கொள்ளும் சிரத்தையைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மேக்-அப் செய்து கொள்வதற்காக வாஸந்தி போய் விட்டாள்.

"உங்கள் எழுத்துத் திறமை மூலம் வாஸந்திக்கும் ஒரு நல்ல எதிர் காலம் ஏற்படப் போகிறது மிஸ்டர் ஷரீப்!" என்று திடீரெனக் கூறினுர் டைரக்டர்.

"பாவம், நல்ல பெண். ஆரம்பத்தில் ரொம்பக் கஷ்டப்பட்டது!" என்ருர் படாதிபதி.

"தன் சொந்த மகளைப்போல பாவித்து அவளிடம் நீங்கள் அக்கறை கொண்டதால்தான் அவள் இவ்வளவு முன்னுக்கு வந்தாள்!" என்ருர் டைரக்டர்.

"நான் உங்கள் ஒவ்வொருவரையும் என் குழந்தையாகவே கருதுகிறேன்" என்று கூறிய படாதிபதி, "வாழ்க்கையின் முடிவில் மனிதன் கொண்டு செல்லப் போவது என்ன? நல்லவன் அல்லது கெட்டவன் என்ற பெயர் தானே!" என்ருர்.

அன்று ஷூட்டிங் முடிந்து ஆபீஸுக்குத் திரும்பும் போது மாலை மணி ஐந்தாகி விட்டது.

" என்ன, துரையை இப்போதெல்லாம் பார்க்க முடிகிறதில்லை !" என்று சொல்லியவாறு என்னை வரவேற்றான்.

" ஏன் முடியாது ? சந்திர மண்டலத்துக்குப் போய் விட்டாலும் தான் எனக்குப் பின்னால் நீ வந்து நிற்பாயே !"

" இருந்தாலும் நீ போகும் பாதை எனக்கு கனவில்கூட கிடைக்காது !"

" அப்படியென்னப்பா நான் உயர்ந்து விட்டேன் ?"

" நாளுக்கு நாள் உன் அந்தஸ்து அதிகரிக்கிறது. அதற்கேற்றபடி சிநேகிதர்களும் அதிகரிக்கிறார்கள். இந்த ஏழை குமாஸ்தாவை எங்கே இனி கவனிக்கப் போகிறாய் !"

நான் சிரித்துவிட்டேன் ; "அக்பர், உன் சிநேகிதனை அவ்வளவு மோசமாகவா நினைத்து விட்டாய் !"

" உன்னை அப்படியொன்றும் நினைக்கவில்லை ஷரீப் ! ஆனால் அந்தச் சூழ்நிலையில் உன்னுடன் நான் பழகினால் உன் அந்தஸ்துக்கு இழுக்குத்தானே !"

" மண்ணாகப் போகிற அந்தஸ்து !" என்று கூறிய நான் "என்றும் நீ என் சிநேகிதன் தான் அக்பர் !" என்று உறுதியளித்தேன்.

ஆபீஸில் அன்று பாக்கியிருந்த வேலைகளை முடித்துவிட்டுப் புறப்படும்வரை அலி அக்பர் என்னுடன் இருந்தான். இருவரும் சேர்ந்தே வீட்டிற்குப் புறப்பட்டோம்.

" ஷரீப், உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல நினைத்தேன் !" என்று ஆரம்பித்தான் அக்பர்.

" என்ன விஷயம் அக்பர் ?"

" பிரமாதமாக ஒன்றுமில்லை..." என்று தயங்கினான்.

" சொல்லு அக்பர் ! சொன்னாத்தானே எனக்குத் தெரியும் ?"

" நீ அந்த வாஸந்தியுடன் பழகுவது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை !"

" தொழில் முறையில்தானே பழகுகிறேன் !"

" இருந்தாலும் அவள் ஒரு பெண். அதிலும் ஒரு சினிமா நடிகை!"

" இவ்விஷயத்தில் என் மனசு ஒரு இறுகிய பாறை என்பது உனக்குத் தெரியாதா ?"

" எறும்பு ஊரக் கல்லுந் தேயும் என்பது பழமொழி !"

" இந்த நெருப்பை எதுவும் அண்ட முடியாது ?"

" தண்ணீர் கூடவா !"

" அக்பர், இப்போது நீ மிகவும் அழகாகப் பேசக் கற்றுக் கொண்டாய் !"

" ஷரீப், நீ ஆரம்பத்தில் பட்ட கஷ்டத்தை எப்போதும் நினைவில் வைத்துக்கொள். உனக்கு இப்போது உண்டாகியிருக்கும் வாழ்வு

நிரந்தரமாக இருக்கவேண்டும் என்பதுதான் என் ஆசை!'' என்று உருக்கத்துடன் கூறினுன் அலீ அக்பர்.

"அக்பர், உன் நண்பன் எப்போதும் தவருன வழியில் செல்லவே மாட்டான்; தன் வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்ள மாட்டான் என்பதை உறுதியாக நம்பு!"

"இப்போது மட்டுமல்ல, எப்போதும் அந்த நம்பிக்கை எனக்கு உண்டு..."

"இந்த உலகத்தில் நஸீமாவைத் தவிர மற்றப் பெண்கள் அனை வரும் எனக்குச் சகோதரிகள்தான்! என் தங்கை ஸகீனுவிடம் எவ்வித பரிவும் வாத்ஸல்யமும் உண்டோ அவ்வித பரிவும் வாத்ஸல்யமும்தான் பிற பெண்களிடமும் எனக்கு இருக்கும்!"

"ஷரீப். உன்னை எனக்குத் தெரியாதா என்ன? இருந்தாலும். உன் லட்சிய வாழ்க்கைக்கு வாஸந்தி ஒரு கடுமையான சோதனை என்று தான் நான் எண்ணுகிறேன்!" என்றுன் அக்பர்.

"உண்மைதான் அக்பர். என்றாலும் இந்த வாஸந்தி அல்ல; இதைவிட எத்தனையோ வாஸந்திகள் வந்தாலும் என் லட்சியத்தைச் சிதைத்துவிட முடியாது! எவ்வளவு கஷ்டங்கள் வந்தபோதிலும் எதிர்த்துச் சமாளிக்கும் சக்தியை ஆண்டவன் எனக்குக் கொடுத்திருக் கிருன்!" என்று பதிலளித்தேன்.

6

ரேடியோவில் 'பிரேம தீபம்' நடந்து கொண்டிருந்தது. அதை நாடகத்துக்கான இசைகளை ஒலி பரப்பும் ஸ்டுடியோவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தேன். கதாநாயகியாக நடித்துக் கொண்டி ருந்த மல்லிகாவின் தந்தை தாமோதரம் என்னுடன் இருந்து நாடகத் தைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"என் முயற்சி வீண் போகவில்லை ஸார். குழந்தை அபாரமாக நடிக்கிருள்!" என்ருர் இசைகளின் ஒலிப்பதிவுகளை சமயத்திற்குத் தக்கபடி போட்டுக்கொண்டிருந்த ஸ்ரீராம்.

"ஆமாம் நடிப்பு நன்ருக அமைந்து விட்டது" என்று நான் சொன்னேன்.

இப்புகழ்ச்சி மொழிகளால் தாமோதரம் மிகவும் பூரித்துப் போனுர்.

நாடகம் முடிந்து ஸ்டுடியோவைவிட்டு வெளியே வந்ததும், "எப் படி ஸார், என் நடிப்பு?" என்று கேட்ட மல்லிகாவுக்கு. "நடிப்பு ஏ—ஒன்!" என்று பதிலளித்தேன்.

"என்னை உற்சாகப்படுத்துவதற்காக இப்படிச் சொல்கிறீர்கள். உங்கள் மனதில் தோன்றிய கற்பனைக்கேற்றபடி நான் நடித்திருப்பேனு

என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது !" என்று அடக்கத்துடன் கூறினாள் மல்லிகா.

இதற்கு என்ன பதில் சொல்வது ?

" சினிமாவில் வாஸந்தி எவ்விதம் நடிக்கிறாளோ அவ்விதமே நாடகத்தில் நீ நன்றாக நடித்து விட்டாய் " என்றேன்.

" சாதாரணமாக யாரையும் உற்சாகப் படுத்துவதில் ஸாருக்கு இணை கிடையாது " என்று சொல்லிக்கொண்டே விஸிட்டர் ஹாலிலிருந்து வெளியே வந்தாள் வாஸந்தி.

" நீங்கள் எப்போது வந்தீர்கள் வாஸந்தி ?"

" நாடகம் ஆரம்பித்த உடனேயே வந்து விட்டேன் !"

" அப்படியானால் ஸ்டூடியோவுக்குள்ளேயே வந்திருக்கலாமே !"

" இங்கே உட்கார்ந்தே கேட்டுக் கொண்டிருந்தேன் !"

" குழந்தையின் நடிப்பு எப்படிங்க இருந்தது ?" என்று இடைமறித்துக் கேட்டார் தாமோதரன்.

" இவர்தான் மல்லிகாவின் அப்பா. செக்ரடேரியட்டில் அஸிஸ்டண்ட் செக்ரடரியாக இருக்கிறார் !" என்று வாஸந்திக்கு அவரை அறிமுகப்படுத்தினேன்.

வாஸந்தி மரியாதைச் சிரிப்புடன், " குழந்தை நன்றாக நடித்தாள் ஸார். என்னாலகூட இவ்வளவு உருக்கமாக நடிக்க முடியுமா என்பது சந்தேகம் தான் !" என்றாள்.

தன் குழந்தையைத் தன் எதிரிலேயே புகழக் கேட்கும் எந்தத் தந்தைதான் பெருமை யடையாமலிருக்க மாட்டார்?

வீட்டிற்குப் புறப்பட்டபோது, " வாருங்கள் ஸார். உங்கள் வீட்டில் கொண்டு சென்று இறக்கிவிட்டுப் போகிறேன் !" என்று அழைத்தாள் வாஸந்தி.

" இல்லை. ஸாருடன் சில விஷயங்கள் பேசவேண்டியிருக்கிறது. நான் அவரை அழைத்துப் போகிறேன் " என்று கூறியவாறு என் கையைப் பிடித்திழுத்தார் தாமோதரன்.

" என்ன மிஸ்டர் ஸ்ரீராம் ! நீங்கள் வரவில்லையா ?"

" நானும் வந்து விட்டேன் " என்றார் ஸ்ரீராம்.

" அப்புறம் உங்களைச் சந்திக்கிறேன் வாஸந்தி !" என்று சொல்லிக்கொண்டே தமோதரத்துடன் புறப்பட்டு விட்டேன். வாஸந்தியின் முகம் வாடி விட்டது.

" நீங்கள் ஒரு முஸ்லிமாக இருந்தும் எவ்வளவு அழகாகத் தமிழ் எழுதுகிறீர்கள் ?" என்று பேச்சைத் துவக்கினார் தாமோதரன்.

ஸாந்தோம் ஹைரோடிலிருந்து லாயிட்ஸ் ரோட் பக்கம் திரும்பி கார் மெதுவாக ஓடிக்கொண்டிருந்தது.

" நல்ல கேள்வி கேட்டீர்கள் ! முஸ்லிம்களிடமிருந்து அழகான தமிழை எழுத நாம்தான் கற்றுக்கொள்ள வேண்டும் " என்றார் ஸ்ரீராம்.

" தாய் பாஷை அவர்களுக்குத் தமிழ் அல்லவே !"

" பிறகு என்ன அரபியா ?" என்று ஸ்ரீராம் கேட்டபோது எல்

" தமிழ் நாட்டில் வாழும் முஸ்லிம்களின் தாய் மொழி தமிழ். சீனுவில் வாழும் முஸ்லிம்களின் தாய்மொழி சீனம். அதேபோன்று எந்த நாட்டில் வாழுகிருர்களோ அந்த நாட்டின் மொழியே முஸ்லிம்களுக்குத் தாய் மொழியாக இருந்து வருகிறது. அந்தந்த மொழிகளில் அவர்கள் தேர்ச்சிபெற்று விளங்குகிருர்கள்" என்று ஸ்ரீராம் மீண்டும் விளக்கம் கூறினர்.

" ஆமாம் ஸார்! எங்கள் பழக்கத்தில்கூட மற்றவர்கள் பாரும் உபயோகப்படுத்தாத தமிழ் கலைச் சொற்கள் நிறைய இருக்கின்றன!" என்று நான் கூறினேன்.

இதற்குள் என் பங்களா வந்துவிடவே காரை விட்டு நான் இறங்கியதும் "போய் வரட்டுமா! அடிக்கடி உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்!" என்றுதாமோதரன் கூறினர்.

"காபி சாப்பிட்டு விட்டுப்போகலாம்" என்று அழைத்தேன். என்னுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பின்னர் அவர்கள் புறப்பட்டுச் சென்றுர்கள்.

மறுநாள் காலை. சுமார் எட்டு மணியிருக்கும். டீ சாப்பிட்ட பிறகு அன்றுவந்த காலைப் பத்திரிகையை வாசித்துக்கொண்டிருந்தேன். காற்று இல்லாததால் பங்களா தோட்டத்தில் ஒரு மரம்கூட அசையவில்லை. ஒரே புழுக்கமாக இருந்தது. ஆடி மாதத்தில் என் சொந்தக் கிராமத்தில் எவ்வளவு வேகமாகக் காற்றடிக்கும்? 'ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும்' என்ற பழமொழிகூட உண்டே!

ஹாலில் குழந்தை ஹஸீனு பானுவுக்கு அரபி பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள் ஸகீனு. 'அலீப், பே, தே என்ற எழுத்துக்களைத் தன் மழலை மொழியில் குழந்தை சொல்வது கேட்க இன்பமாக இருந்தது. கொஞ்ச நாட்களாக ஹஸீனுவுக்கு ஸகீனு தான் ஆசான், தோழி எல்லாம். விளையாடும் நேரத்தில் விளையாடவும், படிக்கும் நேரத்தில் படிக்கவுமான உற்சாகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக குழந்தைக்கு ஸகீனு ஊட்டிக் கொண்டிருந்தாள். குழந்தைகளுக்கு மார்க்கக் கல்வியின் அடிப்படை அவசியம் என்று நம் முன்னேர்கள் வகுத்திருந்த திட்டத்தை அமல் நடத்துவதில் தமிழ் நாட்டு முஸ்லிம் பெண்மணிகள் முன் நிற்பவர்களல்லவா? அதன் படியே காலை நேரத்தை மார்க்கக் கல்விக்காக ஸகீனு ஒதுக்கி வைத்திருந்தாள்.

"நேற்று சாயங்காலம் உங்களுக்கு ஒரு லெட்டர் வந்தது. அதைக் கொடுக்க மறந்தே போய் விட்டேன்" என்று கூறியவாறு ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள் நஸீமா.

கடிதத்தை வாங்கிப் பார்த்தேன். யாரிடமிருந்து வந்திருக்கிறது என்று கவரிலிருந்து தெரிந்துகொள்ள முடியவில்லை: உறையைப் பிரித்ததும் உள்ளே "எச்சரிக்கை" என்று சிவப்பு மையினுல் எழுதப்பட்டிருந்த சொல்லே என் கண்களில் முதலில் பட்டது. ஜெனரல் போஸ்ட் ஆபீஸில் தபாலில் சேர்க்கப்பட்ட கடிதம். கையெழுத்தில்லை. அதை வாசித்து முடித்ததும் கிராமத்தில் ஆடி மாதத்தில் வீசும் காற்றைவிட வேகமாக என் உள்ளத்தில் புயல் தோன்றியது. இதற்குள் 'கேட்' திறக்கும் சப்தம் கேட்கவே கடிதத்தை மடித்துச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டு வருவது யார் என்று பார்த்தேன். உள்ளப் புயலையும் மீறி ஆச்சரியம் புறப்பட்டது. 'ஸகீனு இங்கு யார் வந்திருக்கிருர்கள் என்று பார்!" என்று என் தங்கையை அழைத்தேன்.

சுல்தானியா படை மருந்து

இது 38 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன்; மலேயா முதலிய தேசங்களில் நற்கியாதியுடன் உபயோகிக்கப்பட்டு, கோடிக் கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து, தங்க மெடல்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றது. எல்லாவித படை, சொரி சிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுக் கடி, சேற்றுப்புண், எச் சிற்றழும்பு, எக்ஸிமா முதலிய தோல் வியாதிகளை உடனே குணப் படுத்தும்.



சிறிய சைஸ் பாட்டல் 1-க்கு விலை அணா 0—6—0.
பெரிய „ „ „ „ „ 0-12—0.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

ஜெயரசம் டிப்போ,
அய்யம்பேட்டை. தெ. ரயில்வே.

மலேயா (பினங்கு ஏஜெண்ட்)
ஆர். ஏ. அஹமதுஷா முஹம்மது சுல்தான் அன் கம்பெனி.,
101, பினங்கு ஸ்ட்ரீட், பினங்கு.

மலேயா (சிங்கப்பூர் ஏஜெண்ட்)
ஏ. சையத் முஹம்மது கம்பெனி,
178, கிராஸ் ஸ்ட்ரீட், சிங்கப்பூர். டெலிபோன் நெ. 26918.

இலங்கை (கொழும்பு ஏஜெண்ட்)
எம். சி. ஏ. ஹூதா அன் கம்பெனி,
20, டாம் ஸ்ட்ரீட், கொழும்பு.

இலங்கை (நீர் கொழும்பில் கிடைக்குமிடம்)
ஏ. எம். எல். அலியா மரைக்காயர் அன் ஸன்ஸ்,
பிரபல மருந்துக் கடை,
160, மெயின் வீதி, நீர் கொழும்பு.

நான் அறிந்த இஸ்லாம்

22. வானவர்கள்

★

எஸ். சுந்தரமூர்த்தி

இஸ்லாத்தின் ஐம்பெருங் கோட்பாடுகளில் நம்பிக்கையே முதன்மையானது. நம்பிக்கை என்பது அல்லாஹ் ஒருவனே வணக்கத்திற்குரிய தெய்வம்; அவனையன்றி வேறு தெய்வம் இல்லை. இத்துடன் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் அவன் திருத் தூதரே என்பதையும், திருமறை அவன் அருள்மறையே என்பதையும், முஹம்மது நபிக்கு முன்பு வாழ்ந்த நபிமார்களையும், திருகுர்ஆனுக்கு முன்னர் அருளப்பெற்ற மறை நூல்களையும், நம்புதல் வேண்டும். அன்றியும் திருமறைகளையும், பிற ஞான வெளிப்பாடுகளையும் இறைவனிடமிருந்து அவனுடைய திருத்தூதர்களுக்குக் கொணர்ந்து அருளிய வானவரையும் நம்புதல் இன்றியமையாததாகும். வானவர்கள் "மலக்கு"கள் என்றும் அழைக்கப்படுவர். வானவர்களை நம்பினால்தான் ஞான வெளிப்பாடுகளையும் நம்புதல் கூடும். ஏனென்றால் வானவர்கள் மூலமாகவே ஞான வெளிப்பாடுகள் மண்ணுலகில் உள்ள நபிமார்களுக்கும், மற்றும் நேர்மையாளர்களுக்கும் இறைவனால் அருளப்படுகின்றன.

வானவர்கள் இறக்கைகளுடன் பறந்து வருவதாகத் திருமறையில் கூறப்பட்டுள்ளது. இறக்கைகள் என்பவை உண்மையில் நாம் பறவைகளிடத்துக் காணும் இறக்கைகள் அல்ல. வானவர்களின் அளவிலா ஆற்றலைக் குறிக்கவே இறக்கைகளுடன் பறந்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது. நினைத்த உடன் நினைத்த இடங்களுக்கு வானவர்கள் செல்வர். வானவர்கள் ஒளியினின்று இறைவனால் படைக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு நம்மைப்போன்று பரு உடல்கள் இல்லை; நுண் உடல்களே உள்ளன. அவர்களுக்குப் பரு உடல்கள் இன்மையின் நம் புறக்கண்ணுக்கு அவர்கள் புலப்படார். அகக் கண்களாலேயே, ஆன்மீகக் கண்களாலேயே அவர்களைக் காணுதல் இயலும். "பின்னர் அல்லாஹ் தன் அமைதியைத் தன் திருத் தூதருக்கும் நம்பிக்கையாளருக்கும் அளித்ததுடன் வானவர்களையும் அனுப்பினான். அவர்களை நீங்கள் கண்டதில்லை" (9: 26). என்று குர்ஆன் கூறுவதால் வானவர்கள் இறைவனால் இம் மண்ணுலகில் உள்ள நம்பிக்கையாளர்களிடமும், திருத்தூதர்களிடமும் அனுப்பப்

படுவதும், அவர்களை நம் புறக் கண்களால் காணுதல் முடியாது என்பதும் அறியக் கிடக்கின்றது.

வானவர்களும் உயிரினங்களேயானாலும் அவர்களுக்கு மக்களைப் போன்ற பரு உடலும், பகுத்து அறியும் ஆற்றலும் இல்லை. இறைவனுக்குக் கீழ்ப்படிதலே அவர்களுடைய வேலை. கீழ்ப்படிய மறுத்தல் என்பதையே அவர்கள் அறியார். இறைவன் "இதைச் செய்" என்றால் உடனே அவர்கள் செய்வர். "அவர்கள் அல்லாஹ்வின் ஆணைக்குக் கீழ்ப்படிய மறுப்பதில்லை. இறைவன் இடும் ஆணைகளை அவர்கள் செய்து முடிக்கின்றனர் (66: 6) மனிதனுக்குள்ள மனம் வானவர்களுக்கு இல்லாததால் மனிதனே உயர்ந்தவனாகின்றான். அதனாலேயே வானவர்கள் மனிதனுக்குக் கீழ்ப் படிந்து நடக்கும்படி இறைவனால் ஆணையிடப்படுகின்றனர் (2: 34).

'ஜிப்ரயீல்' என்ற வானவரே முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்கும் அவர்களுக்கு முன் வாழ்ந்த நபிமார்களுக்கும் ஞான வெளிப்பாடுகளைக் கொண்டு வந்ததாகக் கூறப்பட்டுள்ளது (2: 97). அத்துடன் அவர்கள் பல சமயங்களில் மன வலிமையடைய உதவி செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது (2 : 87). நம்பிக்கையாளர்களுக்கு ஆறுதல் கூறுவதாகவும்(41: 30), தங்கள் பகைவர்களுக்கு எதிராக நம்பிக்கையாளர்களுக்கு உதவி செய்ய வருவதாகவும் (3 : 123, 124), நபிமார்களுக்காகவும், மற்ற நம்பிக்கையாளர் சார்பாகவும் அவர்கள் இறைவனைத் தொழுவதாகவும் (33: 56, 43), எல்லா மக்களையும் மன்னிக்கும்படி இறைவனை வேண்டுவதாகவும் (42 : 5), நம்பிக்கையாளர்களையும் பிறரையும் இறக்கச் செய்வதாகவும் (16 : 32, 4 : 97) மக்களுடைய செயல்களை அவர்கள் எழுதி வைப்பதாகவும் (28 : 10, 12) தீர்ப்பு நாளன்று மக்கள் சார்பில் இறைவனிடம் பேசுவதாகவும் (53 : 26) கூறப்பட்டுள்ளது. ஆதம் என்ற ஆதி மனிதனைத் தோற்றுவிக்குமுன் இறைவன் தன் விருப்பத்தை வானவர்களுக்கு அறிவித்ததாகக் கூறப்படுவதால் மனிதனுக்கு முன்பே வானவர்கள் இருந்தனர் என்பதை அறிந்து கொள்ளலாம். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருந்து செயலாற்றுவதே வானவர் வேலை. அதனால்தான் மனிதனைப் படைக்குமுன் தன் விருப்பத்தை அவர்களிடம் இறைவன் அறிவித்தான்.

புறவாழ்க்கையில் வானவர்கள் செய்யும் வேலை ஒன்றுமில்லை. மக்களுடைய ஆன்மீக வாழ்க்கையுடன் தான் வானவர்களுடைய வேலை இயைபுடையது. மக்களை ஆன்மீகத் துறையில் முன்னேற்றமடையச் செய்யவே வானவர் உதவுகின்றனர். உலகத்தினுடையவும், மக்களுடையவும் பரிணாம வளர்ச்சிக்கு உதவுவதே வானவர் வேலை. அதன் பொருட்டே இறைவனிடமிருந்து ஞானவெளிப்பாடுகளை

மக்களுக்குக் கொண்டு வருகின்றனர். இஸ்லாமியக் கோட்பாடுகளின்படி மனிதன் தாயின் கருவிலுள்ளது முதல், இறக்கும் வரையில், இன்னும் இறந்தபின் வானுலகிலும், மக்களுக்கும் வானவருக்கும் தொடர்பிருக்கின்றது. ஆன்மீகத் துறையில் வானவர்கள் ஆற்றும் செயல்கள் ஏழு பிரிவிலடங்கும். அவை வருமாறு :

முதலாவதும் முக்கியமானதும் இறைவனிடமிருந்து மெய்யடியார்களுக்கு ஞான வெளிப்பாடுகளைக் கொண்டு செல்வதேயாகும். அப்போது மெய்யடியார்கள் வானவர்களைக் காண்பதுடன் அவர்கள் மொழிவதையும் கேட்கின்றனர். வானவர்கள் சில சமயங்களில் மக்கள் உருவிலும் பிறசமயங்களில்வேறு உருவிலும் வருவதுண்டு. ஞான வெளிப்பாடுகள் நபிமார்களன்றி மற்ற மெய்யடியார்களுக்கும் அருளப்படுவதுண்டு. ஏசுநாதரின் தாயான மரியம் அம்மையாருக்கும், ஜானின் தந்தையான ஜக்கரியாவுக்கும் தங்களுடைய குழந்தைகளைப் பற்றிய நற்செய்திகளை வானவர்கள் அளித்தனர் என்று அறிகின்றோம்.

வானவர்களுடைய இரண்டாவது வேலை மெய்யடியார்கள் மேன்மேலும் வலிமையடைய உதவுவதாகும். அவர்கள் துன்பங்களில் உழலும் காலங்களில் மன ஆறுதலை அளிப்பர். ஏசுநாதருக்குப் பல சமயங்கள் இத்தகைய ஆறுதலும் மன வலிமையும் வானவர்களால் அளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஆரம்பகால முஸ்லிம்கள் தாம் சிறு தொகையினராக இருந்து கொண்டே பெரும் படைகளைப் போரில் புறமுதுகிட்டோடச் செய்தமைக்கு வானவர்களின் துணையே காரணம் என்பர்.

வலிமையடையச் செய்வதுடன் தொடர்புடையதே மூன்றாவதான தண்டனையளித்தல். நம்பிக்கையாளர்களுக்கு உதவுவது அவர்களுடைய பகைவர்களை ஒடுக்குவதேயாகும் அன்றோ? இதைப்பற்றித் திருமறை கூறுவதாவது: "அந்நாளில் சுவர்க்கத்தில் மேகங்களுடன் இடி முழக்கம் கேட்கின்றது—அத்துடன் வானவர் கீழிறங்கி வருகின்றனர். அன்று உலகமனைத்தும் பேரருளாளனை இறைவனுக்கே உரியதாகின்றது. நம்பிக்கையற்றவர்களுக்கு அன்று ஒரு கடுமையான நாளாகும்" (25: 25, 26).

மற்றொரு முக்கியமான தொழில்; நம்பிக்கையாளர், நம்பிக்கையற்றோர் எல்லோருக்காகவும் பரிந்து பேசுதலாகும். "சுவர்க்கத்தில் எவ்வளவு வானவர்கள் உள்ளனர்! அல்லாஹ் அனுமதியளித்தபின் அவர்கள் மற்றவர்களுக்காகப் பேச ஆரம்பிக்கின்றனர்" (53: 26) வானவர்கள் வானுலகில் இம் மண்ணுலகின் மக்கள் எல்லாருக்காகவும் இறைவனை வழிபடுகின்றனர். நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கை உண்டாகும்படியும், நம்பிக்கையாளர்களுக்கு மேன்மேலும் ஆன்மீக வளர்ச்சியும், வலிமையும் உண்டாகும்படியும் அவர்கள் இறைவனை வேண்டு

கின்றனர். பொதுவாக எல்லா மக்களுடைய தவறுகளை மன்னித்து விடும்படியும், தண்டனைகளைக் குறைக்கும்படியும் தவிர்க்கும்படியும் இறைவனை வானவர்கள் வேண்டுகின்றனர். மெய்யடியார்களை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்கின்றனர். அதனால் ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவுகின்றனர். நபிமார்களை வாழ்த்தி அவர்களால் உலகுக்கு நன்மைகள் பெருக உதவுகின்றனர்.

ஆன்மீக வளர்ச்சிக்கு உதவுவதே ஐந்தாவது வேலையாகும். மெய்யடியார்களை வலிமையடையச் செய்தலும், தீயவர்களுக்குத் தண்டனை அளித்தலும் ஒன்றுக்கொன்று இயைபுடையவைகளே. சுவர்க்கத்திலும் நரகத்திலுங்கூட வானவர்கள் இருந்து கொண்டு உயிர்களுக்கு உதவுவதாகக் கூறப்படுகின்றது. மனிதனுடைய ஆன்மீக வளர்ச்சி இன்றியமையாதது. அதன் பொருட்டே வானவர்கள் பல செயல்களையும் செய்கின்றனர்.

ஆறாவதாக, நற்செயல்களைச் செய்ய வானவர்கள் தூண்டுகோலாக உள்ளனர். ஒவ்வொரு உயிருடனும் இரண்டு துணைவர்கள் உள்ளனர். ஒன்று தீய செயல்களைச் செய்யத் தூண்டும். மற்றது நற்செயல்களைச் செய்யத் தூண்டும். பின்னது வானவர்; முன்னது ஜின் எனப்படும். தீமையை வென்று, அதாவது புலனிச்சைகளை வென்று நற்செயல்களைச் செய்ய மனிதன் முனைந்தால் வானவர் அவனுக்கு மேலும் மேலும் உதவி செய்து நற்செயல்களைச் செய்யத் தூண்டுவர். ஷைத்தானை அடக்கி ஆட்கொள்ளல் வேண்டும்.

ஏழாவது வேலை. மக்கள் அன்றாடம் செய்யும் செயல்களைக் குறித்து வைத்தலாகும். மக்கள் செய்யும் செயல்கள் யாவும் நல்லனவும், தீயனவும் குறிக்கப்பட்டு, தீர்ப்பு நாளன்று அவர்களுக்குக் காட்டுவதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு நம் வாழ்க்கையில்

பிரஸிடெண்ட்

வெஜிடபிள் ஹேர் ஆயில், ஸ்னோ, டால்கம் பவுடர் ஆகியவைகள் மிகச் சிறந்தவை என்பதை நான் உபயோகித்துக் கண்டு கொண்டேன்"—சாவித்திரி.

தயாரிப்பாளர்கள்:

ராதோட் டிரேடிங் கம்பெனி,

சௌகார் பேட்டை, சென்னை-1.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலாயா, இந்தோனேஷியா ஆகிய இடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.

பெரிதும் உதவும் வானவர்களிடம் முஸ்லிம்கள் நம்பிக்கை வைத்தல் இன்றியமையாததாகும். வானவர்களிடம் நம்பிக்கை வைத்தால் ஆன்மீக வாழ்க்கையிலும் நம்பிக்கை வைப்பதாகின்றது. அவ்வாழ்க்கையில் முன்னேற்றமடைவதற்கு வானவர்களின் உதவியையும், அவர்கள் கொண்டுவரும் ஞான வெளிப்பாடுகளையும் பெறுதல் இன்றியமையாததாகின்றது. வானவர்கள் நற்செயல்களைச் செய்யத் தூண்டுகின்றனர் என்பதனால் தீயசெயல்களைச் செய்யத் தூண்டும் ஜின்களும் உள்ளன என்று தெரிகின்றது.

பொதுவாக மக்கள் நினைக்கின்றபடி "இப்லீஸ்" முதலிய ஜின்கள் வானவர்களைப் போன்ற வல்லமை உடையவர்கள் அல்ல. இறைவனுடைய மறைமொழிகளை அவர்கள் அறியார். அதனால் அவர்களை வழிபடுவதால் நாம் முன்கூட்டியே வர இருப்பதை அறியலாம் என்பது பெரும் பேதைமையாகும். "ஜின்"கள் சுவர்க்கத்திற்குச் செல்லுதலும் இயலாது. இறைவனுடைய எண்ணங்களை அறிதலும் இயலாது. இறைவன் தன் எண்ணங்களை வானவர்களிடமே அறிவிக்கின்றான். அதை ஒட்டுக் கேட்டலோ, அல்லது அவர்களிடமிருந்து கேட்டு அறிதலோ 'ஜின்'களுக்கு இயலாது. அதனால் அவர்களை வழிபடுதல் பயனற்றதாகும். எனவே வானவர்களிடமே நம்பிக்கைகொண்டு அவர்கள் காட்டும் வழியிலேயே நடப்பதால் நாம் மேலும் மேலும் ஆன்மீகத் துறையில் முன்னேற்றம் அடையலாம். வானவர்கள் மீது நம்பிக்கை கொள்ளுதல் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும்.

திருமணம்

கும்பகோணம் அரசினர்க்கல்லூரியின் ஆங்கிலத் துறை ஆசிரியரும் நமது நண்பருமான திரு கே. வி. ஜானகிராமன், பீ. ஏ., அவர்களுக்கும் கீழக்கரை அரசினர் ஹமீதியா உயர் நிலைப் பள்ளி தலைமையாசிரியர் திரு கே. எஸ். வெங்கட சுப்பையர் அவர்களின் புதல்வி திருமதி கமலா அவர்களுக்கும் 21—6—56-ல் கீழக்கரையில் சிறப்பாக விவாகம் நடந்தேறியது.

புதுமணத் தம்பதிகள் நீடூழி வாழ்க!

—ஆசிரியர்.

உமர் (ரலி)

"ஃபாரூக்" என்று பெயர் பெற்றதேன்?

அன்புள்ள தம்பி!

முஹம்மது நபி (ஸல்) அவர்களையும் அழைத்துக் கொண்டு, உருவிய வாளுடன் கஅபாவை அடைந்த உமர் (ரலி) அங்கே என்ன கண்டார்கள் தெரியுமா? குறைஷிகளின் ஆட்கள் முப்பது பேர் நபிகள் நாயகத்தின் வரவுக்காக அங்கே எதிர்பார்த்திருந்தனர். முஹம்மது நபியவர்களுக்கு அருகிலே அஞ்சா நெஞ்சரான உமர் தமது உருவிய வாளுடன் நிற்பதைக் கண்ட அந்த முப்பது பேர்களும், அதிக் அச்சத்தால் நடுங்கிப் போயினர்; முஹம்மது நபியையும், அவர்களின் புதிய இஸ்லாமியத் தோழரையும் உற்றுப் பார்த்துக்கொண்டே சற்று நேரம் நின்றனர். அப்பொழுதுதான் உமர் தமது உரத்த குரலில் பின்வருமாறு கூறினார்கள்: "எவன் தன்னுடைய தலையைத் தன் தோள்களின் மீது வைத்திருக்க விரும்பவில்லையோ அவன் இங்கே இருக்கட்டும்!" என்று உமர் கர்ஜித்தவுடன் அந்த முப்பது பேர்களும் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்!

தம்பி, இதற்குப் பிறகுதான் உலகிலே பகிரங்கமாக இஸ்லாம் நடமாடத் துவங்கியது. இஸ்லாத்தைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளாமல் இரகசியமாக ஆதரித்து வந்தவர்களனைவரும் இப்போது தாங்கள் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டதாக வெளிப்படையாகவே அறிவித்து விட்டனர். இஸ்லாமியக் குழந்தைகள் கூட மக்காவின் வீதிகளிலே இஸ்லாத்தைப் பற்றிப் பேசத் துணிந்து விட்டனர்! இதற்குப் பிறகு

இஸ்லாமிய இறை வணக்கமும் பகிரங்கமாகவே நடைபெற்றது. அபூபக்ர் (ரலி) கூட தமது வீட்டில் குர்ஆனை உரத்த குரலில் ஓத முடியாத காலம் ஒன்று இருந்தது. ஆனால் இப்பொழுது முஸ்லிம்கள் கூட்டமாகச் சென்று கஃபாவில் தொழத் துவங்கி விட்டனர். விக்கிரக வணக்கக்காரர்கள் தங்கள் 360 தெய்வங்களையும் கஅபாவில் வணங்கிக் கொண்டிருந்த அதே சமயத்தில் முஸ்லிம்கள் ஏக இறைவனைத் தொழுது, அவனது பெருமைகளையும் போற்றல்களையும் பற்றிப் புகழ் பாடத் துவங்கி விட்டனர்.

தம்பி! இத்துணைப் பெரிய மாறுதலுக்கு நமது கதா நாயகரான உமரே காரணம். உமர் இஸ்லாத்திற் சேருவதற்கு முன்பே அவர்களுடைய வாளின் வலிமையைக் கண்டு குறைஷிகளெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தனர்!

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு உமர் அவர்கள் தமது உடல் பொருள் ஆவியனைத்தையும் இஸ்லாத்தின் வெற்றிக்காகவும் கண்ணியத்திற்காகவும் முன்னேற்றத்துக்காகவுமே முழு மனத்துடன் அர்ப்பணித்து விட்டார்கள் என்று கூறலாம்.

தம்பி! உமரைப் போன்ற உன்னத மனிதர்களின் உள்ளங்களைக் கவர்ந்த பெருமை உலக வரலாற்றிலேயே இஸ்லாத்துக்குத் தான் உரியது.

திருநபி முஹம்மது (ஸல்) அவர்களையன்றி வேறெந்த இறை தூதரும் உண்மையான பக்தியும் விசுவாசமும் நிறைந்த மனிதர்களைத் தமது தோழர்களாக அடையும் பேறு பெற்றிருந்ததாகத் தெரியவில்லை.

உண்மைக்கும் பொய்மைக்குமுள்ள வேற்றுமையை உமர் நன்கு உணர்ந்து கொண்டமையால் அவர்கள் உண்மையின் பக்கமே உறுதியாக நின்றார்கள்.

இஸ்லாத்துக்கு விரோதமாகத் திரண்டிருந்த சக்திகளையெல்லாம் எதிர்த்து நின்று போராடக் கூடிய தைரியமும் தன்னம்பிக்கையும் உமரிடம் நிறைந்திருந்ததற்குக் காரணம் அவர்களின் தோள்வலி மட்டுமல்ல; உண்மைக்கும் பொய்க்குமுள்ள வேற்றுமையை அவர்கள் நன்கு புரிந்து கொண்டார்கள் என்பதே. இக்காரணம் பற்றித்தான் நபிகள் நாதர் (ஸல்) தமது தோழரான உமருக்கு 'ஃபாரூக்' என்று பெயரிட்டார்கள். மெய்மைக்கும் பொய்மைக்குமிடையிலுள்ள வேற்றுமையைக் கண்டு பிடிப்பவர் என்பதே இதன் பொருள்! இஸ்லாமிய சரித்திரத்தில் இவர்களின் பெயர் உமறெ ஃபாரூக் என்று வழங்குவதற்கு இதுதான் காரணம்.

"உமரின் மதமாற்றம் இஸ்லாத்தின் வெற்றிக்கு முதற்படியாக விளங்கிய"தென்று அப்துல்லா இப்னு அப்பாஸ் என்னும் இஸ்லாமிய சரித்திராசிரியர் கூறுகிறார். "உமரின் மதமாற்றம் குறைஷிகளின் இதயத்திலேயே இஸ்லாத்தை வேரூன்றச் செய்து விட்டது" என்று ஹஜ்ரத் அலீ (ரலி) கூறுகின்றார்கள்.

தம்பி! இத்துணைப் பெருமை மிக்க உமரின் வரலாறு இன்றைய முஸ்லிம் இளைஞர்களுக்கு

ஒரு முன்மாதிரியாக அமைய வேண்டும். நமது இளவல்கள் இன்று அறியாமைக்கு அதிகமாய் அடிமைப்பட்டு கிடக்கின்றனர். நன்மை தீமைகளைப் பகுத்துணரும் அறிவும் திறனும், சுயமாக சிந்தனை செய்யும் பழக்கமும் இன்று நம் இளைஞர்களிடம் காண்பது அரிதாகி விட்டது. இஸ்லாத்தின் மீதும் அதன் இறுதி வெற்றியிலும் இன்றைய இளைஞர்கள் நம்பிக்கையில்லாதவர்களாய்க் காணப்படுகின்றனர். உமரின் தன்னம்பிக்கையும் தீரமும் இன்றைய இஸ்லாமிய இளைஞரிடம் மருந்துக்குக்கூட காண்பதரிதாகி விட்டது. இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைளில் ஆழ்ந்த நம்பிக்கையின்மையும், அவைகளைப் பின்பற்றியொழுகுவதில் அக்கறையின்மையுமே இன்றைய இஸ்லாமிய இளைஞர்களின் இரங்கத்தக்க நிலைக்குக் காரணம். தம்பி! இன்று இஸ்லாமிய உலகம் மறுமலர்ச்சி பெறவேண்டுமாயின் எண்ணிறந்த இளம் ஃபாரூக்குகள் தேவைப்படுகின்றனர். அவர்களில் நீயும் ஒரு ஃபாரூக்காக விளங்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். எண்ணமே மனிதனை உருவாக்குகிறது என்பதில் ஐயமில்லை. நீயும் ஒரு ஃபாரூக்காகத் திகழவேண்டுமென்று விரும்பினால் அவ்விதமே திகழ்வாய் என்பது திண்ணம். தாழ்வு மனப்பான்மையை விட்டொழித்தால் வாழ்வு பெறலாம். இஸ்லாம் வாழவேண்டுமானால், ஒவ்வொரு இளைஞனும் உமரெ ஃபாரூக் ஆக விளங்க வேண்டும்.

எஸ். ஏ. கமால்.

திருமணம்

எம். முஹம்மது இஸ்ஹாக்

எங்கள் சகோதரர் எம். முஹம்மது இஸ்ஹாக் மணமகனுக்கும், மேலக்காவேரி, ஜனாப் கா. அப்துல் கபூர் சாயபு அவர்களின் புதல்வி ஜுபைதா பேகம் மணமகளுக்கும் திருமண வைபவம் 29—6—56-ல் எங்கள் இல்லத்தில் சிறப்புடன் நடைபெற்றது. அவ்வமயம் வருகை தந்து சிறப்பித்தவர்களுக்கும், உள்நாடு, பர்மா, மலாயாவிலிருந்து வாழ்த்துக்கள் அனுப்பிய அன்பர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தங்களன்புள்ள,

எம். அப்துல் லத்தீப்,

எம். அப்துஸ் ஸமத்,

மேலக்காவேரி, கும்பகோணம்.

புலவருள்ளம்

பெ. கு. ஊரப்பன்

பழங்காலத்தில் தமிழகத்தில் பல புலவர்கள் வாழ்ந்ததாக அறிகிறோம். அவர்களனைவரும் வாழ்க்கையின் இயல்பினை உணர்ந்தவர்கள். வாழ்க்கை எத்தகையது என்று அறிந்ததோடு அவ்வியல்பை நமக்கு முணர்த்துகிறார்கள். அவர்கள் உள்ளம் நல்ல முறையில் பண்பட்டிருந்ததைக் காணலாம். உலகத்திலுள்ள மக்கள் யாவரும் நலமுடன் வாழவேண்டுமென்று விரும்பினார்கள். பொறாமை, சூது, வாது, களவு போன்ற தீய குணங்கள் அவர்களிடமில்லை. நல்லோர் போற்றும் சிறந்த குணங்களே அவர்களிடம் காணப்பட்டன. அவர்கள் உள்ளம் மாசு மறுவற்றது. நல்லனவற்றையே எண்ணியது அவர்கள் உள்ளம். அவர்களிடம் சிறந்த அறிவு அமைந்திருந்ததோடு உணர்ச்சியும் அமைந்திருந்தது. ஒன்றை அறிவது வேறு, உணர்வது வேறு. இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. உதாரணமாக மனிதன் வீதி வழியாக செல்கின்றான் என்று வைத்துக் கொள்வோம். செல்லும் வழியில் பிச்சைக்காரன் பசியால் படுத்துக்கொண்டு துன்புறுகிறான். சென்ற மனிதன் பிச்சைக்காரனைக் கண்டு என்ன எண்ணுகிறான்? பசியால் வாடுகிறான் என்பதை அறிகிறான். ஆனால் உணர்வதில்லை. அறிந்தவன் என்ன செய்கிறான்? நாம் என்ன செய்வது? ஏன் இவ்வாறு வேலை செய்யாமல் வருந்த வேண்டும்? உதவி செய்தால் நல்லது தான். ஆனால்....என்று எண்ணிக் கொண்டே செல்கிறான். அதோடு நின்று விடுகிறது அவனுடைய அறிவு உள்ளம். ஒரு பிச்சைக்காரன் பசியால் வருந்துகிறான் என்பதை அறிந்தவன், 'நாம் வருந்தினும் அவ்வாறு தானே துன்பப்படுவோம்' என்று உணர்ந்திருந்தால் உடனே உதவி செய்ய அவன் மனம் எண்ணியிருக்கும். எண்ணியவாறு தன்னாலியன்ற உதவியை அவன் செய்திருப்பான். ஆனால் அந்த உணர்வு அவனிடம் காணவில்லை. எனவே மக்கள் அறிவோடு நின்றுவிடாமல் உணர்ந்து தங்கள் கடமையைச் செய்ய வேண்டும்.

பழங்காலத்திலிருந்த புலவர்களனைவரும் அறிவோடு உணரவும் செய்தார்கள். துன்பத்தைக் கண்டவுடனதைப் போக்க முயன்றனர். ஆபத்து கண்டவிடத்து ஆறுதல் கூறி அன்பு செய்ய முயற்சித்தனர். அவர்கள் அன்பே உருவாக இருந்தார்கள் என்றால் அது, மிகையாகாது. அவர்களிடம் அன்பு, அறம், பொறுமை, இரக்கம் போன்ற சிறந்த குணங்கள் பொருந்தியிருந்தன. அவர்கள் வாழ்க்கையி

னும் அக்குணங்களைக் கடைப்பிடித்தார்கள். அவர்களைப் போன்றே மற்ற மக்களும் இருக்க வேண்டுமென்று விரும்பினார்கள். மற்ற மக்களும் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமென்று எண்ணினர். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதன்றோ சான்றோரின் இயல்பு. சிறந்த குணங்களையெல்லாம் மக்களுக்கு எடுத்துக் கூறினார்கள். தீய குணமுள்ளவர்களையும் நற்குணமுடையவர்களாக்க முயன்றனர். எல்லோரும் நல்லோராக இருக்க வேண்டுமென்று விரும்பியது அவர்கள் உள்ளம். இன்று எத்தனை பேரிடம் இந்தக் குணம் காணப்படுகிறது? தீயவர்களை நல்லோராக்கும் முயற்சி இன்று நாட்டில் நடைபெறுகின்றதா? மாறாக நல்லோர்களைத் தீயவராக்கமுயற்சிக்கிறார்கள்! தீயவர்களைத் திருத்தாவிட்டாலும் நல்லோரைக் கெடுக்காமலிருக்கலாம். அவ்வாறு இருந்தால் அதுவே நாட்டிற்கு அவர்கள் செய்த தியாகம்.

பழங்காலத்தில் இத்தகைய மனிதர்களைக் காணுதலரிது. எல்லோரும் நல்லோர்களாகவே இருந்தார்கள். அவ்வாறு வாழ்ந்த பல புலவர்களிலொருவரின் உள்ளத்தைப் பார்ப்போம். பெருஞ்சித்திரனார் என்ற ஒரு புலவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் வாழ்ந்து வந்தார். அவர் வாழ்க்கையில் வறுமை குடிகொண்டது. பல நாளாக அவர் வறுமையால் வாடலுற்றார். பழங்காலப் புலவர்கள் அரசர்களிடம் சென்று அவர்களைப் புகழ்ந்து பாடி பரிசில் பெறு

ரும் குமணன் என்ற மன்னனிடம் செல்கிறார். குமணன் எத்தகைய வள்ளல் தன்மையுடையவன் என்பதைத் தமிழகமறியும். ஒரு சமயம் அவன் காட்டிலிருந்தான். அப்போது புலவரொருவர் அவனிடம் வருகிறார். புலவரைக் கண்ட புரவலன் மனம் வருந்துகிறது. 'இப்போது நாம் எவ்வாறு புலவரின் வறுமையைப் போக்குவது?' என்று சிந்தித்தான். மன்னனின் தம்பி, குமணன் தலையைக் கொண்டு வருவோருக்குப் பரிசளிப்பதாக பறை யறைவித்திருந்தான். அது மன்னனின் நினைவிற்கு வருகிறது. அந்நினைவு வந்தவுடன் அவனகம் மகிழ்ந்தது. உடனே மன்னன் தன்னிடமிருந்த வாளைப் புலவரிடம் கொடுத்து, "என் தலையைக் கொண்டு சென்று பரிசில் பெற்று நீங்கள் நலமுடன் வாழ்வீர்" என்று சொன்னான். அத்துணை கருணை பொருந்திய பெருமகனல்லவா அவன்! புலவரின் வாழ்க்கைக்காகத் தன்னுடைய வாழ்க்கையைத் தியாகம் செய்ய எண்ணியது அவனுள்ளம். அத்தகைய சிறந்த உள்ளத்தைக் கொண்டவனவன். அத்தகையவனிடந்தான் பெருஞ்சித்திரனார் சென்று அவன் புகழைப் பாடுகிறார். இவர் அறிவின் திறமையைக் கண்டு வியந்து பரிசில்களை அளித்தான் குமணன். புலவரும் மகிழ்ச்சியுடன் அப்பரிசிலைப் பெற்றுத் திரும்பி வந்தார். வறுமையால் வாடியவன் திடீரென்று புதையலைப் பெற்றால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவான்! வீட்டிற்கு வந்தவுடன் தன் மனைவியிடம் செய்தியைத்

மர் மட்டும் அநுபவிக்க விரும்ப
ல்லை. அவர் போன்று வறுமை
ல் வாழும் எல்லோரும் பெற
வண்டுமென்று எண்ணினார்.
ன் மனைவியிடம் சொல்கிறார்.
நீ இப்பொருளை உனக்கு வேண்
யவர்கள் எல்லோர்க்கும் எடுத்
துக் கொடு. நீ விரும்புகின்றவர்
ளுக்கும் உன்னை விரும்புகின்ற
ர்களுக்கும் எடுத்துக் கொடு.
றந்த குணங்களமையப் பெற்ற
ன் சுற்றத்தார்க்கும் கற்புடைய
ங்கையர்களுக்கும் வாரிவழங்கு.
சியால் வாடுகின்றவர்களின் பசி
ங்குமாறு அவர்களுக்கு நீ
காடு. இவர்களுக்குத்தான்
கொடுக்கவேண்டும், இவர்களுக்
குக் கொடுக்கக் கூடாது என்ற
ாகுபாடில்லாமல் எல்லோர்க்
கும் கொடு. என்னைக் கேட்டுத்
ான் நீ கொடுக்க வேண்டுமென்
தில்லை. என்னைக் கேட்காம
லேயே நீ கொடுக்கலாம். உன்
விருப்பப்படி நீ எல்லோர்க்கும் எடு
த்து வழங்கு'' என்று கூறுகிறார்.

உதாரணமாக இன்று வறுமை
பால் வாடு மொருவனுக்குச்
சிறிது செல்வம் வந்தால் என்ன
எண்ணுகிறான்? "இதைவைத்துக்
கொண்டு நாம் இன்னும் சிலநாள்
காலம் கழிக்கலாம். இன்னும்
சிலநாள் வரைக்கும் நமக்குச்
சோற்றைப்பற்றிக் கவலை இல்லை.
இனிமேல் சோற்றிற்காக நாம்
வெளியே செல்ல வேண்டிய
தில்லை'' என்றெல்லாம் எண்ணு
கிறான். எத்தனை பேர் அவனைப்
போல் வறுமையால் வாடுகின்றார்
கள்! நமக்குக் கிடைத்த பொரு
ளில் அவர்களுக்கும் சிறிது
கொடுத்தால் அவர்களும் சுகமுட
னிருப்பார்களல்லவா? நாம்
மகிழ்ச்சி அடைவதைப் போல்
அவர்களும் மகிழ்ச்சி அடைவார்
கள். ஆகையால் அவர்களுக்கும்
கொடுக்கலாம் என்று எண்ணுவ
தில்லை. சிறிது பொருள்வந்தவுடன்
சுயநலம் குடிகொள்கிறது. தான்
வருந்தும் போதிருந்த எண்ணம்
பிறகு இருப்பதில்லை. இந்தக் காட்
சியை இன்று நாம் நேரில் காண்கி
றோம். ஆனால் இரண்டாயிரம் ஆண்
டுகளுக்கு முன் வாழ்ந்த புலவர்
என்ன செய்தார்? தம்மைப்போல்
பிறரும் வாழ வேண்டுமென்று
விரும்பினார். சுயநலம் அவரிடம்
சிறிதும் இல்லாமலிருந்தது. பிறர்
நலம் பேணும் பெரியாராக விளங்
கினார். பிற மக்களுடைய நலத்
தை—மகிழ்ச்சியை--விரும்பியது
அந்த உள்ளம். இப்பண்பு—பிற
மக்களைக் கண்டு இரங்கி உதவி
செய்கின்ற தன்மை எல்லோர்க்
கும் அமைந்துவிடுமா? சிந்தித்
துப் பாருங்கள், அவருடைய
தியாக உள்ளத்தை. அத்தகைய
பெரு மக்கள் எல்லாம் வாழ்ந்த
தாலன்றோ தமிழகம் இன்றும்
உயிருடனிருக்கிறது? அவரு
டைய உள்ளத்தை நமக்குப் புற
நானூறு படம் பிடித்துக் காட்டு
கிறது :

"நின்னயந்துறைநர்க்கு நீ
நயந்துறை நர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத
லோர்க்கும்.
கடும்பின் கடும்பசிதீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி
யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடும்
சூழாது
வல்லாங்கு வாழ்துமென் னாது நீயு
மெல்லோர்க்குங் கொடுமதி மனை
கிழவோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணனல் கிய
வளனே"
(புறம்)

“மஹதி”

மொகலாயர்களின் இறுதிக் காலம்.

ஒளரங்கஜேபுக்குப் பின் மாபெரும் சாம்ராஜ்யம் சிதறுண்டது. உலகப் பிரசித்திபெற்ற மகோன்னத ஆட்சி மங்கி மறைந்துகொண்டிருந்தது. டில்லியும், அதைச் சுற்றிலுமுள்ள ஊர்களுமே எஞ்சின.

ஒரு நாள். மனோகரமான மாலை வேளை.

டில்லி செங்கோட்டைக்குள், கலா மண்டபத்தில் மன்னர் முஹம்மத் ஷா, நடன ராணி அத்ஹம் பாயின் நாட்டியத்தை ரசித்துக் கொண்டிருந்தார். மேஜை மீது உயர்தரமான மதுவகைகள் வைக்கப்பட்டிருந்தன.

மந்திரி கமருத்தீன் பரபரப்புடன் உள்ளே நுழைந்தார். நாட்டியக்காரியின் நளினமான அங்க அசைவிலும், சதங்கைகளின் இன்ப நாதத்திலும் அரசர் லயித்திருப்பதைக் கண்டார். அவரை அணுகி இரகசியம் பேசினார்.

“ஆலம்பனாஹ்! ஆபத்து! ஆப்கானிய மன்னன் அஹமத் ஷா அப்தாலி, டில்லியை நோக்கிப் படையெடுத்து வருகிறான். லாஹூரை நெருங்கிவிட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. நாளைக் காலையிலேயே யுத்தத்திற்குப் புறப்பட வேண்டும்.”

மதுமயக்கத்தில் இருந்த பாதுஷா மந்திரியை ஏறிட்டுப் பார்த்தார்.

“என்ன சொல்லுகிறீர்? அப்தாலி வருகிறானா? அவன் ஏன் இங்கே வருகிறான்? ‘அல்லாஹ்வே’ என்று என் பாட்டுக்குச் சுவையான மதுவகைகளை அருந்திக் கொண்டு அத்

ஹும்பாயின் அற்புதமான நாட்டியக் கலையை அனுபவித்துக்கொண்டிருக்கும் போது என்னை ஏன் தொந்தரவு செய்யவருகிறான்? பிச்சைக்காரப் பயலைப் போகச் சொல்லுங்கள். என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று சொல்லுங்கள்''

''ஆலம்பனுஹ்! அவன் நமது ராஜ்யத்தைக் கைப்பற்ற வருகிறான். யுத்தம் செய்தே அவனை விரட்ட வேண்டும். வேறு வகையில் போக மாட்டான். நமது ராஜ்யம் அழிந்துவிடும். மொகலாயர் கௌரவத்துக்கே களங்கம் ஏற்படும்.

'' உங்களுக்கு வயதாகி விட்டது மந்திரி! ஏதேதோ உளறுகிறீர். கலைகளை ரசிப்பதை விட்டுவிட்டு கத்தி எடுத்துக் கொண்டு மனிதர்களைக் கொலை செய்யக் கூப்பிடுகிறீர். நீங்கள் போய் ஏதாவது செய்யுங்கள். என்னை இந்தச் சொர்க்கத்திலிருந்து வெளியே வரச் சொல்லாதீர்கள். போங்கள்!''

''ஆலம்பனுஹ்! அரசர் தலைமை தாங்கிப் போரை நடத்தினுல் தான் சிப்பாய்கள் உற்சாகத்துடன் சண்டை செய்வார்கள்''

''அப்படியானுல் என் மகன் அஹமத்ஷாவை அழைத்துச் செல்லுங்கள். அவன் சூரப்புலி, என்னுடனேயே சண்டைக்கு வருகிறான்!''

''அப்படியே, ஆலம்பனுஹ்''

மந்திரி வெளியேறினுர்.

அன்று இரவு மணி பதினென்று இருக்கும். இளவரசர் அஹமத் ஷாவின் அறையில் இன்னும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவர் இங்கும் அங்கும் உலாவிக் கொண்டிருந்தார். முகத்தில் கவலைக் குறிகள் காணப்பட்டன.

வாசலில் தொங்கிக் கொண்டிருந்த பெரிய திரை விலகிற்று. அழகிய பருவ மங்கை ஒருத்தி ஓசையின்றி உள்ளே நுழைமறாள். அவள் ஒரு பணிப் பெண்.

''இளவரசே! இன்னும் தூங்கவில்லையா?''

''யார்? லாலாரங்க்! இந் நேரத்தில் எங்கு வந்தாய்?''

''விளக்கு எரிந்து கொண்டிருந்தது. நாளை போருக்குப் புறப்படுவதால் கவலையாயிருப்பீர்களோ என்று பார்க்க வந்தேன்.''

''ஆம்! கவலைதான்! போருக்குப் புறப்படுவதற்காகக் கவலைப்படவில்லை. போரில் மடியவும் அஞ்சவில்லை. என் தந்தை இப்படிக் கோழையாகி விட்டாரே என்று தான் கவலைப்படுகிறேன். வாட்களின் நிழலிலே வளர்ந்து, வீர வாழ்வு வாழ்ந்து, உலக சரித்திரத் திரத்திலே அழியாப் புகழ் பொறித்துச் சென்றவர்களின் வழித் தோன்றல்கள் மது மயக்கத்திலும் மங்கையரின் நடனத்திலும் நெஞ்சைப் பறிகொடுத்து விட்டனரே என்று விசனிக்கிறேன். வீரர்கள் சுகவாசிகள் ஆகி விட்டார்களே என்று நெஞ்சம் குமுறுகிறது. மக்களோ நிலையை உணரவில்லை. அடிமை மனப்பான்மை வளர்ந்து விட்டது. உரிமைகள் பறிபோனுல் என்ன? தினசரி பிரியாணி வயிறு நிறையக் கிடைத்தால் போதும் என்று எண்ணத் தொடங்கி விட்டனர். நெஞ்சங்களிலே சுதந்தரக் கனல் வீசவில்லை. இவர்களுக்கு எப்படிப் புத்தி புகட்டுவேன் என்றுதான் கவலைப்படுகிறேன். லாலாரங்க்!''

''கவலைப்பட வேண்டாம். உறுதியைக் கைவிடாது அல்லாஹ்வை நம்பிக் காரியத்தில் இறங்குங்கள். அல்லாஹ் உதவி செய்வான்''

''அவன் எங்கே எங்களைக் கவனிக்கப் போகிறான். நாங்கள் அவனை விட்டு வெகுதூரம் விலகி விட்டோம். மகா பாபிகள் ஆகி விட்டோம். நாம் அவனை மறந்

தோம். அவனும் நம்மை மறந்து விட்டான்.''

''அப்படிச் சொல்ல வேண்டாம். அல்லாஹ் தண்டிப்பதிலும் பெரியவன்; மன்னிப்பதிலும் பெரியவன். இதுவரை செய்த தவறுகளுக்கு மன்னிப்புக்கோரி மனம் திரும்பினுல் நிச்சயம் நம்மை மன்னித்து உதவி செய்வான்''

''அந்த நம்பிக்கையும், மனப் பாங்கும் போய் விட்டனவே!''

''தங்கள் தந்தைக்கு அந்த மனப் பாங்கு இல்லாமல் இருக்கலாம். தங்களுக்கு இருக்கிறது என்பதைத் தங்கள் உணர்ச்சியே வெளிப்படுத்துகிறது. இரண்டு 'ரக்அத்' தொழுது பிரார்த்தனை செய்யுங்கள். மன நிம்மதி ஏற்படும். நிம்மதியும், வெற்றியில் உறுதியுமே போருக்குப் புறப்படுமுன் தேவை''

''லாலாரங்க்!''

''இளவரசே!''

''நான் ஏதோ நினைக்கிறேன், நீ ஏதோ உபதேசம் செய்கிருய். உன் புல்லாங் குழல் எங்கே?''

''இதோ மடியிலேயே இருக்கிறது.''

''அதை எடுத்து வாசி. அப்போதான் என் மனத்திற்கு நிம்மதி ஏற்படும்.''

''முதலில் தொழுது கொள்ளுங்கள். பிறகு வாசிக்கிறேன்.''

''எனக்குக் கட்டளையிடும் அளவுக்கு அவ்வளவு உரிமை பெற்று விட்டாயா?''

''மன்னிக்க வேண்டும் இளவரசே!''

''உம்! சரி! 'ஒலூ'ச் செய்ய தண்ணீர் கொண்டுவா.''

லாலாரங்க் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். இளவரசர் அஹமத்ஷா ஒலூச் செய்து தொழுதார். ''யா அல்லாஹ்! எங்கள் தவறுகளை மன்னித்து விடு. என் நெஞ்சுக்கு உறுதி அளி. போரிலே வெற்றியைக் கொடு'' என்று 'துவா'ச் செய்தார்.

'ஆமீன்' என்ருள் லாலாரங்க்.

இளவரசர் கட்டிலில் சாய்ந்து படுத்துக்கொண்டு 'இப்போது வாசி' என்ருர்.

லாலாரங்க் வாசிக்கத் தொடங்கினுள். புல்லாங் குழலின் இனிய நாதம் அவரைப் பரவசப்படுத்திற்று; மெய் மறந்தார். சிறிது நேரத்தில் அவர் கண்கள் மூடிக் கொண்டன.

இளவரசர் தூங்கி விட்டார் என்று நினைத்த லாலாரங்க், வாசிப்பதை நிறுத்தி அவர் தலையணையைச் சரி செய்தாள்.

இளவரசர் கண்களைத் திறந்து கொண்டார்.

''என்ன செய்கிருய் லாலா? ஏன் வாசிப்பதை நிறுத்தி விட்டாய்?''

''தாங்கள் தூங்கி விட்டதாக நினைத்து—''

''ஹும்! நான் தூங்கவில்லை கண்களை மூடிக்கொண்டு உன்

புல்லாங் குழலின் இன்ப நாதத்தை ரசித்தேன்''

''கண்களை மூடிக் கொண்டு ஏன் ரசிக்க வேண்டும்?''

''கண்களைத் திறந்து கொண்டிருந்தால் அவைகள் உன்னைப் பார்க்கின்றன; உன் ஆப்பிள் நிறக் கன்னங்களிலே லயிக்கின்றன. காதுகள் இசையைக் கேட்பதை நிறுத்தி விடுகின்றன; ஒரே வேளையில் ஏதாவது ஒன்றைத் தான் அனுபவிக்க முடியும்போல் தோன்றுகிறது''

''போங்கள் இளவரசே! கேலி செய்கிறீர்கள்;''

''உன் செந்நிறத்துக்காக நான் தானே லாலாரங்க் என்று பெயரிட்டேன்'' (லாலாரங்க்—செந்நிறத்தாள்)

''அப்படியானால் நான் பெயரை மாற்றிக் கொள்ளப் போகிறேன்''

''புல்லாங் குழல் மோகினி'' என்று வைத்துக் கொள்''

''ஊஹூம்! என் பழைய பெயர் பாத்திமாவே இருக்கட்டும்''

''அந்தப் பெயர் வைத்துக் கொண்டால் உன் பழைய உறவினன் [illegible]
வான். ஜாக்கிரதை! அவனுடன் அன்று மல் யுத்தத்துக்கே தயாராய் விட்டாயே! கத்தி எடுத்துக் குத்தவும் போய் விட்டாயே!

''அந்த முரடனின் பெயரை உச்சரிக்கவே வேண்டாம். நல்ல வேளையாகத் தாங்கள்தான் வந்து காப்பாற்றினீர்கள். இல்லாவிட்டால் என்ன நடந்திருக்குமோ!''

''கலா ஞானம் இல்லாதவன், உன் புல்லாங் குழல் இசையை ரசிக்கத் தெரியாமல் உன் அழகில் மயங்கி விட்டான்; வம்பு செய்யத் தொடங்கி விட்டான், சரி! நேரம் ஆகிறது. நீ போகலாம்''

''இளவரசே! ஒரு வேண்டுகோள்.''

''என்ன வேண்டுகோள்?''

''என்னையும் போர்க்களத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்''

''கொல்லன் பட்டறையில் ஈக்கு என்ன வேலை?''

''ஈ நினைத்தால் கொல்லனின் மூக்கில் 'நொய்' என்று நுழைந்து அவன் மூளையைக் குழப்பிவிட முடியும்.

''ரொம்ப கெட்டிக்காரிதான்!''

''அத்துடன் ருசியாகச் சமைத்துத் தருவேன்; பணிவிடைகள் செய்வேன்; உற்சாக மூட்டப் புல்லாங் குழல் வாசிப்பேன்''

''அப்படியானால் நீயும் வரலாம்''

''ரொம்ப நன்றி! இளவரசே! ரொம்ப நன்றி'' என்று கூறிக் கொண்டே குதித்துக் கொண்டு வெளியே ஓடினாள் லாலா ரங்க்.

∴ ∴ ∴

1748 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11-ஆம் தேதி. மானுபூருக்கு அருகில் அப்தாலியின் படையும், டில்லிப் படையும் எதி

எதிரே அணி வகுத்து நின்றன. மறுநாட் காலை போர் தொடங்குவதாக டில்லி இளவரசர் தீர்மானித்திருந்தார்.

திடீரென்று இரவிலேயே அப்தாலியின் பீரங்கிகள் நெருப்பைக் கக்கத் தொடங்கின. டில்லி வீரரும் திருப்பிச் சுட்டனர். இருபுறமும் குண்டுமாரி ஆரம்பமாயிற்று.

அப்தாலியிடம் துப்பாக்கி மருந்து அதிகம். பீரங்கிகளும் பெரியவை. டில்லிப் படையின் மத்தியில் நெருப்பு மாரி பெய்யத் தொடங்கிற்று.

மந்திரி கமருத்தீனும், இளவரசர் அஹமத் ஷாவும் போர் வீரர்க்குக் கட்டளைகள் இட்டுக் கொண்டிருந்தனர். 'டுமீல்' என்று ஒரு குண்டு மந்திரிக்கு அருகில் விழுந்து வெடித்தது. 'யா அல்லாஹ்' என்று கூறிக்கொண்டே அவர் சாய்ந்தார். உடனே உயிர் பிரிந்தது. அவருடைய மகன் முயீனுல் முல்க் அப்பதவியை ஏற்றுச் செயலாற்றத் தொடங்கினன்.

மந்திரி கமருத்தீன் இறந்து விட்டார் என்று கேள்விப்பட்டவுடன் டில்லி வீரர்கள் கலக்கமடைந்தனர். அவர்களிடையே குழப்பம் தோன்றிற்று.

இளவரசர் அஹமத்ஷா உற்சாகமிழந்தார். கைகளைப் பிசைந்துகொண்டே கூடாரத்திற்குள் நுழைந்தார்.

அங்கே லாலாரங்க் நிம்மதியாக உட்கார்ந்து தொழுது 'துவா' ஓதிக் கொண்டிருந்தாள்.

இளவரசரைக் கண்டதும் எழுந்துவந்து "இளவரசே! அஞ்ச வேண்டாம். அல்லாஹ் நிச்சயம் வெற்றியளிப்பான்" என்றாள்.

"என்ன நெஞ்சம்! குண்டுமாரி ஈரல் குலையை அதிரச் செய்கிறது. உனக்கு நிம்மதி! போர் வீரர் குழப்பமடைந்துவிட்டனர். உனக்கு வெற்றியில் உறுதி! நீ ஆணுய்ப் பிறந்திருக்க வேண்டியவள். புல்லாங்குழல் மோகினியாய்ப் பிறந்துவிட்டாய். சரி! ஆபத்து நெருங்கிவிட்டது. ஏதாவது அற்புதம் ஏற்பட்டால் ஒழிய நாம் வெற்றி பெறுவது சந்தேகம். போ! ஓடிப்போய் விடு! உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்" என்று ஆணையிட்டார் இளவரசர்.

"நான் ஓடுவதற்காக வரவில்லை. தங்களைக் காப்பாற்றுவேன். அல்லது தங்களோடு மடிவேன். எனக்கு வாழ்வும் சாவும் ஒன்றே. அந்தச் சாவு உங்கள் காலடியில் கிடைத்தால் என்னுடைய பெரும் பேறு என்று கருதுவேன்"

இவ்வேளையில் தளபதி முயீனுல் முல்க் பரபரப்போடு உள்ளே நுழைந்தார்.

"இளவரசே! ஆபத்து! நம் வீரர்கள் பின் வாங்குகின்றனர். நான் எவ்வளவோ உற்சாகமூட்டியும் பயனில்லை. அப்தாலியின் பீரங்கிகள் விடாமல் நெருப்புமாரி பெய்கின்றன. அவனிடம் துப்பாக்கி மருந்து அதிகம். அதை அழித்தால் ஒழிய நாம் வெற்றி பெற முடியாது. அவ்வேலைக்குத் தகுதியானவர்கள் ஒருவரும் இல்லை. பின்வாங்கி விடுவது நல்லது. இல்லையானுல் உயிருக்கே ஆபத்து ஏற்படும்"

இவ்வுரையைக் கேட்டதும் இளவரசர் முகம் சிவந்தது.

"முதலில் நீங்கள் ஓடிப்போய் விடுங்கள். ஒரு கோழையும் இங்கே இருக்க வேண்டாம். பழக்கூடையில் ஒரு அழுகியபழம் இருந்தாலும் எல்லாப் பழங்களும் அழுகிவிடும்; உங்களுடன் யார் யார் வர விரும்புகிருர்களோ அவர்களையும் அழைத்துக்கொண்டு போய் விடுங்கள். போர்க்களத்திலிருந்து டில்லி இளவரசன் ஓடினன் என்று சரித்திரம் கூறவேண்டாம். வீரமாகப் போரிட்டு மடிந்தான் என்று கூறட்டும். நெஞ்சுத் துணிவுள்ள ஒரு சிலர் என்னுடன் இருந்தால் போதும். ஒருதுளி

இரத்தம் உள்ளவரையும் போராடு வேன்'' என்று கர்ஜித்தார் இள வரசர்.

முயீனுல் முல்க் மௌனியானார். போர் வீரருக்கு உற்சாகமூட்டப் போய் விட்டார்.

"இளவரசே! எனக்கும் உத்த ரவு கொடுங்கள். நானும் போருக் குப் புறப்படுகிறேன்'' என்றாள் லாலாரங்க்.

"நீயா! போருக்கா போகிறாய்?''

"ஆம்! போய் வெற்றி பெற் றுத் திரும்புவேன். அல்லது மர ணம் எய்துவேன்''

"துப்பாக்கி சுடவே உனக்குத் தெரியாதே. எந்த ஆயுதத்தைக் கொண்டு சண்டை செய்வாய்?''

"இதோ! என் புல்லாங் குழல்'

"ஹா! ஹா! ஹா! அப்தாலி யின் பீரங்கிகளும் பாம்புகளா, உன் புல்லாங்குழல் மகுடிக்குக் கட்டுப்பட்டு ஆடுவதற்கு?''

"வல்லவனுக்குப் புல்லும் ஆயு தம். அல்லாஹ் தங்களுக்கு நிச்ச யம் வெற்றியளிப்பான். நான் வரு கிறேன்'' என்று லாலாரங்க் உணர்ச்சி பொங்க இளவரசரை வாழ்த்தி வணக்கமாய் நின்றாள்.

இளவரசரின் மனம் நெகிழ்ந் தது.

லாலாரங்க் பிரியா மனத்தோடு பிரிந்து கூடாரத்தைவிட்டு வெளி யேறி இருளில் மறைந்தாள்.

இளவரசர் டில்லிப் போர் வீரர் களுக்கு உற்சாகமூட்டி உத்தரவு கள் கொடுத்தார். மீண்டும் டில்லி பீரங்கிகள் மும்முரமாகச் சுடத் தொடங்கின.

∴ ∴ ∴

லாலாரங்க் போய் வெகு நேரம் இருக்கும். அப்தாலியின் படை இருந்த திசையிலே விண் அதிரும்படியான பேரொலி கேட் டது. பூமி நடுங்கிற்று. அப்தாலி குவித்து வைத்திருந்த துப்பாக்கி மருந்துக் கிடங்கில் தீப்பிடித்துக் கொண்டது. தீ ஜுவாலை வான் முட்ட எழுந்தது. எதிரியின்கூடா ரங்கள் யாவும் எரியத் தொடங் கின. ஆயிரக் கணக்கான அப்தா லியின் போர் வீரர்கள் மாண்ட னர். எதிரி முகாமிலே ஓரே பேரி ரைச்சல் கேட்டது.

அப்தாலி பின் வாங்கினான். டில்லிக்கு வெற்றி கிட்டிற்று.

இளவரசர் அஹமத்ஷாவுக்கு இது ஒரு பெரும் அற்புதமாகவே பட்டது. அப்தாலியின் மருந்துக் கிடங்கு பண்டைக்குப் பின் வெகு தொலைவில் இருந்தது. மிகவும் பந்தோபஸ்தான இடத்தில் இருந் தது.

அப்தாலியின் எஞ்சிய வீரர் அரணைக் காலி செய்து விட்டு ஓடி விட்டனர். டில்லி வீரர் முன்னே றிச் சென்று குற்றுயிராய்க் கிடந்த எதிரிகளில் சிலரை எடுத்துக் கொண்டு வந்தனர்.

அவர்களிலே ஒருவன் தேர்க் கண்ட விவரத்தைத் தெரிவித் தான்:

"மருந்துக் கிடங்கைக் காவல் காத்துக் கொண்டிருந்த வீரர்களி டம் எங்கிருந்தோ ஒரு கிராமப் பெண் தோன்றினாள். அவள் புல்லாங்குழல் வாசிக்கத் தொடங் கினாள். மகா அற்புதமாயிருந்தது. தான் மானுபூர் கிராமவாசி என் றும், அரசரிடம் புல்லாங் குழல் வாசித்துப் பரிசுபெற வந்ததாக வும் கூறினாள். அவள் வாசித்துக் கொண்டே போனாள். வீரர்கள் சொக்கிப் போனார்கள். அவள் மருந்து இருக்குமிடத்தை நெருங்கி னாள். திடீரென்று சிக்கி முக்கிக் கற்களை எடுத்து உரசினாள். நெருப்புப் பொறி பறந்தது. அவ் வளவுதான். மருந்தில் தீப்பற்றிக் கொண்டது. எல்லாம் நாசமாகி விட்டன. அவளும் வெந்து மாண் டாள்''

இவ்வுரையைக் கேட்டதும் இளவரசர் அஹமத்ஷா, லாலாரங்க் இருந்த கூடாரத்துக்கு ஓடினார். அங்கு அவள் காணப்படவில்லை. அவளுடைய ஆடைகள் கட்டிலின் மேல் கிடந்தன. மேலே ஒரு கடிதமும் கிடந்தது. ஆவலோடு அதைப் பிரித்துப் படித்தார்.

"இளவரசே! என் உள்ளத்தை என்றோ உங்களுக்குப் பறிகொடுத்து விட்டேன். உங்கள் மகிழ்ச்சியே என் மகிழ்ச்சியாகக் கொண்டு வாழ்ந்தேன். நானோ பணிப்பெண். தாங்களோ இளவரசர். நம் இருவருக்கும் நிக்காஹ் நடைபெறாது. தாங்கள் விரும்பினாலும் அரண்மனையில் யாரும் விரும்ப மாட்டார்கள். நான் வேறு எவரையும் மணந்து சுகமாய் வாழ முடியாது. எந்த வகையில் என் உயிரைத் தங்களுக்கு அர்ப்பணம் செய்ய முடியும் என்றே அல்லும் பகலும் சிந்தித்து வந்தேன். போர் எனக்குத் தக்க சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. நான் சிக்கி முக்கிக் கற்களையும் கட்டாரியையும் புல்லாங்குழலையும் எடுத்துக்கொண்டு எதிரிப் படைக்குப் போகிறேன். கிராமப் பெண்ணைப்போல் மாறு வேடம் பூண்டு செல்கிறேன். புல்லாங்குழலால் எப்படியும் எதிரிகளை வசியப்படுத்தி மருந்துக் கிடங்கில் தீ வைத்து விடுவேன். அத்துடன் நானும் சாம்பலாகி விடுவேன். தவறினால் அப்தாலியின் மார்பில் என் கூரிய கட்டாரி கட்டாயம் பாய்ந்துவிடும். தங்கள் தளபதி, எதிரியின் மருந்துக் கிடங்கை அழிக்க ஆளில்லையே என்று ஏங்கினார். தாங்கள் புல்லாங் குழலைக்கண்டு சிரித்தீர்கள். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதை மறந்துவிட வேண்டாம். இதனால் என்ன செய்கிறேன் பாருங்கள்! என் வெற்றியிலே எனக்கு உறுதி இருக்கிறது. அல்லாஹ் நிச்சயம் உதவி செய்வான் என்று நம்புகிறேன், தங்களுக்கு அல்லாஹ் நீண்ட ஆயுளையும், நல்ல அழகிய அன்புள்ள மனைவியையும் தந்தருளுமாறு பிரார்த்திக்கிறேன். தாங்கள் வீரவாளை சூடித் திரும்பித் தங்கள் மனைவியுடன் உல்லாசமாக இருக்கும்போது இந்தப் பணிப் பெண்ணை நினைப்பீர்களா? என் ஆன்மா ஈடேற 'துவா'ச் செய்யுங்கள். எப்போதும் அல்லாஹ்வை நம்பி முயற்சி செய்யுங்கள். தங்களுக்கு வெற்றி கிடைக்கும்."

லாலாரங்கின் கடிதத்தைப் படித்து முடித்ததும் இளவரசர் தேம்பித் தேம்பி சிறு பிள்ளையைப் போல் அழலானார். ★

முஸ்லிம் முரசு

சந்தா விபரம்

(ஈத், மீலாத் மலர்களுடன்)

உள் நாடு :

இந்தியா, சிலோன்

தனி இதழ்	0	6
ஒரு வருடம்	4	8
அரை வருடம்	2	8
2 வருடம்	8	8

வெளி நாடுகள்

தனி இதழ்	0	8
ஒரு வருடம்	6	0
அரை வருடம்	3	8
2 வருடம்	11	0

ஒரு வருடத்திற்குக் குறையாத சந்தா செலுத்துகிறவர்களுக்கு மட்டுமே ஈத், மீலாத் மலர்கள் குறைந்த விலைக்கு அனுப்பப்படும். பர்மா, இலங்கை இரு நாடுகளுக்கும் வி. பி. உண்டு.

மானேஜர்,

முஸ்லிம் முரசு

தபால் பெட்டி நம்பர் 258

18, ராமசாமித் தெரு, மண்ணடி

சென்னை-1.

புதிய நாணய முறை

எஸ். கே. ஜி. அப்துல் காதர்

"ஐயா, கடைக்காரரே! இந்தப் பேனா என்ன விலை ?"

"இதன் விலை, ஐந்து ரூபாய் எழுபத்தைந்து நயா பைசா. உங்களுக்கு வேண்டுமானால் ஐந்து ரூபாய் அறுபது நயா பைசாவுக்குத் தருகிறேன்."

ஃ ஃ

"என்ன சார், அநியாயமாக இருக்கிறது. படி அரிசி தொண்ணூறு நயா பைசாவாமே?"

"குண்டு சம்பா, படி எண்பது நயா பைசா என்று நேற்றுத்தான் வாங்கினேன். அதைவிட இதென்ன அவ்வளவு ஓசத்தி?"

ஃ ஃ

"அப்பா, ஒரு நயா பைசா தந்தாத்தான் பள்ளிக்கூடம் போவேன்......!"

ஃ ஃ

இந்த மாதிரி சம்பாஷணைகளை இன்னும் சிறிது காலத்தில் கேட்கப் போகிறோம். நமது பேச்சுக்களிலிருந்து அணா, தம்பிடி நாணயச் சொற்களை விலக்கிவிட்டு நயா பைசா என்ற சொல்லைச் சேர்த்துக் கொள்ளப் போகிறோம். இது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கலாம்.

மனித சமுதாயத்தின் ஆரம்ப காலத்தில் தற்போது உள்ளதைப் போல் நாணயச் செலாவணி முறை கிடையாது என்று படித்திருக்கிறோம். அப்போதெல்லாம் பண்டமாற்று முறையே இருந்து வந்தது. நமக்கு ஒரு மூட்டை அரிசி வேண்டுமானால், அரிசி வைத்திருப்பவருக்கு ஒரு ஆடோ அல்லது அவருக்குத் தேவையான ஒரு பொருளோ கொடுத்து, அரிசி வாங்க வேண்டும். மனித சமுதாயம் முன்னேறியது. இவ்விதப் பண்டமாற்று முறையிலுள்ள கஷ்ட நஷ்டங்களை மனிதன் கண்டு வேறு வழிதேட முயற்சிசெய்தான். இறுதியில் நாணய முறைகளைக் கண்டு பிடித்தான். மனித சமுதாய வளர்ச்சிக்கும், நாகரிக வளர்ச்சிக்கும் இது மிகவும் உதவியது. தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களைக்கொண்டு நாணயங்களைத் தயாரித்தான். செலாவணி முறையை ஏற்படுத்தினான்.

நமது நாட்டில் சரித்திர காலத்துக்கு முன்பே நாணய முறை அமுல் நடத்தப்பட்டதாக அறிகிறோம். சென்னை மியூஸியத்துக்குச் சென்றால் பழைய கால நாணயங்களைப் பார்க்கலாம். பலவிதமான வடிவங்களில் இவை இருக்கின்றன. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அவற்றில் அபிவிருத்தி ஏற்பட்டு வந்திருக்கிறது. தற்போதுள்ளதுபோன்று வட்ட வடிவமான நாணயம் சந்திரகுப்த மன்னர் காலத்தில் ஏற்பட்டது என்று சரித்திரம் கூறுகின்றது.

நம் தமிழ் நாட்டில் ராஜ ராஜ சோழன், குலோத்துங்கன் முதலிய மன்னர்கள் நாணயங்களை வெளியிட்டதாகத் தெரிகிறது. சோழ மன்னர்களின் நாணயங்களில் புலி, மீன் முதலிய உருவங்களுடன் எழுத்துக்களும் காணப்படுகின்றன. பாண்டிய மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் சதுரமாக இருந்தனவென்றும் அறிகிறோம்.

தற்போது இருந்துவரும் ரூபாய் நாணயம் 1814-ம் ஆண்டிலிருந்து

அமுலுக்கு வந்தது. அச்சமயத்தில் இதர நாணயங்கள் செல்லாது என்று அறிவிக்கப்பட்டதாலும், அவ்விதமே நடைமுறையில் கொண்டுவரப்பட்டதாலும் தற்போதுள்ள ரூபாய் நாணயம் ஸ்திரமான நிலையை அடைந்து விட்டது. ஆனால், 1835-ல்தான் ரூபாய்களில் ஒரே மாதிரியான 'டிஸைன்' ஏற்படுத்தப்பட்டது.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன் நம் நாடு சுதந்திரமடையும் வரையில் இருந்துவந்த இந்திய சமஸ்தானங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவிதமான நாணயங்கள் அமுலில் இருந்து வந்தன. நம் சென்னை ராஜ்யத்துடன்ஒட்டியிருக்கும் திருவாங்கூரில், காசு, சக்கரம், ரூபாய் என்ற நாணயங்கள் இருந்தனவென்பது உங்களில் பலருக்குத்தெரியும்என்று எண்ணுகிறேன் இந்த சமஸ்தானங்கள் எல்லாம் சுதந்திர இந்தியாவுடன் இணைக்கப்பட்ட பின்னர் ஆங்காங்கு செலாவணியில் இருந்து வந்த நாணயங்கள் வாபஸ் பெறப்பட்டு, நாடு முழுவதும் ஒரே முறையான செலாவணி ஏற்படுத்தப்பட்டது. ஹைதராபாத்தில் சிக்கா என்னும் நாணயம் சமீப காலம் வரை புழக்கத்திலிருந்து வந்தது.

அடுத்த வருஷம் எப்ரல் மாதத்திலிருந்து புதியவிதமான நாணயங்களை அமலுக்குக் கொண்டுவர நம் சர்க்கார் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இது நம் சர்க்காரின் புதிய முயற்சியல்ல. இவ்விதமான நாணய முறையை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று நூறு வருஷங்களுக்கு முன்பு—அதாவது 1857 ஆம் வருஷத்திலேயே முயற்சிகள் செய்யப்பட்டன. அதற்கான சட்டம் 1871-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. என்றாலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. சுமார் பத்து வருஷங்களுக்குமுன்னர், அதாவது 1946ல் இது சம்பந்தமான மசோதா கொண்டு வரப்பட்டது. ஆனால், நமது நாட்டின் அரசியல் அமைப்பில் மாறுதல்கள் ஏற்படவிருந்ததால் அச்சமயம் அம்முயற்சி கைவிடப்பட்டது. இப்போது சென்ற வருஷம் இந்த நாணய மாற்றம் சம்பந்தமான மசோதா கொண்டு வரப்பட்டு, நம் பார்லிமெண்டில் சட்டமாகிவிட்டது. ஆகவே புதிய நாணயங்கள், வரும் 1957 ஆம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்படவிருக்கின்றன.

"புதியவிதமான தசாம்ச முறை நாணயம் வெளிவருவதால்என்ன லாபமிருக்கப் போகிறது? மக்களிடையே கஷ்டமாகத்தானே இருக்கும்?" என்று சாதாரணமாக நாம் நினைக்கலாம். கடந்த சில தலைமுறைகளாக ரூபாய், அணா, பைசா புழக்கம் நம்மிடம் இருந்து வருவதால், புதிய நாணயம் நடைமுறைக்கு வரும்போது சிறிது தடுமாற்றம் இருக்கத்தான் செய்யும். ஆனால் இக்கஷ்டமெல்லாம் கொஞ்ச காலத்துக்குத்தான். பழகப் பழக எல்லாம் சரியாகிவிடும். புதிய நாணய முறை மிகவும் எளியது; சுலபமாகவும், துரிதமாகவும் கணக்கிடுவதற்கு வசதியானது என்பதைப் பார்க்கும்போது, ஒன்றும் பிரமாதமாகத் தோன்றாது.

உலகத்திலுள்ள சுமார் 140 நாடுகளில் ஏறத்தாழ 105 நாடுகள் தசாம்ச நாணய முறையைத்தான் அமுல் நடத்தி வருகின்றன. நமதுதமிழ் நாட்டு மக்களில் இலங்கை, பர்மா, மலாயா, இந்தோசீனு முதலிய நாடுகளுக்குப் போய் வருபவர்களுக்கு இந்தப் புதிய நாணயங்களில் உள்ள வசதிகள் நன்ருகத் தெரியும், அவர்களிடம் விசாரித்தால் இந்த முறை மூலம் எவ்வளவு சுலபமாகக் கணக்கிட்டு விடலாம் என்பதை எடுத்துச் சொல்வார்கள்.

நமது நாட்டில் அமலுக்கு வரும் புதிய நாணய முறைப்படி ஒரு

ரூபாயாவது நூறு நயா பைசாக்க ளாகப் பிரிக்கப்படுகிறது. தற்போதுள்ள ஒரு ரூபாய்க்கு என்ன மதிப்பு இருக்கிறதோ, அதே மதிப்பு நூறு நயா பைசாக்களைக் கொண்ட ஒரு ரூபாய்க்கும் இருந்து வரும். ரூபாயில் எவ்வித மாறுதலுமில்லை. ஆனால் அரை ரூபாய், கால் ரூபாய், அணா, தம்பிடி போன்றவைகளுக்குப் பதிலாக நயா பைசா நாணயங்கள் நடைமுறைக்கு வரும். அரை ரூபாயின் மதிப்பு 50 நயா பைசாவுக்கும் கால் ரூபாயின் மதிப்பு 25 நயா பைசாவுக்கும் சமமாக இருக்கும். தற்போது இம் முறையில் ஏழு விதமான நாணயங்கள் வெளியிடப்பட்டு புழக்கத்துக்கு வருகின்றன. அவைகளில் மிகக் குறைந்த நாணயம் ஒரு நயா பைசா. அதிக மதிப்புள்ள நாணயம் நூறு நயா பைசா என்று அழைக்கப்படும் ஒரு ரூபாய். இவற்றிற்கிடையே இரண்டு நயா பைசா, ஐந்து நயா பைசா, பத்து நயா பைசா, இருபத்தி ஐந்து பைசா, ஐம்பது நயா பைசா என்ற நாணயங்களும் உண்டு.

நாணய புழக்க ஆரம்ப காலத்தில்—அதாவது வரும் 1957-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில்—ஒரு நயா பைசா, இரண்டு நயா பைசா, ஐந்து நயா பைசா, பத்து நயா பைசா நாணயங்கள்தான் வெளியிடப்படுகின்றன. புதிய ஒரு ரூபாய் நாணயமும் ஐம்பது, இருபத்தைந்து நயா பைசா நாணயங்களும் சிறிது காலத்துக்குப் பிறகுதான் வெளியிடப்படவிருக்கின்றன. அதுவரை இப்போதுள்ள ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் நாணயங்கள் அமுலில் இருந்து வரும்.

இந்த நாணய மாற்றத்தால் மக்களுக்குக் கஷ்டம் இருக்கக்கூடாது என்பதற்காக சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அவற்றில் ஒன்று தற்போதுள்ள நாணயங்களுக்குச் சமமான நயா பைசா நாணயங்கள் எவ்வளவு என்பதைத் தெளிவுபடுத்தி புதிய வாய்ப்பாடுகள் தயாரித்து வெளியிட்டிருப்பது. இந்த வாய்ப்பாடு முறையை நாம் தெரிந்து கொண்டால் பிறகு பண மாற்றத்தில் தடுமாற்றம் ஏற்படாது. இதில் ஒரு சுலபமான வழி இருக்கிறது. அதாவது ஒன்று, இரண்டு தம்பிடிகளுக்கு ஒரு நயா பைசா விதம் 12 நயா பைசா வரை கவனத்தில் வைத்துக் கொள்ளலாம். அதற்குப் பின் 13 நயா பைசா என்பது இரண்டணா ஒரு தம்பிடிக்கு மட்டுமே வரும். பிறகு முன்போல இரண்டு தம்பிடிகளுக்கு ஒரு நயா பைசா மூலம் 25 நயா பைசா வரை கவனத்தில் வைத்துக் கொள்ளலாம். அடுத்தாற்போல் 26 நயா பைசா என்பது நான்கணா இரண்டு தம்பிடிக்கு மட்டுமே வரும். இதேவிதமாக 38 நயா பைசா என்பது 6 அணா ஒரு தம்பிடிக்கு மட்டுமே வரும். 50 நயா பைசாவானது 8 அணாவுக்கு மட்டுமே வரும்.

இந்த நாணய முறையைப் பிரபல்யப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் சர்க்கார் செய்து வருகின்றனர். இந்த நாணய முறையில் வசதிகள் என்ன என்பது பற்றியும், தற்போதுள்ள நாணயங்களை எவ்விதம் மாற்றலாம் என்பது பற்றியும் விரிவான தகவல்களைக் கொடுப்பதற்கு சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்கள். சுலபமான முறையில் இதைப் பற்றித் தெரிந்துகொள்ள ஜில்லா தலை நகரங்கள், ராஜ்யத் தலைநகரங்கள் முதலியவிடங்களில் தகவல் தெரிவிக்கும் நிலையங்களும் இருக்கும். நாணய மாற்று அட்டவணைகள் தயாரித்து வெளியிடவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

புதிய நாணயங்கள் எல்லாவற்றின் முன் பக்கத்திலும் அசோக ஸ்தம்பம்-சிங்க முத்திரை இருக்கும். அதில் ஹிந்தியில் 'பாரத்'

என்றும், ஆங்கிலத்திலும், 'இந்தியா' என்றும் எழுதப்பட்டிருக்கும்.

மேலும் புதிய நாணயங்கள் எல்லாவற்றிலும் பின்பக்கத்தில் அந்த நாணயம் அச்சடிக்கப்பட்ட வருஷமும் அதன் மதிப்பும் கணக்குப்படி நயா பைசா எவ்வளவு என்பதும் இலக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கும்.

நூறு நயா பைசா, 50 நயா பைசா, 25 நயா பைசா ஆகிய நாணயங்கள் தனி நிக்கல் நாணயங்களாக இருக்கும். பத்து, ஐந்து இரண்டு நயா பைசா நாணயங்கள் செம்பு—நிக்கல் கலப்பு உலோக நாணயங்களாக இருக்கும், ஒரு நயா பைசாவானது வெங்கலத்தால் செய்யப்பட்டிருக்கும்.

புதிய நாணயங்கள், ரிசர்வ் பாங்கு, ஸ்டேட் பாங்கு கிளைகள், கஜானக்கள், உப கஜானக்கள் முதலியவற்றின் மூலம் வெளியிடப்படவிருக்கின்றன. புதியநாணயங்களை உபயோகிப்பதில் பொது மக்களுக்கு நல்ல பழக்கம் ஏற்பட்டு, போதுமான அளவில் புதிய நாணயங்கள் புழக்கத்துக்குக் கிடைத்த பிறகு தற்போது இருந்து வரும் நாணயங்கள் வாபஸ் பெறப்படும். இதற்காக மூன்று வருஷ காலம் பிடிக்கலாம். அதற்குப் பின்னர் தற்போதுள்ள நாணயங்கள் முற்றிலும் மறைந்துவிடும். புதிய நாணயங்களும் சகஜமாக ஆகிவிடும்.

[அகில இந்திய ரேடியோவின் சென்னை நிலையத்திலிருந்து 6—7—56-ல் ஒலிபரப்பப்பட்ட இப்பேச்சு, நிலைய அதிகாரியின் அனுமதியுடன் வெளியிடப்பெறுகிறது.]

மோன்த் கிரிஸ்தோவின் மன்னன்

ஆசிரியர் : அலக்ஸாண்டர் டூமா

தமிழாக்கம் : காரை ஏ. எம். அலி

உலகு புகழ் நாவலாசிரியரான அலக்ஸாண்டர் டூமான் "கவுண்ட் ஆப் மாண்டிகிரிஸ்டோ" என்ற பிரெஞ்சு நாவலின் தமிழாக்கம் இது.

ஒரு குற்றமும் புரியாத ஏழை ஒருவனை பொருமைக்காரர் மூவர் கொடுங்குற்றம் சாட்டி 15 ஆண்டுகள் சிறையில் தள்ளுகின்றனர். அலைக் கடலின் நடுவில் அமைந்த தனித்த தீவில் பயங்கர பாதாளச் சிறையில் பதினன்கு ஆண்டுகள் அவன் வாடுகிருன். புழுக்களும் பூச்சிகளும் நெளியும் அந்தச் சிறையில் தன் இளமை வாழ்வைக் கழித்துவிட்டு அவன் வெளியே வந்தபொழுது அவனைச் சிறையில் தள்ளிய கொடியவர் மூவரும் வாழ்வில் மிக உயர்ந்து செல்வத்தின் சிகரத்தில் வீற்றிருக்கின்றனர். இது கண்டு அவன் இதயத்தில் எழும் குமுறலும், அதனல் மூளும் பழிவாங்கும் எண்ணமும் பிணைந்து கதையை அற்புதமாக்குகின்றன. சோகம், காதல், களிப்பு ஆகிய அத்தனை உணர்ச்சிகளும் எழுந்து கூத்தாடுகின்றன. டூமாஸின் அழியா இலக்கியம் இந்நூல்.

பக்கங்கள் 500 விலை ரூ. 5—0—0

அன்பு நூல் நிலையம்,

18, ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை–1.

புத்தக விமரிசனம்

மஹ்ஜபீன்

(சரித்திர நாவல். ஆசிரியர் 'ஹஸன்'. சென்னை பிறை நிலைய வெளியீடு. கிடைக்குமிடம் : யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ். 155-150, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-1, விலை ரூ. இரண்டு)

எத்தனையோ நாவல்கள் தமிழில் வெளி வந்திருக்கின்றன. அவற்றில் முஸ்லிம்கள் படித்து இன்புறத்தக்கவை மிகச் சில. இஸ்லாமியச் சரித்திரத்திலே பிரகாசமாய் விளங்கும் காலத்தை நிலைக்களனாய் வைத்துப் பின்னப்பட்ட சரித்திர நாவல்கள் இதுவரை வந்ததில்லை.

பதினோராவது நூற்றுண்டில் வீராதி வீரர் ஸுல்தான் ஸலாஹுத்தீன் ஜெருஸலத்தைக் கைப்பற்றிய வரலாற்றை நிலைக்களனாக வைத்து இந்நாவல் எழுதப்பட்டிருக்கிறது.

சம்பவங்கள் இயற்கையாக வளருகின்றன. கதை விறுவிறுப்போடு செல்கிறது. அடுத்து என்ன? அடுத்து என்ன? என்று கேட்கும்படி கதை அமைந்திருக்கிறது. கதாபாத்திரங்களின் வீரமும், தியாகமும், காதலும் உள்ளத்தைத் தொடுகின்றன. அக்காலத்திலேயே நாமும் வாழ்ந்து நேரில் சம்பவங்களைக் காணுவது போன்று உணருகிறோம். பாத்திரங்களோடு பாத்திரங்களாய் ஒன்றிவிடுகிறோம். திடுக்கிடும் சம்பவங்கள், உணர்ச்சி மிகுந்த கட்டங்கள், இனிக்கும் காதல் உரையாடல்கள் மின்வெட்டுப் போன்ற அழகிய வர்ணனைகள் கதையினூடே இழையிட்டுச் செல்கின்றன.

ஆசிரியர் கதா பாத்திரங்களின் வாயிலாகப் பேசாது இயற்கையாகப் பேசவும் நடமாடவும் விட்டிருக்கிறார்.

கதா பாத்திரங்கள் இயற்கையானவை; உயிருள்ளவை; மனத்தை விட்டு அகலாதவை.

ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் எழுதியுள்ள சரித்திர நாவல்களில் மிகச் சிறந்த நாவலுக்குச் சமமாக இதைக் கூறலாம்.

"ஆவலோடு திறக்கப்பட்டுத் திருப்தியோடு மூடப்படும் நூல் எதுவோ அதுவே சிறந்த நூல்" என்று ஓர் ஆங்கில அறிஞர் கூறியிருக்கிறார். இந்தப் பரீட்சையில் இந்த நாவல் தேறுகிறது. 'ஹஸனின்' தித்திக்கும் எளிய தமிழ் நம்மைக் கவருகிறது.

ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல்.

—"மஹதி"

புத்துலகமைப்பு

மௌலானா முஹம்மது அலீ எம்.ஏ. எல். எல். பீ. ஆங்கிலத்தில் எழுதிய "தி நியூ வொர்ல்டு ஆர்டர்" என்னும் நூலின் மொழி பெயர்ப்பு. தமிழாக்கம்: அல்ஹாஜ் பா. தாவூத் ஷா, பீ.ஏ., வெளியீடு : ஷாஜஹான் தக் டெப்போ, 460, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை—5. விலை ரூபாய் 2. பக்கங்கள் 182.

விஞ்ஞானமும், நாகரிகமும் கைகோர்த்து வளர்வதும், ஞானிலத்துக்கு நாசம் தருமளவுக்கு அவை வளர்ந்ததும், அதனால் சபிக்கப்பட்ட மக்கள் கூட்டமும் அவர்களின் நாகரிகமும் ஒருங்கே அழிவதும், அவை மீண்டும் வளரத் தொடங்குவதும் மாறி மாறி நிகழ்ந்துகொண்டிருக்கின்றன என்பதை உலக வரலாறு உணர்த்துகின்றது.

நாலாயிரமாண்டுகளுக்கு முன் எகிப்திலிருந்து இந்தியாவரைப் பரவியிருந்த நாகரிகம் ஃபிர்ஔன்கள் காலத்தில் உச்ச நிலையடைந்து திடீரென அழிந்தது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் நிலவிய கிரீஸ் ரோம நாகரிகமும் இதே

கதியைத்தான் அடைந்தது.

மீண்டும் வளர்ந்த நாகரிகம் இன்று உச்சநிலையடைந்து விட்டது. இன்றைய நாகரிகமும் நாடுகளிடையே ஒற்றுமையை வளரச் செய்யவில்லை. இரண்டு உலகப் போர்களால் உலுத்துப் போயிருக்கும் இவ்வுலகம் மூன்றும் உலகப் போரால் வெடித்துச் சிதறிவிடுமென்று அஞ்சுகின்றனர்! இதற்கிடையே வல்லரசுகள் தங்கள் வல்லமையைக்காட்ட. சோதனை என்னும் பெயரால் அணுகுண்டுகளை வெடித்துக் கொண்டிருக்கின்றன. உலக வருவாயில் பெரும்பகுதி மனிதனை மனிதன் சுட்டுக் கொல்வதிலும், அதற்கான சாதனங்களைச் சேகரிப்பதிலுமே செலவிடப் படுகிறது.

இந்நிலையிலே உலகம் உருப்பட வேண்டுமென விரும்பும் மக்களும் அரசினரும் செய்வதறியாது திகைக்கின்றனர். பொருளாதாரப் பிரச்னையிலிருந்து மொழிச் சண்டை வரை எத்தனையோ பிரச்னைகள் உலகைக் கலக்கி வருகின்றன. 'மக்கள் வாழ்க்கையில் மாற்றம் வேண்டும்; உலக அரசியல் சீர்திருந்த வேண்டும்' என்னும் ஒலி எங்கும் கேட்கிறது. சுருங்கக் கூறின் 'உலகமே மாற்றியமைக்கப் பட வேண்டும்; புத்துலகம் தோன்ற வேண்டும்' என்று எல்லோரும் விரும்புகின்றனர்.

இஸ்லாம் ஒன்றுல்தான் இத்தகைய புத்துலகத்தைச் சிருஷ்டிக்க முடியும்என்பதை 'புத்துலகமைப்பு' விளக்குகின்றது. கிறிஸ்துவ மதத்தால் காண முடியாத கட்டுப்பாட்டை சோஷலிஸத்தால் சாதிக்க முடியாத அரசியலமைப்பை, ஐக்கிய நாட்டுச் சங்கத்தால் அடைய முடியாத குறிக்கோளை இஸ்லாத்தைப் பின்பற்றுவதால் மட்டும் தான் பெற முடியும் என்பதை இந்நூலில் கண்டு கொள்ளலாம். முதலாளி தொழிலாளி பிரச்னையிலிருந்து, ஏழை பணக்காரர் என்ற வேற்றுமை வரை எல்லாத் துறைகளிலுமுள்ள குறைகளைப் போக்க இஸ்லாம் காட்டும் நெறி முறைகளை இந்நூல் அழகிய முறையில் விவரித்துச் செல்கிறது.

இல்வாழ்க்கையை இனிது நடத்தவும், அரசாங்கத்தை அழகிய முறையில அமைக்கவும் இஸ்லாம் விதிக்கும் இணையற்ற வழிகளை வரலாற்று மேற்கோள்களைக் காட்டி இந்நூல் விவரிக்கிறது. இந்நூலாசிரியர் கூறும் உண்மைகளுக்கு ஆதாரமாய் திருமறை வாக்கியங்களைத் தாராளமாய்த் தந்திருப்பது இந்நூலின் மதிப்பையும் பயனையும் பன்மடங்கு உயர்த்துகிறது.

—'அஷ்ரஃப்'

சோஷலிஸம் ஏன் வேண்டும் ?

[விலை அணு 2. அறிவு மலர்ப் பதிப்பகம், கோவிந்தக்குடி போஸ்ட், கும்பகோணம் வழி]

சில ஆண்டுகளுக்கு முன் "கல்கி" இதழில் வெளியான சிறந்த கட்டுரை. "சோஷலிஸம் ஏன் வேண்டும்?" என்ற தலைப்புடன் "கல்கி" நடத்திய கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற இக்கட்டுரையை எழுதியவர் கோவிந்தக்குடி ஜனாப் மீ. இ. முஹம்மது உமர், பி. ஏ., இன்றைய சமுதாயத்துக்கு அவசியமான சமதருமக் கருத்துக்கள் அடங்கிய இக்கட்டுரையைப் புத்தகமாக வெளியிட்டுள்ள அறிவு மலர்ப் பதிப்பகத்தினர் பாராட்டப்பெற வேண்டியவர்களாவர்.

மதிப்புரைக்காக அனுப்பப் பெறும் புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் இருக்க வேண்டும்.

இந்த இதழில் மதிப்புரை எழுதப்பெற்ற முதலிரண்டு நூல்களும் அன்பு நூல் நிலையம், 18, ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை-1. விலாசத்திலும் கிடைக்கும்.

வல்லரசுகளின் வைரி

இப்போதெல்லாம் எகிப்தின் அதிபர் கர்னல் நாஸிரின் பெயர் உலகப் பத்திரிகைகளில் வெளிவராத நாளே கிடையாது! ஒவ்வொரு நாளும் அவர் ஒரு வெடிகுண்டைத் தூக்கி மேற்கு வல்லரசுகளின் மீது எறிந்து கொண்டிருக்கிறார்! சூயெஸ் கால்வாய்க் கம்பெனியை எகிப்து அரசாங்கத்தின் உடைமையக்கி விட்டதாக அவர் அண்மையில் அறிவித்தது மேல் நாடுகளைக் கதிகலங்கச் செய்துவிட்டது! எகிப்து போன்ற சிறிய நாடுகளிடமும் சில அணுக்குண்டுகள் இருப்பது இப்போதுதான் மேலை நாடுகளுக்குத் தெரிய வருகிறது! செக்கோஸ்லாகியா, ரஷ்யா போன்ற நாடுகளிடம் எகிப்து ஆயுத உதவி பெற முன்வந்திருப்பதுதான் மேற்கு நாடுகளின் கோபத்துக்குக் காரணம். மேற்கு வல்லரசுகளின் விரோதிகளிடம் எகிப்து ஆயுத உதவி பெறவேண்டிய அவசியம் எதனால் ஏற்பட்டது என்பதை கர்னல் நாஸிர் தமது நாட்டு மக்களுக்கு அரபியில் நிகழ்த்திய இரண்டு சொற்பொழிவுகளில் விளக்குகின்றார். அவர் நிகழ்த்திய இந்த முதற் பிரசங்கத்தில் பல முக்கிய விஷயங்கள் தெளிவாகின்றன. அடுத்த இதழில் வெளியாகும் சொற்பொழிவில் மேற்கு வல்லரசுகளின் குட்டுகள் பலவற்றை அவர் அம்பலப்படுத்துகின்றார்

மேலை நாடுகளுக்கு அப்துல் நாஸிரின் அறைகூவல்!

எகிப்து நாட்டின் சரித்திரத்தில் இன்று ஒரு முக்கியமான திருப்பம் ஏற்பட்டுள்ளது. இங்கே ஏராளமான போர் வீரர்கள் இருக்கின்றனர். அவர்களின் தைரியத்திற்குக் குறைவில்லை. தியாக புத்தியிலும் தன்னம்பிக்கையிலும் எகிப்தியர்களுக்கு எவ்வித பஞ்சமும் இல்லை. இத்தகைய உணர்ச்சிதான் இன்று நம் இதயங்களை மகிழ்விக்கின்றது. ஆனால் இந்த உணர்ச்சியுடன் ஆழ்ந்த மன வேதனையும் நமக்கு இருந்து வந்தது. இதற்குக் காரணம் என்னவெனின், அன்னியர் ஆதிக்கத்திற்கு நாம் அடிமைப் பட்டிருந்தோம் என்பது தான்.

ஆயினும் எனது சோதரர்களே! இன்று நம் நாடு தனது பழைய நஷ்டங்களை ஈடு செய்யக்கூடிய நிலையில் இருக்கின்றது. மனித பலத்திலும் தியாக புத்தியிலும் தன்னம்பிக்கையிலும் மட்டுமின்றி ஆயுத பலத்திலுங் கூட இன்று எகிப்துநாடு சிறந்து விளங்குகிறது. இதுதான் இன்று நம் நாட்டிலே ஏற்பட்டுள்ள மாறுதல்.

மனித பலத்தையும் தன்னம் பிக்கையையும் தியாகத்தையும் ஆயுத பலத்தினால் பெருக்கிக் கொள்வதற்கு நம்மால் இயன்றதை யெல்லாம் செய்திருக்கின்றோம். எனவே நம்முடன் முற்காலத்திலே வியாபாரம் செய்தவர்கள் செய்யாதவர்கள் என்ற வேற்றுமையின்றி எல்லாரிடமும் ஆயுத உதவி கேட்டோம். நாம் அவர்களிடம் ஆயுதங்கள் கேட்டோமாயினும் அவைகளைக் கொண்டே தாய் நாட்டை நம்மால் காப்பாற்றிவிட முடியும் என்று நாம் நினைக்கவில்லை. அவர்களிடமிருந்து கிடைத்துள்ள ஆயுதங்கள் நம்முடைய விரோதிகளுக்கு (இஸ்ராயிலுக்குக்) கிடைத்து வரும் ஆயுதங்களுக்குச் சிறிதும் ஈடாகாது என்பதையும் நாம் நன்கு அறிந்திருக்கின்றோம்.

எனது சோதரர்களே! வெளி நாடுகளுடன் நாம் செய்து கொண்ட ஆயுத உதவி ஒப்பந்தங்களைப் பற்றி இன்று ஒரு பெருங் கூச்சல் கிளப்பப்பட்டிருப்பதை நாமெல்லாம் கேட்கின்றோம். சமாதானத்துக்காக 'அதிகாரத் தராசு' என்னும் கொள்கையை-உதவாக்கரைக் கொள்கையை-உலகின் பல பாகங்களிலும் கடைப் பிடிக்கப் போவதாக அவர்கள் கூறுகின்றார்கள். அதிகாரத் தராசு என்று அவர்கள் அழைக்கின்ற இக் கொள்கையானது ஒரு ஏய்க்கின்ற வித்தையே என்பது உங்களுக்கும் எனக்கும் நன்கு தெரியும். உண்மையில் அது ஒரு ஆதிக்க நோக்கம் கொண்டதைத் தவிர வேறில்லை. அவர்கள் எத்தகைய உண்மையான அதிகாரத் தராசையும் விரும்பவில்லை. அவர்கள் உண்மையான சமாதானத்தையும் நாடவில்லை. அவர்கள் உண்மையில் என்ன சொல்ல விரும்புகிறார்களோ அதை வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை. நாம் அவர்களுடைய செல்வாக்கிற்கு உட்பட்டு இருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர். நம்முடைய மக்கள் அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். நம்மிடம் ஆயுதம் இல்லாமற் போனால் அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் தான் நாம் இருக்க நேரிடும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் ஆயுதங்கள் நமக்கு எங்கிருந்து கிடைத்தாலும் சரி; அவை நமக்குக் கிடைத்துவிட்டால் நாம் உண்மையான விடுதலை, பரிபூரண சுதந்தரம் பெற்று விடுவோம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். இன்று நாம் பிறநாடுகளிடமிருந்து நிபந்தனையில்லாத ஆயுத உதவி பெற்று வருவதால் நாம் உண்மையில் விடுதலை அடைந்து விட்டோம்.

சோதரர்களே! இவ்வாறாக அன்னிய ஆதிக்கத்துக்கு, நாம் ஒரு முடிவு கட்டிவிட்டோம். இனி எகிப்துக்குள்ளே எகிப்து மக்களையன்றி, எகிப்து நாட்டைத் தவிர வேறு எவருடைய ஆதிக்கமும் இருக்கப் போவதில்லை.

அதிகாரத்தில் எந்த வல்லரசும் ஒன்றைமற்றொன்று மிஞ்சிவிடாமல் பார்த்துக் கொள்வதென்ற வல்லரசுகளின் கொள்கைக்குப் பின்னே ஒரு நீண்ட புதுமையான கசப்பான கதை இருக்கிறது. அது ஒரு பெரிய பித்தலாட்டப் பிரசாரம். இதனால் உலகத்தை ஏமாற்றி விடலாம் என்று அவர்கள் நம்புகின்றார்கள்.

இந்தப் பொய்ப் பிரசாரத்தின் உண்மைகளை இப்போது எகிப்தின் பெயரால் உலகத்துக்கு அம்பலப்படுத்த விரும்புகிறேன்.

1955 பிப்ரவரி 28-ந் தேதி சம்பவமும், பாதுகாப்புச் சபை கூறியபடி சமாதான வீரர்களுக்கு எதிராக முன்யோசனையுடன் நடத்தப்பட்ட இஸ்ராயில் தாக்குதலும் நமக்கு ஒரு திருப்புமுனையாக விளங்கியது. எங்

க்கள் எதிர்நோக்கியிருந்த அபாயங்களுக்கு இத்தாக்குதல் உண்மையில் ஒரு எச்சரிக்கையாக அமைந்து விட்டது. இந்த அபாயகரமான நிகழ்ச்சி, மற்றப் பெரிய அபாயங்களையெல்லாம் தவிர்க்கும்படி செய்ததற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

இதன் பிறகுதான் சமாதானம் என்றால் அதற்கு உண்மையாகவே என்ன அர்த்தம் என்பதையும், இப்பகுதியில் அதிகாரத் தராசு என்பது என்னவென்பதையும் ஆராயத் துவங்கினோம்.

இதன் பயனுக் நாங்கள் தெரிந்து கொண்டது என்னவெனின் இஸ்ராயீலுக்கு அவர்கள் ஆதரவாக இருக்கின்றனர் என்பதுதான்.

இப்பகுதியில் சமாதானம் நிலைபெற வேண்டுமென்றும், அமைதியைக் குலைக்குமளவிற்கு யாரும் அதிகாரத்தில் மிஞ்சி விடக் கூடாதென்றும் விரும்புகிறவர்கள், நமக்கு யாரும் ஆயுத உதவி செய்யாமலிருப்பதற்குத் தங்களால் இயன்ற முயற்சிகளையெல்லாம் எடுத்துக் கொண்டிருக்கின்றனர். அதே சமயத்தில் அவர்கள் இஸ்ராயீ

"பிராண மித்ரா"

நீத்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்தி, துரித ஸ்கலிதம். ஸ்திரீகளை மனத்தில நினைத்தவுடனே, தொட்டவுடனே இந்திரியம் வெளியாதல், நபுஞ்சகம், இந்திரிய ஒழுக்கு, சொப்பன ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, தேகம் மெலிதல், நடுக்கம், வீரிய மின்மை முதலிய ராஜ உறுப்புக்கள் சம்பந்தமான சகலமும் நீங்கி, பீமன் பலம் பெற நிகரற்ற காயகல்பமாகும். 'பிராண மித்ரா சாப்பிடும் காலத்தில் 'மதன் லேபம்' ஆண்குறி வளர்ச்சிக்குக் குறியின் மேல் தினமும் பூசிக்கொண்டு வரவும். பத்தியமில்லை. பூரண குணத்திற்கு 2 டின் "பிராண மித்ரா" அவசியம் சாப்பிடவும். 1 டின் விலை ரூ 6—0—0. (20 நாள் மருந்து)

வி. பி. ஆர்டர்களுக்கு ரூ 5 முன்பணம் அனுப்ப வேண்டும்.

இலங்கை அன்பர்களுக்கு பூரண குணத்திற்கு 40 நாள் 2 டின் பிராண மித்ரா, 1 ஜீவமித்ரா, 1 மதனலேபம் மூன்று மருந்துகளின விலை ரூ 18-75 சதம். இலங்கை தபாற் செலவு ரூ 2-50 சதம். இலங்கை சுங்கத் தீர்வை ரூ 4-57 சதம். மலாய் அன்பர்களுக்கு பூரண குணத்திற்கு 40 நாள் 2 டின் பிராண மித்ரா, ஒரு ஜீவ மித்ரா, ஒரு மதன லேபம் ஆகிய மூன்று மருந்துகளின் விலை ரூ 18-12-0, மலாய் நாட்டிற்கு தபால் செலவு ரூ 6-0-0.

முக்கிய கவனிப்பு ;-மலாய் நாட்டிலுள்ளவர்கள் மருந்தின் கிரயத்தையும் தபால் செலவையும் சேர்த்து ஏர்மெயில் மணியாடர் மூலம் அல்லது 37 ஷில்லிங் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் வாங்கி ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பவும். முன்பணம் இல்லாமல் மருந்துகளை அனுப்ப முடியாது. ,

மலாய் நாட்டிலுள்ளவர்கள் எமது பதிலைக் கோருபவர்கள் 1 ஷில்லிங் போஸ்டல் ஆர்டர் அனுப்பவும். 'பெண் இன்பம்' என்னும் விபரமான கேட்லாக்கிற்கு எழுதவும்.

டாக்டர் கே. கே. ராமன், (ரிஜிஸ்டர்டு).
கேரள வைத்தியசாலை (மு. 7).
தபால் பெட்டி நெ. 473, வேப்பேரி, சென்னை-7.

னுக்குப் போர்த் தளவாட உதவி அளித்து வருகின்றனர் என்ற செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது.

இஸ்ராயீல் இராணுவத்தினுள்ள பலமான ஆயுதங்களெல்லாம் பிரிட்டனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வந்திருக்கின்றன என்பதை பிரெஞ்சு அரசாங்கப் பத்திரங்கள் தெரிவிக்கின்றன. இந்த தஸ்தாவேஜ்களைக் கைப்பற்றுவதில் எகிப்திய இரகசிய இலாகா வெற்றியடைந்து விட்டது.

20 மெட்டியர் விமானங்கள்
50 மஸ்டாங் விமானங்கள்
20 மஸ்கிட்டோ விமானங்கள்
7 டிரான்ஸ்போர்ட் விமானங்கள்
100 ஷெர்மன் டாங்கிகள்
15 சர்ச்சில் டாங்கிகள்
100 மார்ட்டார்கள்
70 ஃபீல்டு துப்பாக்கிகள்

இவைகளையன்றி இன்னும் அதிகமான போர்த் தளவாட பேரம் இஸ்ராயீலுக்கும் பிரிட்டனுக்குமிடையே நடந்து ஒப்பந்தம் நிறைவேறியிருப்பதாக அதிகார பூர்வமான பிரஞ்சு அரசாங்க தஸ்தாவேஜ் கூறுகிறது. இந்த உடன்படிக்கையின்படி பிரிட்டன் இஸ்ராயீலுக்கு மெட்டியர் விமானங்களும், பழைய செஞ்சுரியன் மாதிரி டாங்கிகளும் விற்பனை செய்யுமென்று தெரியவருகிறது. "பீ. டி. 17" என்னும் பெயருடைய 12 விமானங்களை அமெரிக்கா ஏற்கனவே இஸ்ராயீலுக்கு வழங்கியிருக்கிறது. இதேவிதமாக 100 "எம். எக்ஸ்" டாங்கிகளும், மிஸ்டியர் ஆகாய விமானங்களும் சப்ளை செய்வதாக பிரான்ஸ் இஸ்ராயீலுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது.

சோதரர்களே! இதுதான் அவர்கள் கூறும் சமாதானம். அமைதியைப் பாதுகாக்கும் கொள்கை! அமைதியைப் பாதுகாக்கும் கொள்கை (Balance of Power) என்பதற்கு அவர்கள் கூறும் பொருள் என்னவென்றால், இஸ்ராயீலுக்கு ஆயுத உதவி செய்வது, எகிப்துக்கு எவ்வித உதவியும் கிடைக்காமல் தடுப்பது ஆகிய செயல்களே!

அராபிய சேனைகளைவிட அதிகமாக 250,000 ஆட்களை இஸ்ராயீல் திரட்ட முடியும் என்று அமெரிக்க, பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறுகின்றன. இவ்விதம் கூறும்போது சந்தேகமின்றி அவர்கள் தங்களின் தற்பெருமையையும் ஆகம்பாவத்தையும் காட்டிக் கொள்ளுகின்றனர்.

இஸ்ராயீல் சேனை அளவிலும் அமைப்பிலும் பெரியதென்று அமெரிக்கப் பத்திரிகைகள் பெருமையடித்துக் கொள்ளுகின்றன.

இதுதான் அவர்கள் நம்மை ஏமாற்றக் கடைப்பிடிக்கும் சமாதானக் கொள்கை. இப்பொய்ப் பிரசாரத்தைத்தான் உலகமும் நம்பவேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர்.

ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அவர்கள் இஸ்ராயீலுக்கு ஆயுத உதவி செய்திருக்

கின்றனர். எகிப்துக்கு அதை மறந்துவிட்டனர், ஏனெனில், நாம் பலவீனர்களாகவே இருக்க வேண்டும் என்றும், நம்மைப் பாதுகாக்குமாறு அவர்களை எப்போதுமே உதவிக்கு நாம் அழைக்க வேண்டுமென்றும் அவர்கள் விரும்புகின்றனர்.

மே மாதத்தில் பிரிட்டிஷ் யுத்த இலாகாவிலிருந்து ஒரு தஸ்தாவேஜை எகிப்திய இரகசியப்போலீஸ் கைப்பற்றியுள்ளது. இஸ்ராயீல்—எகிப்து எல்லைப் புறத்தில் நிகழ்ந்த சில சம்பவங்களைப் பற்றி இந்த தஸ்தாவேஜில் கூறப்பட்டுள்ளது: "இஸ்ராயீலுடன் யுத்தம் செய்வதைத் தவிர்த்துக்கொள்ள எகிப்து தன்னால் இயன்றதையெல்லாம் செய்யுமென்றும், எகிப்துக்கு ஆக்கிரமிப்பு எண்ணம் கிடையாதென்று நினைக்கப் போதுமான ஆதாரம் இருக்கிற"தென்றும் அந்த பிரிட்டிஷ் தஸ்தாவேஜில் காணப்படுகிறது!

இஸ்ராயீலைப்பற்றி அந்த தஸ்தாவேஜ் என்ன கூறுகிறதென்று பார்ப்போம் :

"இஸ்ராயீல் சமாதானக் கொள்கையைக் கடைப் பிடிக்கும் என்ற நம்பிக்கை நமக்குச் சிறிதும் கிடையாது."

[கர்னல் அப்துல் நாஸிர் நிகழ்த்திய இரண்டாவது சொற்பொழிவு அடுத்த இதழில் வரும்.]

தங்கத்தினால் செய்த பட்டாக் கத்திகள் பரிசு!

இந்தியாவுக்கு அரேபியா மன்னரின் அன்பளிப்பு

இவ்வருடத் துவக்கத்தில் சவூதி அரேபியாவின் மன்னர் இந்தியாவுக்கு விருந்தினராக வந்திருந்தாரல்லவா? அப்போது அவர் தமது நாட்டின் வீரத்துக்கும் நட்புறவுக்கும் அடையாளமாக மூன்று தங்கப் பட்டாக் கத்திகளையும். ஒரு தங்கக் குத்து வாளையும் இந்தியாவுக்கு அன்பளிப்பாக வழங்கியிருக்கின்றார் இந்தியப் பிரதமர் பண்டித நேருவுக்கு ஒரு பட்டாக் கத்தியும், ஒரு குத்து வாளும் கிடைத்திருக்கிறது. துணைத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு ஒரு பட்டாக் கத்தியும், மத்திய அரசாங்கக் கல்வியமைச்சர் மௌலானா அபுல்கலாம் ஆஸாதுக்கு மற்றொரு பட்டாக் கத்தியும் அரேபிய மன்னர் தமது அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

வேலைப்பாடு நிறைந்த, தங்கத்தினால் செய்யப்பட்ட இந்த நான்கு கத்திகளும் இந்தியாவின் தேசியப் பொருட்காட்சி நிலையத்தின் கலைப்பொருள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவைகள் நம் தேசப் பொது உடைமையாக இருக்கும்.

இந்த அன்பளிப்புக்குச் சரித்திர முக்கியத்துவம் எதுவுமில்லையாம். ஆனால் தொன்றுதொட்டு இந்நாட்டுடன் கலாசாரத் தொடர்பு கொண்டுள்ள அராபியர்களின் நட்புறவுக்கும் நல்லெண்ணத்துக்கும் இத்தங்க வாட்கள் தகுந்த சின்னமாக விளங்குமாம்!

[வணிகத் துறையை நாடி வெளி நாடு சென்றான் கணவன். சென்ற இடத்தில் சென்று விட்டது அவனது உள்ளம், மற்றொரு நங்கையின்மீது! இதையறிந்த மனைவி காட்டுகிறாள் தன் உள்ளக் குமுறலை ஒரு நீட்டோலையில் தீட்டி!]

அன்பே! ஆருயிரே!
ஆரம் இட்ட என் நாதா!
உரிமை பெற்ற உம் மனைவி
உங்களுக்கு எழுதுகிறேன்.

என்னை மறந்தீரோ,
ஏன் கொண்டீர் இக்கோலம்?
மனதில் இருப்பதென்ன
மாலையிட்ட மன்னவரே ?

நானொருத்தி இங்கே,
நனைந்த இரு கண்களுடன்,
வீற்றிருப்பதை மறந்து,
வீண் காலம் கழிப்பது ஏன் ?

பலர் சொல்லக் கேட்டேன் நான்
பழி சொல்லவில்லை யானும்,
உள்ளதைக் கேட்குகிறேன் ;
உண்மையைக் கூறிடுங்கள்,

'என்னிடத்தை யாரோ
எட்டிப் பிடித்து விட்டார்'
என்றெல்லாம் சொல்லுகிறார்,
என் உள்ளம் உருகின்றதே !

வாழ்க்கைப்பட்டு நானிருக்க
வழியில் வந்த பெண்ணவள் யார்?
தோழிபோல் இருந்து எந்தன்
தொடர்பை அறுப்பவள் யார் ?

ஆரணங்கோ, பேரழகோ ?
அன்னம்போல் நடையழகோ ?
என்னிடத்தில் இல்லாத
எதை நீர்தாம் கண்டு கொண்டீர்?

படிப்பைக் கண்டு மயங்கினீரா?
பகட்டைக் கண்டு சொக்கினீரா ?
வெளிவேஷ மேல் மினுக்கு
வீணில் ஏன் மது மயக்கம் ?

கிள்ளை மொழியிசையும்,
கிளர்ச்சி செய்யும் புன்னகையும்
தளர்ச்சி செய்ய வைத்ததுவோ ?
தளரா நெஞ்ச என் மகிபா !

அநியாயம், அடுக்காது,
அன்பரே கூறுகின்றேன் :
(என்) உள்ளத்தை இரு கூறு
இணைவைக்க நான் சகியேன் ?

ஊருக்கு உபதேசம்
உங்களுக்குத்தான் இல்லையோ ?
காலேஜுப் படிப்பும்.
கலைஞர் குழு நல்லுறவும்,
எங்குதான் சென்றதுவோ ?
எடுத்தியம்ப வேண்டுகின்றேன்
ஏனிந்த மோன நிலை?
என்னைக் கொல்லும் துயர நிலை ?

ஆயிரம் பேரழகு நீர்
அவளிடத்தில் கண்டாலும்,
என் உள்ளத் தூய்மை
எதிலேயும் கண்டதுண்டா ?

உறவிலே வந்தவள் நான்.
உங்களை(யே) நம்பியிருக்கேன்.
உயிராக நினைத்திருக்கேன்.
உள்ளத்திலே வடித்திருக்கேன்.

தமிழ் நாட்டு நற்பண்பும்,
தனித்த நம் குலப் பண்பும்,
குழி புதைந்து போகாமல்,
குணக் குன்றே—நடந்திடுங்கள்.

ஊருக்கொரு பெரியார்
உம் தந்தை—என் மாமா—
உண்மை தெரிந்து விட்டால்
உடைந்துவிடும் அவர் உள்ளம்.

மாணிக்கம் என் மாமி
மதி விளக்காம்—உம் அன்னை
நீர் வழிய வழியனுப்பி
நின்ற நிலை மறந்தீரோ ?

பெற்ற மனம் குமுறுதோ ?
பெரிய உங்கள் செயல் நினைந்து,
சுற்றத்தார்—என் வீட்டார்
சுடு சொற்கள் வீசாரோ ?

ஆசைக் கனலை உடன்
அழித்திடுங்கள்- பொறுமையினால்,
களங்கத்தைப் போக்கிடுங்கள்;
கவலையை நீக்கிடுங்கள்.

கன்னி இங்கே காத்திருக்கேன்,
கள்ளியை விரட்டிடுங்கள்
கண்ணியம் போய் விடாமல்
காப்பாற்ற வேண்டுகின்றேன்.

நீண்ட என் பெருமூச்சு
நீட்டோலை யாயிடுத்து.
குற்றங்கள் கண்டாலும்
கொற்றவரே மன்னியுங்கள்.

இக்கடிதம் கண்டவுடன்
என் மனம் களித்திடவே
இனிய பதில் எழுதிடுங்கள்
இருபாதம் நணக்கின்றேன.

—இபு. அல்கார்.

ஜஹறான்-ஆரா பேகம்

எஸ். எஸ். அப்துல்லா, பீ. ஏ.,

" என் மஃபராவில்
எதையும் தூவாதீர் ;
பசுமையான புல்லே
போதும் எனக்கு ;
என்னைப் போன்ற
எளியோர்க்கு
ஏற்ற காணிக்கை
அதுதான் !"

"உலக வாழ்வில் உயர்ந்தோர் தாழ்ந்தோரென்றும், மேலோர் கீழோர் என்றும் இருக்கலாம். சாவின் முன்னர் அனைவரும் சமம்தானே" என்று முதிரா அனுபவங்கொண்ட மக்கள் பேசுவதைக் கேட்கின்றோம். ஆனால் இது எல்லாருடைய வாழ்விலும் உண்மையாக விளங்கவில்லை. "சாவுதான் சில மாநிலத்தின் மணி விளக்கங்களை மக்களுக்கு நன்கு அறிமுகப் படுத்தி வைக்கிறது" என்ற உண்மையை மேலே தரப்பட்டிருக்கும் கவிதையடிகள் ஆதரித்து நிற்கின்றன.

இந்திய வரலாற்றில் மொகல் மன்னர்களின் காலத்தைப் பொற்காலமென வருணிக்கலாம். மேதினியிலுள்ள மஹல்களுக்கெல்லாம் 'தாஜ்' என்றும், கட்டிடங்களுக்கெல்லாம் கிரீடமென்றும் பலவாறு பாராட்டப்படும் தாஜ்மஹல், ஆரணங்கென ஆடிப்பாடி நெளிந்து செல்லும் அழகிய ஜமுனாவின் பளிங்குக் கரையோரத்திலே கட்டப்பட்டது அக்காலத்திலே தான். அந்த எழிலோவியத்தைக் கட்டியவர் மாமன்னர் ஷாஜஹான் ! கட்டிடப் பிரியரான அக்காவலரின் அருமந்த மகள்தாம் **ஜஹறான்—ஆரா பேகம்.**

ஜஹறான் ஆரா, காதலுக்கும் கலைக்கும் இறவாத புகழை வாங்கிக் கொடுத்த மும்தாஜ் மஹல், ஷாஜஹான் இருவருக்கும் அழகு மகளாக 1614 ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ந் தேதியன்று பிறந்தார். ஜஹறான்-ஆராவின் பிறப்பு, மன்னர் ஷாஜஹானுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை வழங்கியதற்கு மற்றொரு காரணமிருந்தது. ஷாஜஹான் அப்பொழுது சிம்மாசனம் ஏறவில்லை. ஜஹாங்கீர் அரசர் ஆட்சி செய்துகொண்டிருந்த காலம். இளவரசர் குர்ரமாக இருந்த ஷாஜஹான், ராஜபுத்திரர்களின் வீரம் படைத்த தளபதி ராணு அமர்சிங் என்பவரைத் தோற்கடித்தார். ஜஹறான் ஆராவின் பிறப்பும், ஷாஜஹானின் வெற்றியும் அடுத்தடுத்து நிகழ்ந்ததால் ஜஹறான் ஆரா அளவு கடந்த பிரியத்துடன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கப்பட்டார்.

கல்வி கற்பதில் பேரார்வம் காட்டியவர்கள் மொகல் மன்னர்கள். ஆட்சி அலுவல்களின்

தொல்லைகளினின்றும் தப்புவதற்காகச் சில வேளைகளில் நூல் நிலையங்களில் மறைந்து காவியங்களை ரசித்தவர்களல்லவா அவர்கள்? எனவே, ஜஹான் ஆராவுக்குச் சிறந்த முறையில் கல்வி புகட்டப்பட்டது. கல்வி போதனைக்கென ஆசிரியர்க் குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஜஹான்-ஆராவுக்குத் தனிமையில் போதிப்பதற்கென 'ஸாதி-உன்-னிஸா' என்னும் பெண்மணி நியமிக்கப்பட்டார். அவர் கல்வியறிவில் மட்டுமின்றி, மார்க்க பக்தியிலும் தலைச் சிறந்தவராக விளங்கினார்; ஜஹான்-ஆராவின் அருமைத் தாய் மும்தாஜ் மஹலின் நம்பிக்கைக்குரிய நல்லாளாக உயர்ந்தார். எனவே ஜஹான்-ஆராவின் செவிலித் தாயென மாறி, செல்லமாகவளர்த்துத் தம்மிடமிருந்த உயரிய கல்வியமுதையெல்லாம் நாள்தோறும் அள்ளி வழங்கினார். இத்தகைய சூழ்நிலையில் வளர்ந்துவந்த ஜஹான்-ஆரா, தன் பாட்டனாரின் நீதி நெறி வழுவாத நேர்மையான தீர்ப்புக்களையும், அவர் மனைவி நூர்ஜஹானின் ஆட்சித் திறமையினையும் நேரடியாகக் காண முடிந்தது. தன் மூதாதையரின் பெருமைகளுக்கேற்ப தாமும் புகழேணியில் ஏற வேண்டுமென விரும்பிய ஜஹான்-ஆரா, தாய் தந்தையரிடம் அளவிலா அன்பும், இறைவனின் வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடும் கொண்டு வாழ்ந்து வந்தார்.

ஜஹான்-ஆராவுடன் பிறந்தவர்கள் பதினான்கு பேர். ஜஹான்-ஆராவின் மூத்த சகோதரி இறந்துவிட்டார். எனவே, இவர்தான் சகோதர சகோதரிகளுக்கெல்லாம் மூத்தவராக இருந்தார். ஷாஜஹான் சிம்மாசனமேறியவுடன், மும்தாஜ் மஹல், தன் பிரிய மகள் ஜஹானாராவின் அறிவு நுட்பங்களை உணர்ந்து, அரசியல் விஷயங்களில் தமக்கு உதவியாயிருக்கும்படி வேண்டிக் கொண்டார். பொறுப்பான வேலைகளையும் ஒப்படைத்தார். அப்பொழுது அவருக்கு வயது 14. இவ்வாறுக அரசியலில் அவருக்கு நல்ல பயிற்சி கொடுக்கப்பட்டது.

ஷாஜஹான் ஆட்சி பீடம் ஏறியபின் மூன்றே ஆண்டுகளில் மும்தாஜ் மஹல் இறந்து விட்டார். இச்சம்பவம் ஜஹான்—ஆராவின் திறமைகளைக் காண தேர்வு நடத்துவதுபோல அமைந்தது. காதலியை இழந்து கண் கலங்கி கதறித் துடிக்கும் ஷாஜஹான், ஆட்சியை மட்டுமில்லாமல் உலகையே மறந்து, துக்கக் கடலில் துவண்டு கிடந்தார். ஆட்சியோ அல்லோல கல்லோலமாக இருந்தது. தந்தைக்கு ஆறுதளிப்பதும், நாட்டில்ஒழுங்கான அமைதியான நல்லாட்சி நடத்துவதும் ஜஹான்-ஆராவின் பொறுப்பாயிற்று. இந்நேரத்தில் தான் ஜஹான் ஆரா, ஷாஜஹானைவிட நூறு மடங்கு ஆளும் திறமை தம்மிடமிருந்ததை நிரூபித்துக் காட்டினார். மனைவியை இழந்து மனமுடைந்து வாழ்ந்த ஷாஜஹான், ஜஹான் ஆராவின் ஆறுதல் மொழிகளையும், ஆட்சித் திறனையும் கேட்டுச் சிறிது

சிறிதாகத் தன் கவலையைக் குறைத்துக் கொள்ள முயன்றார்; மும்தாஜின் நினைவுச் சின்னமான—தாஜ்மஹலை எழுப்புவதிலும், தம் குழந்தைகளைக் கண்காணிப்பதிலும் தன் காதலியின் பிரிவை மறந்து கொண்டிருந்தார். இந்நேரத்தில் ஜஹான்-ஆரா மக்களுக்குச் செய்த நன்மைகளையும், தொண்டுகளையும் வரலாற்றாசிரியர்கள் 'தவுரே ஷாஜஹானி' போன்ற நூலகளில சிறந்த முறையில் எடுத்துக் காட்டத் தவறி விட்டார்கள். முடிசூடா மகாராணியாக இருந்து, தந்தையின் ஆட்சியைத் தாமே ஏற்று நடத்திய ஜஹான்-ஆரா வெகு சொற்ப காலத்தில் கோடி கோடியான மக்களின் அன்பையும் உள்ளங்களையும் கொள்ளை கொண்டு விட்டார்.

ஆனால் திடீரென 1644-ம் ஆண்டு ஒரு தீ விபத்தில் அகப்பட்டுத் தீக் காயங்களுடன் நோய் வாய்ப்பட்டார் ஜஹான் ஆரா! அப்பொழுது தான் தந்தை ஷாஜஹானும், அரண்மனையிலிருந்தோரும், சகோதரர்களும், நாட்டு மக்களும் ஜஹான்-ஆராவிடம் வைத்திருந்த அளவிடமுடியாத அன்பு வெளிப்பட்டது. நாடே திரண்டு வந்து ஜஹானாராவின் உடல் நிலையைக் கேட்கவாரம்பித்தது. ஷாஜஹானே தம் மகளின் தீக் காயங்களுக்கு மருந்து கொடுக்கும் திறமையான டாக்டராக் மாறினார்; தம் மகளின்ருகே நாள் முழுவதும் நின்று மருந்து கொடுத்தார்; தம் கைகளாலேயே உணவுகளை ஜஹான் ஆராவுக்கு ஊட்டி வந்தார். கவர்னகளாகப் பணியாற்றி வந்த அவ்ரங்கரும், முராதும் சகோதரியைக் காண ஆக்ராவுக்குப் பறந்தோடி வந்தனர். இளவரசியின் நோய் நீங்க நாடு முழுவதும் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. கோடி கோடியான நாணயங்கள் ஏழைகளுக்குத் தானமாக வழங்கப்பட்டன. சிறைக் கைதிகளெல்லாம் விடுதலையளிக்கப்பெற்றனர். உலக மருத்துவ நிபுணர்களெல்லாம் அழைக்கப்பட்டு ஆலோசனை கேட்கப்பட்டது. இவ்வளவும் வீண் போகவில்லை. இறைவனின் அருட்கொடையால் ஜஹான்-ஆரா குணமடைந்தார்.

ஜஹான்-ஆரா குணமடைந்த நற்செய்தி நாடெங்கும் கொடிப் பொழுதில் பரவியது. நாடெல்லாம் மக்கள் மகிழ்ச்சிக் கூத்தாடினர். தந்தை ஷாஜஹான் இன்ப வெள்ளத்தில் நீந்தி தத்தளித்தார். ஏராளமான பணம் மக்கா மதீனா ஆகிய நகரங்களுக்கு அனுப்பி, ஏழைகளுக்கு தானமாக வழங்க உத்திரவிடப்பட்டது. உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் வரவழைக்கப்பட்ட வைத்திய நிபுணர்களுக்குப் பொன்னும் மணியும் வாரி வாரி இறைக்கப்பட்டது. இவ்வாறாக ஒரு வெற்றி விழாவே கொண்டாடப்பட்டது.

ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் ஜஹான் ஆராவின் மேல் ஆதாரமற்றதொரு பழியைச் சுமத்துகிறார்கள். ஜஹான் ஆரா, தம் சகோதரரான தாராவுக்கு ஆதரவாகயிருந்ததற்கு, தம்மைத் திருமணம் செய்து வைப்பதாக தாரா வாக்களித்திருந்ததே கார

ணமெனக் கூறுகிருர்கள். இது உண்மைக்கு மாருனது; ஆதார மற்றது. சகோதரர்களில் மூத்த வர் தாரா. அவருக்கு 'ஷா புலந்-இக்பால்' என்ற பட்டம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் 1657-ல் ஷாஜஹான் நோய் வாய்ப்பட்டபோது தன க்கு வாரிசாக தாரா இருக்க வேண்டுமென ஷாஜஹான் தம் விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டார். இத்தகைய கார ணங்களால் அரச விவகாரங்க ளில் ஜஹான் ஆரா தாராவை ஆதரித்து நின்றது நியாயமான தேயாகும். மும்தாஜ் பேகம் இறந்ததும் மூத்த மகளான ஜஹான் ஆரா தான் எல்லா சகோதரர்களேயும் வளர்க்கும் பொறுப்பை ஏற்றிருந்தார். அப் பொழுதெல்லாம் அவர் நேர்மை வழுவாது அன்புடன் நடந்து கொண்டார். அவரே, தாரா, ஷுஜா இருவருடைய திருமணங் களேயும் சிறப்பான முறையில் நடத்தி வைத்தார். இத்தகைய ஒருவர் தன்னுடைய திருமணத் துக்காகத் தம்பியின் உதவியை எதிர்பார்த்தார் என்பதுடண்மை யல்ல.

ஆனுலும் ஆட்சியைக் கைப் பற்றுவதில் போரிட்டுக் கொண்ட சகோதரர்களிடையே ஓர் உடன்பாடு செய்து வைக் கும் பெருமுயற்சியில் ஜஹான் ஆரா வெற்றியடைய முடிய வில்லே. அரும்பாடுபட்டு அமைக் கப்பட்ட மொகல் பேரரசு, சகோதரர்களின் போராட்டத் தால் பலமிழப்பதை அறிந்து வருந்திஞர். சகோதரப் பூச லேத் தீர்க்க முடியாத தோல்வி யைத் தன் தோல்வியாக அவர் கருதவில்லே. மொகல் சாம்ராஜ் யத்தின் தோல்வியாகவே அவ ருக்குத் தெரிந்தது. இவ்வாறு மனமுடைந்த ஜஹான் ஆரா, சகோதரர்களால் ஆக்ரா கோட் டையில் அடைத்து வைக்கப் பட்டிருந்த தந்தை ஷாஜஹானு டன் வாழ விரும்பிஞர். தந்தை யை விட்டுப் பிரிய அவர் இறுதி வரை சம்மதிக்கவில்லே. ஷாஜ ஹானேப் பிடித்துச் சிறைப்படுத் தியவர் அவ்ரங்கஜேப். இது பதவியாசையால், அறியாமை யால் செய்யப்பட்டது என்பதை ஜஹான் ஆரா தந்தைக்குச் சொல்லி ஆறுதல் கூறிவந்தார். குழந்தைகள் செய்யும் குற்றத் தை மன்னிப்பது தந்தையின் கடமையென்பதை மெல்ல மெல்ல கனிவுடன் கூறி ஷாஜ ஹான் இறப்பதற்கு முன் அவ ரிடமிருந்து அவ்ரங்கருக்காக, எழுத்து மூலமாய் மன்னிப்பை வாங்கிக் கொடுத்தார்.

ஷாஜஹானின் மரணத்தின் பின்னர் டில்லிக்கு வந்து தம்மு டன் இருக்கும்படி அவ்ரங்கர் கூறிஞர். ஆனல் ஜஹான்-ஆரா, ஒப்புக் கொள்ளவில்லே. தாரா, முராது இருவரையும் இழந்த அவர்களின் பெண் குழந்தைகள் அனதையாக இருப்பதையறிந்து அவர்களே வளர்த்துவரும் பொறு ப்பை ஏற்றுக் கொண்டார். சகோதரப் பூசலேக் குறைக்கவும் மறைக்கவும், தாராவின் மகளே, அவ்ரங்கின் மகனுக்கு மண முடித்து வைத்தார்.

இளகிய இதயம் படைத்த ஜஹான் ஆரா சிறைக் கைதிக ளிடம் அன்பாக நடந்து கொண் டார். ஒருமுறை 'பல்க்' சமஸ் தானத்தின் அரசிகளும் பெண்க

ளும் கைதிகளாகக் கொண்டு வரப்பட்டபோது அவர்களை மரியாதையுடன் வரவேற்றுபசரித்தார். ஆதரவற்ற அனுதைகளாக இருந்த பெண் கைதிகளை முகல் ராஜ்யத்தின் மந்திரிகளுக்கு மணமுடித்து வைத்தார். அழகிய மசூதிகளையும், அகன்ற முசாபரி பங்களாக்களையும் நாட்டு மக்களின் நலனுக்கென ஏராளமாகக் கட்டியிருந்தார். டில்லியிலிருந்த (இன்றில்லை) 'காரவான் ஸராயி'ல் அழகான பூங்காவும், நீர்த் தொட்டிகளும், சாலைகளும் சோலைகளும் இருந்தனவென்றும், ஐரோப்பியர்கள் அதை வெகுவாகப் பாராட்டினரென்றும் சொல்லப்படுகிறது. இதே போல், லாஹூரி பஸார், (இப்பொழுதில்லை), டில்லியிலிருக்கும் மல்காபாக், ஆக்ராவிலுள்ள ஜமா மஸ்ஜித், ஆஜம்கார் ஸராய் முதலியன ஜஹானாரா பேகமால் கட்டப்பட்ட கலைச் சின்னங்களாகும்.

ஜஹானாரா மணமாகாமலேயே 1681-ம் ஆண்டில் தமது 67 ஆம் வயதில் கல்லறையில் புகுந்தார். இந்தியத் தலைநகராம் டில்லியில் குவாஜா நிஜாமுத்தீன் அவ்லியாவின் சமாதிக்கருகில் இன்றும் ஒரு அழகிய மஃபரா உள்ளது. அதன்மேல் செதுக்கப்பட்டுள்ள கவிதையை இயற்றியவர் ஜஹானாராவே. அவர் இறக்கும் முன்னர் அக்கவிதையைத் தன் மஃபராவில் எழுதும்படி வேண்டிக் கொண்டார்; அவ்வாறே அது அங்கே பொறிக்கப்பட்டுள்ளது!

புருகா லாட்ஜ்

(முதுகுளத்தூர்)

81, அரண்மனைக்கார தெரு,
மதராஸ்—1.

அன்பர்களுக்கோர்
விண்ணப்பம்!

குறைந்த கட்டணத்தில் நிறைந்த வசதிகள். சிறந்த காற்றோட்டத்துடனும் நல்ல சூரிய வெளிச்சத்துடனும் கூடிய விசாலமான அறைகளைக்கொண்டு சுகாதார வசதியுடன் அமைந்துள்ளது எங்கள் விடுதி. மின்சார உதவி கொண்டு 24 மணி நேரமும் தண்ணீர் வசதி அளிக்கிறோம். தாய் நாடு விட்டு வெளிநாடுகளுக்குச் செல்லும் வெளி நாடுகளிலிருந்து தாய் நாடு திரும்பும் பிரயாணிகள் நலன்களைக் கவனிப்பதில் அதிக கவனம் செலுத்துகிறோம். சேவையே எங்கள் இலட்சியம். ஒருமுறை தங்கிப் பலன் காணுங்கள்!

மை. ச. அப்துல் காதர்,
உரிமையாளர்.

கேள்வி? பதில்!

[ஒவ்வொரு நாளும் ஏராளமான அன்பர்கள் கேள்விக் கடிதங்கள் வரைகின்றனர் எல்லாருடைய கேள்விகளுக்கும் ஒரே இதழில் பதில் அளிப்பது எளிதல்ல. ஒரே கேள்வியை அநேக அன்பர்கள் கேட்கின்றனர். ஆகையால், பதில் அளிக்கப்படாத கேள்விகளை நாம் மதிக்கவில்லை என அன்பர்கள் தவருக நினைக்கவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். புனை பெயருடன் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிக்க வியலாது—ஆசிரியர்.]

எஸ். எம். அலீ, அபிராமம்.

விநோபா பாவே ஒருவரின் உடைமையில் ஆறில் ஒரு பங்கு தானம் கேட்கிறார். இஸ்லாம் நாற்பதில் ஒன்று வீதம் தானம் (ஜகாத்) கொடுக்கவேண்டுமென்கிறது. இஸ்லாத்தைவிட விநோபா பாவேயின் திட்டம் முற்போக்கானதாக இல்லையா?

இருக்க முடியாது. ஒருவரின் உடைமையில் ஒவ்வொரு வருடமும் நாற்பதில் ஒரு பங்கு கட்டாயமாக 'ஜகாத்' கொடுக்க வேண்டுமென்பது இஸ்லாமிய சட்டம். ஆனால் விநோபா ஒரே தடவையில் ஆறில் ஒன்று கொடுக்கவேண்டுமென்கிறார். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இஸ்லாமிய சட்டம்தான் முற்போக்கான திட்டம் என்பதை அறியலாம்.

ஏ. முனவ்வர் ஹுஸைன், மேட்டுப்பாளையம்.

தட்சிணப் பிரதேசம் ஏற்படுமா?

பண்டித நேரு இந்தியாவின் சர்வாதிகாரியாக மாறினால் ஏற்படும்.

பி. சிற்றரசு, சென்னை—14.

முன்பு (பத்து வருடங்களுக்கு முன்) ஹிந்தியைக் கட்டாயமாகத் தமிழ் நாட்டில் திணித்துக் கடுமையான எதிர்ப்பையும் சமாளித்த ராஜாஜி இப்பொது ஏன் ஹிந்தி இந்நாட்டின் ஆட்சி மொழியாவதைக் கடுமையாக எதிர்க்கிறார்?

ஹிந்தியை இந்தியா முழுதும் ஆட்சி மொழியாக்குவதில் மத்திய ஆட்சிக்கு அபாயம் இருக்கிறதென்பதை ராஜாஜி தெளிவாகக் காண்கிறார். வருங்காலத்தில் இந்தியா பல தனி அரசுகளாகப் பிரிந்து போவதற்கு இந்த மொழிப் பிரச்னையே முதற் காரணமாக அமையப் போகிறது. இந்தியா ஒரே நாடாகவும் ஒற்றுமையாகவும் இருக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன்தான் "ஹிந்தி வேண்டாம்; ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருக்கட்டும்" என்று ராஜாஜி கூறுகிறார். ஆனால் ஹிந்தி வெறியர்களுக்கு ராஜாஜியின் கருத்தைப் புரிந்து கொள்ளும் புத்தி நுட்பம் கிடையாது.

எம். ஏ. வாஹித், கூத்தாநல்லூர்.

சில மாதங்களுக்கு முன் புதுடில்லியில் கோல்வால்கருக்கு அளிக்கப்பட்ட பிரமாத வரவேற்பையும், பணமுடிப்பையும் கண்டபோது நேரு என்ன நினைத்திருப்பார்?

தினக்குப் பிறகு தன் பதவிக்கு வர ஒரு விரும்பத்தகாத வாரிசு வந்து விட்டாரே என்று நினைத்துக் கவலைப்பட்டிருப்பார்.

எஸ். முஹம்மது காசிம், மாயவரம்.

ஆண்டுதோறும் காமன் வெல்த் நாடுகளின் பிரதமர்கள் மாநாடு கூடுவதால் ஏற்படும் உருவான பலன் என்ன?

ஒரு அழகான குருப் போட்டோ!

ஏ. ஹபீபுர் ரஹ்மான், நெல்லிக்குப்பம்.

ஈரோட்டுப் பெரியாரின் ரயில் நிலைய ஹிந்திப் பெயரழிப்புப் போராட்டத்தினால் விளைந்த பலன் என்ன ?

ஹிந்தி அறவே அழிக்கப்படாமற் போனாலும், பெயர்ப் பலகைகளின் மொழிகள் இடம் மாறியிருப்பதே அவருக்குப் பெரிய வெற்றிதான். சர்க்கார் ஒப்புக்கொள்ள வெட்கப் படும் தோல்விகளில் இதுவும் ஒன்று.

தி. மு. க. நடத்திய கல்லக்குடி போராட்டம் எந்த அளவிற்கு வெற்றி பெற்றது ?

சமீபத்தில் நடைபெற்ற தி. மு.க. 2வதுமாநில மாநாட்டில் ஒன்றரை லட்ச ரூபாய் இலாபம் கிடைத்தி ருக்கிறது !

எம். ஏ. கரீம், கொழும்பு.

சென்ற ஜூன் மாதம் வரையில் கேள்வி — பதில்களுக்கு எட்டு ரூபாய் மட்டுமே அன்பளிப்பு வழங்கினீர்கள். ஜூலையில் ஏன் ஒரு ரூபாய் அதிகமாக்கியிருக்கி றீர்கள் ?

முஸ்லிம் முரசுக்கு ஜூலையிலி ருந்து ஒன்பதாம் ஆண்டு உதய மாகியிருப்பதால்தான்.

இ. அன்சாரி, மேலக்காவேரி.

ஒருவன் தன் மனைவிக்குத் 'தலாக்' தந்தபின், மீண்டும் அவளை அடைய விரும்பினால், அம்மங்கை மற்றொருவனை மணந்து அவனிடம் விவாக விடுதலை பெற் றால்தான் முன்னவனை மீண் டும் மணக்கலாம் என்று இஸ்லா மிய சட்டம் கூறுவதேன்?

விவாக ரத்துக்குப்பின் மீண்டும் கூடுவதற்கிடையே இத்தகைய சிக்கலான முறைகள் விதிக்கப்பட வில்லையானால் தம்பதிகளிடையே திருமணமும் பிரிவினையும் வெகு வாக அதிகரித்துவிடும். மீண்டும் அவளை அடைந்துவிடலாமென்ற எண்ணத்தில், சிறு சிறு தவறுக ளுக்கெல்லாம் மனைவிகளுக்குத் 'தலாக்' கொடுக்க ஆரம்பித்து விடு வார்கள். இன்று மேல் நாடுகளில்

சினிமா ஸ்டார் போட்டோ படங்கள்

(CINEMA STAR PHOTOES)

எல்லா சினிமா நக்ஷத்திர நடிக, நடிகைகளின் அழகான புரோமைட் போட்டோ படங்கள் கீழ்க்கண்ட அளவுகளில் கிடைக்கும்.

கேபினெட் சைஸ்	($6\frac{1}{2}'' \times 4\frac{1}{2}''$)	டஜன் ரூ.	6—0—0.
கார்டு சைஸ்	($5\frac{1}{2}'' \times 3\frac{1}{2}''$)	டஜன் ரூ.	4—8—0.
குவார்டர் சைஸ்	($4\frac{1}{4}'' \times 3\frac{1}{4}''$)	டஜன் ரூ.	3—0—0.
2 B சைஸ்	($3\frac{1}{2}'' \times 2\frac{1}{2}''$)	டஜன் ரூ.	1—8—0.

வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன் உண்டு. சாம்பிளுக்கும், மற்ற விபரங் களுக்கும் இரண்டணு (சிலோன் 15 சதம்) ஸ்டாம்புடன் எழுதவும்.

எம். ஜி. ராஜன் & கம்பெனி (M. M.)

தபால் பெட்டி 1693, சென்னை—1.

நாள் தோறும் ஆயிரக் கணக்கான விவாக விலக்குகள் நடைபெறுகின்றன. இந்த அளவிற்கு இஸ்லாமிய உலகில் மணவிலக்குகள் நிகழ்வதில்லை. இதற்குக்காரணம் விவாக விலக்குப்பற்றி இஸ்லாமிய சட்டத்திலுள்ள இக்கடுமையான நிபந்தனைதான்.

மு. இ. லெ. மு. தாஜுத்தீன், வத்தள, (இலங்கை)

உண்பதற்கு ஆகுமான பிராணிகளை துப்பாக்கியால் வேட்டையாடும்போது, தக்பீர் சொல்லி சுட்டால் போதுமா? அவை சுடுபட்டு இறந்தபின் உண்ணலாமா ?

சுடுபட்டுக் கீழே விழுந்ததும், உடனே அப்பிராணியை தக்பீர் சொல்லி அறுத்துவிட வேண்டும். சுடுபட்டவுடனேயே அது இறந்து விடுவதிலலை; அதன் இரததமும் உறைந்து விடுவதில்லை. எனவே அதை முறைப்படி அறுத்தால் இரத்தம் வெளிவந்து விடும். இரத்தம் நீங்காத பிராணியை உண்ணக் கூடாது.

ஏ. எஸ் எம். கே. முஹ்யித்தீன், ஏருவாடி.

தக்கலை பீர் முஹம்மது ஒலியுல்லா, மஸ்தான் ஸாஹிபு போன்ற எத்தனையோ இஸ்லாமியப் பெரியார்கள் பிரம்மசாரியாக இருந்ததன் காரணமென்ன ? இவ்வகையில் இவர்கள் திருநபியவர்களைப் பின்பற்றத் தவறியதேன்?

இவர்கள் திருமணத்தை வெறுக்குமளவுக்கு உலகப்பற்று இல்லாதவர்கள். இல்லற வாழ்க்கையில் ஏற்படும் தீமைகளுக்குப் பயந்து பிரம்மசாரியாய் இருப்போரைவிட இல்லறத்தில் புகுந்து, நெறி தவறாமல் நடப்பவர்களே சிறந்தவர்கள். இவ்வகையில் மேற்கூறிய பெரியார்கள் குறையுள்ளவர்கள் தான்.

எம். ஓய். அப்துல் வஹ்ஹாப், ஐயங்கொண்டசோழபுரம்.

நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் பகல் நேரத்தில் விரோதிகளின் கொடுமைக்குப் பயந்து லுஹர், அஸர் தொழுகைகளை மௌனமாக நடத்தினார்கள். தற்காலத்தில் மற்ற நேரங்களில் தொழுவதைப்போன்றே லுஹர், அஸர் தொழுகைகளிலும் உரத்த குரலில் கிராஅத் ஓதினாலென்ன ?

ஆரம்பகால முஸ்லிம்கள் இஸ்லாத்தின் விரோதிகளுக்குப் பயந்து இரண்டாவது மூன்றாவது நேரக் கூட்டுத் தொழுகைகளை மௌனமாகத் தொழுதார்கள் என்று கூறுவதற்கு ஆதாரமில்லை! கலப்பற்ற கற்பனை! அது உண்மையாக இருந்தால நான்காவது நேரத் தொழுகையான மஃரிபும் மௌனமாகவே நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

உரக்கத் தொழுவதிலும் நன்மைகளுண்டு. மௌனமாகத் தொழுவதிலும் சில நன்மைகள் உண்டு. இருவித நன்மைகளையும் றுவதற்காகவே இருமுறைகளையும்

எங்களூர் மத்ரஸா கட்டிட நிதிக்காக மலாயாவில் குவாங் தானிலுள்ள முஸ்லிம் சகோதரர்கள் ராஜகிரி, ஜனாப் என். ஏ. முஹம்மது அலீ அவர்கள் மூலம் ரூ. 360 அனுப்பியுதவினர். அதற்காக எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களுக்கு நல்லருள் புரியுமாறு இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,
முஸ்லிம் ஜமாஅத்,
முருக்கங்குடி
(தஞ்சாவூர் ஜில்லா)

கையாளும்படி விதிக்கப்பட்டுள்ளது.

ஏ, ரஜாக், வலங்கைமான்.

காப்பியும், டீயும் குடித்தால் மூளைக்கும் உடம்புக்கும் சுறுசுறுப்பு ஏற்படுகிறதென்று சிலர் சொல்லுகிருர்கள். சுறுசுறுப்புக்கு வேறு ஏதாவது வழி இருக்கிறதா ?

காப்பியும் டீயும் அறவே குடிக்காத நண்பரொருவர் மாசம் ஒரு புத்தகம் எழுதி முடிக்கிருர் ! இவருக்கு எப்படித்தான் இவ்வளவு வேகமும் விருவிருப்பும் உண்டாகிறதோ! காப்பியும் டீயும் குடித்தால் தான் சுறுசுறுப்பு உண்டாகிறதென்பது பலர் விஷயத்தில் உண்மை தான். ஆனல் காபி, டீ குடித்த பின் சிலமணி நேரத்தில் சோர்வு வந்து விடும். மூளைக்குச் சுறுசுறுபபு உண்டாக, செலவில்லாத ஒரு வழியும் இருக்கிறது. மாலை நேரத்தில் ஒரு மைல் தூரம் வேகமாக நடந்து செல்லுங்கள். இரவில் மூளைக்கு வேலை கொடுங்கள். விளைவு எப்படியிருக்கிறதென்று எனக்கு எழுதுங்கள் பார்க்கலாம்.

என். பி. அப்துல் காதர், கடையநல்லூர்.

ஆரம்ப காலத்தில் மிக வேகமாய்ப் பரவிய இஸ்லாம் இப்பொழுது மெதுவாகப் பரவக் காரணமென்ன ?

நான்கு திசைகளிலும் இஸ்லாத்துக்கு எதிரிகள் அதிகமாயிருந்த அக்காலத்தில் முஸலிம்களும் தம் காப்பிற்காக உஷாராகவும் வீரமாகவும் இருந்தனர். இப்பொழுது இஸ்லாத்துக்கு எதிரிகள் முன் போல் அதிகமாக இல்லை. எதிரிகள் இல்லாமையால் போராடுதலும் இல்லை. பெரிய போராட்டத்துக்குப் பின் முஸ்லிம்கள் எடுத்துக் கொண்ட ஓய்வு நீண்ட உறக்கமாக மாறி விட்டது.

எஸ். பி. சின்னராஜ், ஆலந்தூர்.

பெரியார் ஈ. வெ. ராவை சிறையில் தள்ளும் தைரியம் காமராஜுக்கு உண்டா ?

உண்டு. ஆனல் காமராஜ் அளிப்பது பெரியாருக்குச் சிறையாக இருக்காது. சிங்காரப் பூங்காவாக இருக்கும் ! காமராஜ் ஆட்சியில் பெரியார் சிறையிலிருப்பதும் சொர்க்கத்தில் இருப்பதும் ஒன்றுதான் !

—" கமால் "

" மக்தூம் டீ " நல்ல டீ!

நாங்கள் புதிதாக வினியோகம் செய்திருக்கும் " மக்தூம் கோல்டன் ஸ்டார் டஸ்ட் டீ "யை கேட்டு வாங்குங்கள். இது எல்லா வகையிலும்—விலை உட்பட—உயர்ந்த டீ !

எங்களின் மதுரை ஏஜென்ட்
ஸ்ரீ எம். காந்தையயா,
33, மணிநகரம்,
மதுரை.

மக்தூம் அன் கோ,
தபால் பெட்டி நெ. 1769.
சென்னை-1.

ஆர். பி. எம். கனீ எழுதிய

ஹஜ்ரத் கௌதுல் அஃலம்
முதல பாகம் 5 0
,, இரண்டாம் பாகம் 3 0
,, மூன்றும் பாகம் 2 0
,, நான்காம் பாகம் 2 12
ஹஜ்ரத் குத்புல் ஹிந்த் 2 8
பாரசீகப் பெரும் கவிஞர்கள் 3 2
கஷ்புல் கஸ்ஸாலி 2 4
மிஷ்காத்துல் அன்வார் 1 4
சிறையிலிருந்து விடுதலை 1 4
அப்பகபவிய்யி 1 12
ரிஸாலா ஸதுத் தஸானிப் 1 0
மகாகவி இக்பால் 3 0

புதிய நூல்கள்

பாயி ஆண்டகை 2 0
எம்பெருமான் பேசுகிறார்கள் 2 0

சய்யத் இப்ராஹீம் சாஹிப்
எம். ஏ., எல். டி., எழுதிய
புதிய நூல்கள்

முஹம்மத் (ஸல்) 3 0
ஷி மலிவு பதிப்பு 2
கஸ்ஸாலி 1 0
ஸலாஹுத்தீன் 1 0
உத்தமர் உமர் 0 12
இமாம் அபூஹனீபா 0 10
ஹஸ்ரத் பிலால 0 10
இக்பாலின் முறையீடு 0 10
இஸ்லாமிய அரசாங்கத் திட்டம் 0 8

பிற நூல்கள்

குழந்தை வைத்தியம் 3 4
நீதி மன்றம் 0 12
இஸ்லாம் எப்படிப்பரவியது 0 10
அல்லாமாவின் அமுத மொழிகள் 0 6

தாருல் இஸ்லாம் ஆசிரியர்
அல்ஹாஜ் பா. தாவூத்ஷா
சாஹிப், பீ. ஏ., எழுதிய
இஸ்லாமிய நூல்கள்

இஸ்லாம் (படங்களுடன்) 11-ம் பதிப்பு 8 0
அம்மயத் (மொழி பெயர்ப்பு மட்டும்) 1 8
திருமணமும் பிரிவினையும் (நிக்காஹ், தலாக் சம்பந்தமான இஸ்லாமிய சட்டதிட்டங்கள் 2 8
நபிகள் நாயக மான்மியம் (விரிவான வரலாறு) முதற்பாகம் ரூ. 12 0
மஹான் முஹம்மது நபி (ஸல்) (சிறிய வரலாறு) 1 12
நாயகத்தின் நற்குணங்கள் 2 4
அபூபக்கர் (ரலி) சரிதை 2 0
உமர் (ரலி) .. 2 4
உதுமான் (ரலி) .. 1 8
அலீ (ரலி) ,, 2 4

எம். ஆர். எம். அப்துர்
ரஹீம் பீ. ஏ., எழுதிய
வாழ்வு முன்னேற்ற நூல்கள்

வாழ்க்கையில் வெற்றி! 2 8
எண்ணமே வாழ்வு 3 0
வாழ்வின் வழித்துணை 2 0
முன்னேறுவது எப்படி? 2 8
வழிகாட்டும் ஒளிவிளக்கு 1 8
வாழ்வைத் துவங்கு! 2 8
சுபிட்சமாய் வாழ்க! 2 8
கவலைப்படாதே! 2 8
வாழ்வது ஒரு கலை 2 4
வியாபாரம் செய்வது எப்படி? 3 0
மகனே கேள்! 2 0
அன்புள்ள தம்பி! 2 0

கிடைக்குமிடம் :

அன்பு நூல் நிலையம்,

18, ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை-1

Edited & Published by S. A. Shukoor. 18, Ramasamy Street. Madras-1
Printed by M. M. Thanigaimalai at the Sengunthar Mithran Press
Madras-1